ஜூன் '92 விலை ரூ. 5

அமுதசுரபி



எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே! — பாரதியார்

அமுதசுரபி

விலை ரூ. 5 ● ஜூன் 1992 ● ஆங்கிரஸ – ஆனி ● மலர் : 45 ● இதழ் : 2
● ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ● பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா
● கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி.சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.
● மேலட்டை வண்ணப்படம் : யோகா ● இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்

கிழவன் சேதுபதி	சாந்தினி	4
பிறந்த குழந்தையின் வளர்ந்த அறிவு	கர்மயோகி	9
சுமையாகும் சுமைதாங்கிகள்	இரா. கேசவமூர்த்தி	11
எழுத்தை அறிந்தால்	எம்.சோமஸ்கந்தமூர்த்தி	15
திரிபுவனம் திருபுவனவீரேச்வரம்	தாமரைக்கண்ணன்	16
மூலக்குரல்	நா.காமராசன்	24
தமிழில் தவறுகளை அறிவோம்	முத்துக்கண்ணப்பர்	25
முதலில்லா வியாபாரம்	குடந்தை புகழேந்தி	28
அது ஓர் இந்தியக் குழந்தை	நித்யா மூர்த்தி	29
உங்கள் ராசிபலன்	பாலஜோசியர்	33
கங்காபுரிக் காவலன்	விக்கிரமன்	39
25 ஆண்டுகளுக்கு முன்பு அமுதசுரபி	மாலதி நாகராஜ்	45
கத்தரித்து ஒட்டியது	நாடோடி	47
நட(ன)மாடும்	உமாபதி	48
சாதனைச்செல்வர் எம்.வி.பீமராஜா	குன்றக்குடி	49
கலாபாரதி கவிதைகள்	...	53
தமிழ்நாடு மருத்துவமனை	கே.இந்திரா	54
அபிராமியும் அம்புலியும்	பாலஇரமணி	57
கலாமந்திர் டிரஸ்ட்	கே.இந்திரா	58
நாளை நமதே	டாக்டர்.கி.வேங்கட சுப்பிரமணியன்	61
பார்த்துப் பார்த்து	தமிழழகன்	65
பொன்னும் வெள்ளியும்	நெய்தற்கினியான்	65
ஒரு பூவின் காயம்	உத்தமச்சோழன்	67
பாட்டு வந்தது	சுப ராஜேந்திரன்	69
நூல் மனிதர்கள்	பாப்ரியா	73

தமிழ் உயர...

வணிக இயல் - பி.காம் - பட்டப்படிப்பு வகுப்பில் சேர்வதற்கு மாணவர்கள் அலைமோதுகின்றனர். சேர்வதற்குச் சிபாரிசு பெற அலைகின்றனர்.

பி.ஏ. தமிழ் இலக்கியப் பாடத்தில் சேர்வதற்கோ, தமிழ் வகுப்பில் சேர்வதற்கோ மாணவர்களுக்கு ஆர்வம் இல்லை என்ற நிலை இன்றும் நீடிக்கிறது.

வேறு எந்தப் பிரிவிலும் இடம் கிடைக்காவிட்டால் தமிழ்ப் பட்டப்படிப்பிலும், தமிழ் இலக்கியப் பாடப் பட்டப்படிப்பு வகுப்பிலும் சேர்வதற்கு மாணவர்கள் முன் வருகிறார்கள் என்ற நிலை தான் நீடிக்கிறது.

வணிக இயல் வகுப்பில் சேர்ந்தால் வேலை வாய்ப்பு இருக்கிறது என்பது ஒருபக்கம் இருக்க, தமிழ்வழி கல்வி கற்பதில் ஏன் ஆர்வம் இல்லை?

எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் இயக்கத்தின் பணி வெற்றி யடையவில்லையா? என்னுடைய தமிழ் உலகை ஆளவேண்டும் என்ற மகத்தான இலட்சியம் அனைவருக்கும் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் செயலாக்க ஒருவரும் முன்வரவில்லையே ஏன்?

கல்லூரியில் தமிழில் மட்டும் தான் எல்லாப் பாடங்களும் கற்றுத்தரப்படும் என்ற நிலை வருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

யாராவது காரணம் அறிந்துச் சொன்னால் நன்றி சொல்வோம். ❀

கோடையின் கடுமையை அனுபவித்து வருகிறோம். 'குளிர்தரும்' நிழலை நோக்கிச் செல்கிறோம். உதகமண்டலம், கோடைக்கானல் என்று வசதி படைத்தவர்கள் செல்கிறார்கள். வசதியில்லாதவர்கள் கோடையின் கொடுமையை இருந்த இடத்திலேயே தாங்கிக் கொள்கிறார்கள்.

ஏலகிரிமலை போன்ற எளிமையான இடங்களுக்குச் சென்று தங்க அரசு வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

போட்டோ நிபுணர் யோகாவின் பார்வையில் கனி உண்டு களிக்கும் குடும்பம் சிக்கியது. 'அமுதசுரபி' இந்த இதழ் அட்டையை அவரது வண்ணப் போட்டோ அலங்கரிக்கிறது. ❀



கிழவன் சேதுபதி

சேதுபதிகள் மறவர்களின் தலைவர்களாக அரசை ஆண்டு வந்தனர். அவர்களது ஆட்சியில் திருவாடானை, இராமநாதபுரம், முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை போன்ற பகுதிகள் இருந்துவந்தன.

சேதுபதிகளில் தலைசிறந்தவராகக் 'கிழவன் சேதுபதி' புகழ் பெற்றவராக இருந்தார். கிழவன் சேதுபதிக்கும், சீதக்காதிக்கும் இடையே இருந்த உறவை வரலாறு மூலம் அறியலாம்.

'தன்னிகரில்லா மன்னவர் உலகில்
தமிழிலே நீதிபதி
தரணியிலே இதன் பெருமை
உரைத்தோன்
கிழவன் சேதுபதி'

என்று கவியரசு கண்ணதாசன் போற்றிப் பாடியுள்ளார்.

மூவேந்தர்களுக்குப் பின் சுதந்தரமாக ஆட்சி புரிந்த ஒரே தமிழ் மன்னர் பரம்பரை என்று சொல்லக் கூடியவர்கள் சேதுபதிகள் மட்டுமே!

கிழவன் சேதுபதியோ (1674-1710) அந்நியருக்கு அடிமையாகப் போகவிருக்கும் போக்கை விரும்பாதவர். இவ்வரசனுடைய வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கப் போவதாக அறிவித்த கவியரசு கண்ணதாசன் பல காரணங்களால் பின்னால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டார். கிழவன் சேதுபதியைப் பற்றிய கவிஞரின் பாடலின் ஒரு பகுதியைத்தான் மேலே பார்க்கிறோம். அவருக்குக் கிழவன் சேதுபதியின் வரலாற்றில் அவ்வளவு ஆர்வம் இருந்தது.

கிழவன் சேதுபதி ஆண்ட சீமையின் பரப்பளவு 2104 சதுர மைல்கள் ஆகும் என்றும், சுமார் ஏழுரை லட்சம் மக்கள் தொகை கொண்ட நாடாகவும், முகவை (இராமநாதபுரம்) திருவாடானை, பரமக்குடி, திருச்சுழி, முதுகுளத்தூர் ஆகிய ஐந்து ஜமீன் தாலுகாக்களையும் உடையதாகும்.

இராசராச சோழன் கி.பி. 1059இல் இலங்கை மீது படையெடுத்தபோது தாம் சென்ற பாதையில் பாதுகாப்பிற்காக ஒரு படை நிறுத்தினான் என்றும், அப்படைத் தலைவனின் வழிவந்தோனேப் பின்னால் சேதுபதி எனும் சிறப்பினைப் பெற்றான் என்றும் இராமநாதபுரம் மாவட்ட கெஜட் (1972) தெரிவிக்கிறது.

சேதுபதிகளில் ஏழாவது சேதுபதியாகக் கிழவன் சேதுபதி பெயர் பெற்று விளங்கினான். இவருடைய இயற்பெயர் இரகுநாத தேவன் என்பது. திருமலை சேதுபதிக்கும் இரகுநாத சேதுபதி எனும் பெயர் இருந்திருப்பதால் இவரை இரண்டாவது இரகுநாத சேதுபதி என்பர். தனது ஆற்றலினால் அரச பீடத்தை அடைந்தவர் கிழவன் சேதுபதி.

'அவன் சாமர்த்தியசாலி, மதிநுட்பம் மிக்கவன்' என்று புகழ் பெற்றவர். இராமநாத சேதுபதிகளில் 'கிழவன் சேதுபதி' மிகப் புகழ்பெற்றவன் என்பதை அவரது முழு வரலாற்றை அறியும்போது தெரிய வருகிறது. இவர் ஆட்சி உரிமையை மக்களாட்சி நெறி முறைப்படி அடைந்தவர் என்று கூறினால் அது மிகையாகாது. சேது நாட்டுத் தலைவர்கள் அறிவும், ஆற்றலும் மிக்க இளைஞன் இரகுநாதனையே சேதுபதியாக்கும் தங்கள் முடிவினைத் தெரிவித்தனர்.

குல மரபுப்படி ஆட்சிக்கு வர உரிமை இல்லாதிருந்தும், தகுதி அடிப்படையில் 'உரிமை பூண்டவன்' (கிழவன் - உரிமை பூண்டவன்) கிழவன் என்பதை உலகுக்குப் பறைசாற்றவே இரகுநாதன் 'கிழவன்' எனும் பெயர் சூடினான் எனக் கருதக் காரணங்கள் உள்ளன.

கி.பி. 1774 இல் 44 ஆவது வயதில் அரசு கட்டிலேறினான். என்றாலும் அது ஒன்றும் கிழவயதல்லவே, கிழவன் என வயது அடிப்படையில் பெயர் அமைவதற்கு.

கிழவன் சேதுபதி என்றால் முதிய சேதுபதி என்பதல்ல. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கிழவன் எனுஞ்சொல் எந்தப் பொருளில் பயன்பட்டு வந்தது என்பதை நன்கு அறியலாம். இங்கு சில உதாரணங்களைக் கூறலாம்.

நக்கீரர் தனது திருமுருகாற்றுப்படையின் ஆறாவது படைவீடாகிய பழமுதிர்ச்சோலையில் கோயில் கொண்டுள்ள முருகப்பிரானைப் பாடும்போது பாடலின் கடைசி வரிகளில்...

"பழமுதிர் சோலை மலை கிழவோனே"

என்று பாடி முடிக்கிறார். இங்கு முருகனைக் கிழ



வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட இலக்கியச் சிறப்பிதழ்

மாவட்ட சிறந்த எழுத்தாளர்களின் சிறுகதை - கவிதை - சின்னஞ்சிறு செய்திகள் - மாவட்டத் தொழில்வளம் - பண்டையச் சிறப்பு விளக்கும் கட்டுரைகள் நிறைந்தது.

தயாரிப்பவர் : பாரதி பணிச்செல்வர் நீலவன்.

வோனே என்று கூறும்போது இளமையும், அழகும் இணைந்த முருகப்பிரானைக் 'கிழவன்' என்ற பொருளிலா கூறினார்! இல்லை. 'பழமுதிர்ச் சோலை மலை உடையவனே' என்ற பொருளில்தான் பாடினார். சங்க நூல்களில் திருமுரு காற்றுப்படை தொகை நூலாக உள்ளது.

தலையாலங்கானத்து செரு வென்றபாண்டியனை 'குருதித் துகளாடிய களம் கிழவோயே' என்று புறநானூற்றுப் பாடல் போற்றுகிறது.

காவிரி வளமூட்டும் நாட்டுக்கு உரிமை உடையவனே எனும் பொருளில் 'காரிநெல்லின் சிறை கொள்வேலியாயிரம் விளையூட்டாக காவிரி புரக்கும் நாடு கிழவோயே' என்று பொருநராற்றுப்படை போற்றுகின்றது. இதேபோன்று கிள்ளி வளவனையும் காவிரிக்கு உரிமை பூண்டவன் எனும்படி,

'காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்
கிள்ளி வளவன்...'

என்று புகழ் பாடுகிறது புறநானூறு.

பொதுவாகத் தமிழுக்கு உரிமை பூண்ட மூவேந்தரையும்

'மண் திணி கிடக்கைத்
தண்தமிழ்க்கிழவர்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
அரசெனப்படுவது நினதே பெரும"

என்றவாறு பன்மை கருதி 'கிழவா' ஆக்கிப் போற்றுகிறது புறநானூறு.

இறுதியாகக் கிழவன் என்பதற்கு 'உரிமையுடையவன்' என்று சங்க நூல்கள் மூலமாக அறிந்தபின், சேதுபதி சட்டபூர்வமாக ஆட்சிக்கு உரிமை பூண்டதைக் 'கிழவன் சேதுபதி' என்று வரலாற்று மூலமாகவும் அறிந்தோம்.

சேதுநாட்டு அரசிற்கும், மறவர் சீமைக்கும் உரிமை பூண்ட பெருமையைக் கொண்டாட அன்று முதல் தன் பெயரைக் 'கிழவன்' என்றே மக்கள் நாவிலும், புலவர்களின் பாடல்களில் பயிலட்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கலாம். அன்று முதல் இரண்டாம் இரகுநாதத் தேவன் 'கிழவன் சேதுபதி' என்று புகழ்ந்து பேசப்படுகிறார். ◦°◦

மலை விழுங்கிய மகாதேவன்!

பங்கு மார்க்கெட் என்பது இரு முனைகளிலும் கூர் கொண்ட ஆபத்தான கத்தி என்பது நிருபணமாகிவிட்டது. "பங்குகளின் விற்பனையில் அபரிமிதமான திடீர் வளர்ச்சி..." என்ற மாயை தோன்றி அப்பாவி மக்களை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது கடந்த ஒன்றிரண்டு மாதங்களில். குழந்தை ஒன்று தான் ஊதும் பலூன் பருத்து வருவதைப் பார்த்து மகிழ்ந்து மேலும் மேலும் மூச்சை இழுத்துப் பிடித்து, கஷ்டப்பட்டு இன்னும் பெரிதாகுமோ என்ற ஆசையில் பலம் கொண்ட மட்டும் ஊதிக் கொண்டே இருக்கையில் டமாரென்று பலூன் உடைந்து போனதுபோல், வேகமாக வளர்ந்த பங்கு மார்க்கெட் அதல பாதாளத்துக்குப் போய் விட்டது! அதுவும் எப்படி...? கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாத அளவிற்கு ஊழல்கள் நடந்திருக்கின்றன.

புதிய பொருளாதாரக் கொள்கையால் பங்கு மார்க்கெட்டின் வளர்ச்சி, மற்றும் பங்குகளின் விலை ஏற்றம் ஆகியவை மிகவும் ஆரோக்கியமானது வரவேற்கப்பட வேண்டியது என்று சொல்லப்பட்டது. ஏனென்றால் பங்குகளில் முடக்கப்படும் பணம் வேறெங்கும் போவதில்லை, தொழில் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்படுகிறது. இதனால் தொழில் அபிவிருத்திதான் அடையுமே தவிர, கெடுதல் ஏதும் பொருளாதாரத்திற்கு ஏற்படாது என்று வேறு பரவலாகச் சொல்லப்பட்டது.

மலை விழுங்கி மகாதேவன் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் எவரெஸ்டையே விழுங்கிவிட்டு, சர்வ சாதாரணமாக நிற்கும் ஹர்ஷத் மேத்தாவை இப்போதுதான் பார்க்கிறோம். இவருடைய திருவிளையாடல்களால்தான் பங்கு மார்க்கெட்டில் இப்படி ஒரு செயற்கை வளர்ச்சி. இதை உண்மையென்று நம்பி எத்தனை அப்பாவிகள் எவ்வளவு நஷ்டமடைந்தார்களோ?

ஹர்ஷத் மேத்தா குறுகிய காலத்திற்குள் எப்படி ரூ 600 கோடிக்கும் மேல் விழுங்கினார் என்பதை அறியும் போது நம்புவது கடினமாகத்தான் இருக்கிறது.

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் பணம் சுமார் ரூ 600 கோடியை இவர் தந்திரமாகக் கையாண்டு அத்தொகைக்குப் பங்கு மார்க்கெட்டில் விளையாடி இருக்கிறார். அட்ரஸே இல்லாத அநாமதேயக் கம்பெனிகளின் ஷேர்களையெல்லாம் லட்சக் கணக்கில் மார்க்கெட்டில் உயர்த்தியிருக்கிறார். வேண்டுமென்றே பங்குகளின் விலை ஏற்றத்தைக் கொண்டு வந்து பலரையும் பணத்தைப் பங்குகளில் முதலீடு செய்யும் படியான சூழ்நிலையை மிகச் சாமர்த்தியமாக உருவாக்கினார். இதனால் பங்கு மார்க்கெட்டில் அபரிமிதமான செயற்கை வளர்ச்சி ஏற்பட்டது. பொதுவாகப் பங்குகளின் உண்மையான விலை உயர்வு, அவற்றை வெளியிடும் நிறுவனங்களின் பொருளாதார ஸ்திரத்தன்மை, அவை அளிக்கும் டிவிடென்ட், அவற்றின் திறமையான செயல்பாடு போன்றவற்றைப் பொறுத்தே படிப்படியாக அமையும். அவ்வாறின்றிச் சில குறிப்பிட்ட பங்குகளின் விலை திடீரென்று உயரக் காரணம் ஒரு மேத்தாவின் பம்மாத்து வேலை என்பது இப்போதுதான் தெரிய வந்துள்ளது.

விளைவு...? பங்குகளின் விலையில் மளமளச் சரிவு! தலை தூக்க முடியாத அளவு எவ்வளவோ அப்பாவிக் குடும்பங்களுக்கு ஏராள நஷ்டம் வேறு!

வங்கிகள் அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்குவது, விற்பது வழக்கத்தில் உள்ளது. ஒரு வங்கி மற்றொரு வங்கியிடமிருந்து இக்கடன் பத்திரங்களை வாங்க விரும்பினால் ஒரு தரகர் மூலமே அதைச் செய்ய வேண்டும். இப்படி அறுநூறு கோடி ரூபாய் மதிப்புள்ள பத்திரங்களை ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வாங்குகையில் இடைத்தரகராகச் செயல்பட்டிருக்கிறார் இந்த ஹர்ஷத் மேத்தா. இப்பத்திரங்களை விற்றதற்கான ரசீது கைக்கு வந்து பதினெட்டு மாதங்களாகியும் பத்திரங்களின் உடைமை மாறவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

ஸ்டேட் பாங்க் அறுநூறு கோடி ரூபாய் கொடுத்து வாங்கிய பத்திரங்களை இடைத்தரகர் மேத்தா, வேறு வங்கிகளில் அடகு வைத்து அதன் மூலம் பெற்ற பணத்தைக் கொண்டே பல்லாயிரக் கணக்கான ஷேர்களை வாங்கியிருக்கிறார் என்று நம்பப்படுகிறது. மேலும் பங்குகளின் விலையைச் செயற்கையாக ஏற்றுவதன் மூலம் ஒரு தரகர் நிறையத் தரகும் பெற முடியும்; இதுபோல் பங்குகளின் விலையை ஏற்றுவதாகச் சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கு உறுதியளித்தும் நிறையச் சம்பாதித்திருக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது. இந்த பட்டப்பகல் கொள்ளைக்கான காரணங்களை ஆராய அரசு சி.பி.ஐக்கு உத்தரவிட்டுள்ளது!

— மாளவிகா

ஒரு முட்பாதை பூம்பாட்டையானது!

உலகம் புரியாத வயது. தந்தை முகம் காணாமல் தாயின் நிழலில் வளர்ந்த அந்தச் சிறுவனுக்குப் பத்து வயது முடியும் முன் தாயும் இறந்து போனாள். அன்றாட வாழ்க்கையே ஒரு போராட்டமாக மாற, அந்தச் சின்னஞ் சிறு வயதில் இரண்டு வேளை உணவுக்காகவும் படிப்பிற்காகவும் அவனுடைய பிஞ்சுக் கரங்கள் உழைக்கத் தொடங்கின. இது அன்று நடந்த அவலம்.

இன்று...

காட்சி மாறுகிறது... காலமும் மாறுகிறது.

அன்று அனாதையாய் அன்றாட உணவுக்காக உழைத்த அந்தச் சிறுவன் இன்று 150 குடும்பங்களுக்கு உணவிடும் முதலாளி! பெரியதோர் நிறுவனத்தின் உரிமையாளர்; படிக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு வரும் ஏழைச் சிறுவர்களுக்கு நன்கொடை வழங்கும் பரோபகாரி; லாபம் மட்டும் கருதித் தொழில் நடத்தாமல் சமுதாய நலனை முன்னிறுத்தி வாழும் இலட்சிய வாதி; அவர்தான் எம்.ஜி.எம். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.முத்து வேலு.

இவ்வாண்டிற்கான தேசிய அளவில் வழங்கப்பட்ட உத்யோக் ரத்னா என்ற மதிப்பிற்குரிய விருதையும், எக்ஸெலென்ஸ் அவார்டையும், மிகச் சிறந்த நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் திரு முத்துவேலு பெற்றிருப்பதை ஒட்டி, அவரைச் சந்தித்து நம்முடைய பாராட்டுகளைத் தெரிவித்தபோது அன்போடு அதை ஏற்று நம்மிடம் உரையாடினார்.

தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதை ஆரம்ப நாட்களில் முட்பாதையாக இருந்ததைத் தன் தனி முயற்சியால் எப்படிப் பூம்பாட்டையாக மாற்றினார் என்பதைச் சுவைபடக் கூறினார். தனிமனித முயற்சியும் தன்னம்பிக்கையும் ஒரு மனிதனின் வாழ்க்கையை எவ்வளவு தூரம் முன்னேற்ற முடியும் என்பதற்குத் தன் வாழ்க்கையையே ஓர் உதாரணமாகக் கூறலாம் என்றார்.

ஆரம்ப நாட்களில் படிப்புச் செலவிற்காகக் கட்டடம் கட்டும் இடங்களில் இரண்டு ரூபாய் கூலிக்காக மண் சுமந்தது தான் தன்னை இந்தக் கட்டடத் தொழிலுக்கு இழுத்து வந்து இன்று ஒரு பில்டிங் கன்ஸ்ட்ரக்டராக உயர்த்தியிருப்பதாகக் கூறினார்.

தான் கட்டும் வீடுகளில் குடியேறுபவர்களைத் தன் சொந்தக் குடும்பத்தினராகவே தான் கருதுவதாகக் கூறினார் திரு. முத்துவேலு. “நான்கு சுவர்களும் ஒரு கூரையுமாகக் கருங்கல் கட்டடத்தை ஒப்படைப்பதோடு என்னுடைய வியாபாரம் முடிந்துவிட்டதாக நான் கருதுவதில்லை. கட்டிக் கொடுத்த வீடுகளில் குடியேறியவர்கள் நலமாக வாழ என்னாலான எல்லா முயற்சிகளையம் செய்கிறேன்”என்றார்.



கள் (Flats) கட்டிக்கொடுத்துச் சாதனை புரிந்திருக்கும் இவர், தம்மிடம் ஃபிளாட் வாங்கு பவர்களுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை இலவசமாக ஃபிளாட்டுகளை வெள்ளை யடித்து, பெயின்ட் அடித்து, புதுப்பித்துக் கொடுக்கிறார். அவர்கள் கட்டவேண்டிய வீட்டுவரி, மின்சாரக் கட்டணம் போன்றவற்றை MGM நிறு வனமே குறித்த தேதியில் செலுத்திப் பிறகு வீட்டுரிமை யாளர்களிடம் பெற்றுக் கொள் வது ஒரு தனித்தன்மை. அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு ரிப்பேர்களை இந்நிறு வனமே பழுது பார்த்து வீட்டு உரிமையாளர்களின் சங்கடங் களைப் பெரிதும் குறைத்து விடுகிறது. இவை அனைத் திற்கும் மெயின்டெனன்ஸ் சார்ஜ் என ரூபாய் 100 மட்டுமே மாதம் வசூலிக்கின்றனர். அவர்களுக்கு ஆகும் செலவோ ரூபாய் 200க்கும் மேல்.

எந்தப் பொருளுக்குமே ஒரு வருடமோ இரண்டு வருடமோ தான் உத்தரவாதம் அளிப் பார்கள். ஆனால் நான் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்கு ஆயுட் கால உத்தரவாதம் தரு கிறேன். ஏதாவது ரிப்பேர் என்றால் எங்கள் நிறுவன ஆட்கள் இலவசமாகப் பழுது பார்த்துத் தருகிறார்கள். இத னால் என்னிடம் வீடு வாங்கிய வர்கள் மிகவும் திருப்தியாக வாழ்கிறார்கள். வாடிக்கை யாளர்களின் திருப்தியைவிட சிறந்த விளம்பரமோ, பாராட்டோ, நற்சான்றிதழோ இருக்க முடியாது" என்று ஆணித்தரமாகக் கூறினார்.

தன் வாழ்க்கைத் துணைவி யாக வந்தமைந்த திருமதி ஞான வல்லிதான் தன்னுடைய முன் னேற்றங்களுக்கெல்லாம் பக்க பலம் என்று பாராட்டினார் திரு. முத்துவேலு.

அனாதையாகக் கிடந்த தன் அன்னையின் சடலத்தைத் தக … முடிவெடுத்தவர்கள், தானே முன்வந்து உதவிய ஜானகி டீச்சர், சமயத் திற்குக் கைகொடுத்த கல்லூரி முதல்வர் வெங்கட்ராமன், உறு துணையாக நின்ற அட்வகேட் ஜெயராமன்… மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவிய பல் வேறு அன்பர்களை இன்றள வும் மானுட தெய்வங்க ளாகவே தான் போற்றி நன்றி செலுத்துவதாக நிறைவோடு கூறினார் திரு. முத்துவேலு. இவருடைய வாழ்க்கை அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு இன்றைய இளை ஞர்கள் முன்னேற வேண்டும் என்பது இவரது அவா. தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் கொண்டு உழைத் தால் உயர்வு நிச்சயம் என்பது இவரது நம்பிக்கை.

பேட்டி : வனிதா

கர்மயோகி

ஹாலந்திலுள்ள பெற்றோர் இருவர் தங்களுக்குப் பிறந்த குழந்தைகள் சாதாரண மானவை என்று மன வருத்தப்பட்டுக் கொண் டிருந்தபோது அமெரிக்க இன்ஸ்ட்டியூட் ஒன்றைக் கேள்விப்பட்டு அங்கு சிறுகுழந்தை களுக்கு உயர்ந்த பயிற்சி அளிப்பதாக அறிந்து,



பிறந்த குழந்தையின் வளர்ந்த அறிவு

அவர்களை அணுகினார்கள். தங்கள் நிறுவனம் மூளை பாதிக்கப்பட்ட குழந்தை களுக்கே பயிற்சி அளிப்பதால், தாங்கள் உதவ இயலாது என்ற பின்னும், அவர்கள் முறை களைப் பெற்று ஹாலந்து பெற்றோர் தங்கள் 1 வயது குழந்தையைப் பயிற்றுவித்தனர். பெரும் பலன் கிடைத்தது. 5 ஆம் வயதில் குழந்தை பள்ளி முடிக்கும் நிலையில் பெரும் அறிவைச் சிறப்பாகப் பெற்றுவிட்டபின், கல்லூரியில் சேரும் முழுத் தகுதியுடனிருக்கின்றான். எப்படி 5 வயதுக் குழந்தையைக் கல்லூரியில் சேர்ப்பது? இதுபற்றி ஹாலந்தில் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி வந்தது எனக் கேள்விப்பட்டு, அந்த அமெரிக்க இன்ஸ்டிட்யூட்டிலிருந்து ஒரு புத்தகம் வரவழைத்தேன். அதன் பெயர் How to give your baby encyclopaedic knowledge.

அப்புத்தகத்திலுள்ள ஒரு சில செய்திக ளாவன :-

ஆறு வயதுக் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைவிட 1 வயது குழந்தைக்குச் சொல் லிக் கொடுப்பது எளிது.

ஒரு வயதில் குழந்தைகள் இரண்டு மொழிகள் கற்றுக் கொள்கின்றன.

சாப்பிடுவதைவிட ஆர்வமாகக் குழந்தைகள் பாடம் கற்கின்றன. அந்த இன்ஸ்டிட்யூட்டிலுள்ள 4 வயதுக் குழந்தையைப் பார்த்து நீ எதைப் படிக்க முடியும் என்றொருவர் கேட்டபொழுது, எதையும் படிக்க முடியும் என்று பதில் சொல் லிற்று. அருகிலிருந்த புத்தகத்தை எடுத்துக் கொடுத்து அதில் ஒரு பாராவைக் காட்டிப் படிக்கச் சொன்னார்.

குழந்தை படித்த பாரா பின்வருமாறு :

Little children have begun to read and to increase their knowledge, if this book leads to only one child reading sooner or better then, it will have been worth the effort, Who can say what another superior child will mean to the world? Who is to say what in the end will be the sum total of good for man as a result of this quiet groundswell which has already begun this gentle rovolution.

குழந்தை படித்தது. புரிகிறதா எனக் கேட்ட பொழுது அத்தனையும் புரிகிறது ground swell என்றால் என்னவென்று தெரியவில்லை என்று குழந்தை பதில் சொல்லியது.

40 வருஷமாக மூளை பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக நடத்தப்படும் ஸ்தாபனம் இது. இங்கு பயின்றவர்களில் பலர் நோபல் பரிசு பெற்றுள்ளனர். இரண்டு வயதில் குழந்தை வயலின் வாசிக்கிறது. 4 வயதில் குழந்தை ஒரு மைல் ஓடுகிறது. உடற்பயிற்சியில் அற்புதமாக விளையாட்டுக்களைக் கற்றுக் கொள்கிறது.

மனித மூளைக்குள்ள திறமை அளவு கடந்தது. நாளாக நாளாக அது மாசுபடிந்து திறனை இழந்து விடுகிறது. 30,000 வருஷத்திற்குப் பின்னால் வரும் superman என்பவரை 30 ஆண்டுகளில் உற்பத்தி செய்யும் திறனுள்ளது மனம். தான் எதுவாக வேண்டும் என முழு ஆர்வத்துடன் மனிதன் செயல்படுகிறானோ அதுவாக அவன் மாறும் திறமையுடையவன் என்று அன்னை பலகாலம் சொல்லி வந்ததை அமெரிக்கப் பள்ளி ஒன்று நடைமுறையில் சாதித்துள்ளது நமக்கு நல்ல செய்தி. அன்னை கூறுவனவற்றை அதிகமாகப் புரிந்து கொள்ள இக்கட்டுரை உதவும்.

கிளென் டோமான் என்பவர் உலக யுத்தத்தில் சேவை செய்தவர். மூளையில் அடிபட்டு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், பிறவியிலேயே மூளை வளர்ச்சி இல்லாத குழந்தைகளுக்கும் மருத்துவ உலகத்தால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், ஏதாவது உதவி செய்ய முடியுமா என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு டோமான் ஒரு முயற்சியை மேற்கொண்டார். வயதானபின் கண்பார்வை குறைந்தால் 400 வருஷங்களுக்கு முன் அதற்கு நிவர்த்தியில்லை. கண்ணாடி என்ற சாதனம் கண்பார்வையை மீட்டுத் தருகிறது. இன்று கண்ணாடி என்பதில்லை என்றால் உலகில் பல கோடி மக்கள் பார்வையை இழந்து விடுவார்கள். படிக்க முடியாது. நடக்க முடியாது. கண்ணில் பூ விழுந்தால் பார்வை போய்விடும். அதை அகற்றுவது இன்று எளிய சிகிச்சை. அதேபோல் மூளைவளர்ச்சி இல்லாத குழந்தைகளுக்கு வாழ்வு பாழாகிறது. பல எளிய முறைகளால் அவர்களுக்கு வாழ்வளிக்க முடியும் என்று டோமான் அனுபவத்தில் கண்டு, ஆயிரக்கணக்கான குழந்தைகளின் வாழ்வை மீட்டார்.

இன்று சுமார் 150 நாடுகளில் அவர் உதவி பெற்ற குழந்தைகள் புதுவாழ்வுடன் நடமாடுகின்றனர். நம் அறிவில் நூறில் ஒரு பாகத்தையும் நாம் பயன்படுத்துவதில்லை என்ற உண்மையை டோமான் இதன் மூலம் கண்டுகொண்டார். சாதாரணக் குழந்தைகளுக்கு இப்பெரு முயற்சி என்ன செய்யும் என்ற சோதனையை அவர் மேற்கொண்டபொழுது, குழந்தையின் அறிவை ஆயிரம் மடங்கு உயர்த்தலாம் என்று புரிந்து கொண்டு, அடுத்த முயற்சியை ஆரம்பித்தார். அதன் விளைவாக இந்த 40 ஆண்டுகளில் சுமார் 50,000க்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் பலன் கிடைத்துள்ளது. டோமான் முக்கியமாக மூளை வளர்ச்சியில்லாத குழந்தைகளையே கவனிக்கிறார். அடுத்தாற்போல் உடற் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். அவர் செய்து வரும் சோதனையை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய புத்தகங்கள் பல.

1. How to Teach your Baby Maths

2. How to Teach your Baby Encyclopaedic knowledge

3. How to Multiply your Baby's Intelligence

4. How to Teach your Baby to Read.

இன்றுவரை உலகெங்கும் அவை 20 லட்சம் பிரதிகள் விற்றிருக்கின்றன. தன் இன்ஸ்டிட்யூட் செயல்படுவதை ஒரு வீடியோப் படமாகவும் எடுத்திருக்கிறார். அதுவும் இன்று நம் போன்றவர்க்குப் பயன்படும்.

ராபர்ட் மேக்பர்லேன், காரிஜேக்கப் என்ற சொஸைட்டி உறுப்பினர்கள் கிளென் டோமானைப் போய்ப் பார்த்து ஒரு நாள் முழுவதும் அவருடைய இன்ஸ்டிட்யூட்டில் இருந்தனர். அதன் கிளைகள் ஜப்பான், இத்தாலி, பிரேசில் நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் போதுமான ஆதரவு இருந்தால் ஒரு கிளை அமைக்கலாம் என்ற கருத்துக்கு ஆதரவு தந்தார்.

சென்னையிலிருந்து இருவர் வந்தால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றேன் என்றும் கூறினார். Dr. சுலோச்சனா என்பவர் அங்கு சென்று பயிற்சி பெற முன்வந்துள்ளார். பம்பாயில் உள்ள அன்னை பக்தர் அங்கே சென்று பயற்சி பெற முன்வந்துள்ளார். பம்பாயில் உள்ள அன்னை பக்தர் அருணா இராகவன் என்பவர் டோமானைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவர் புத்தகங்களை வாங்கித் தன் குழந்தைக்குப் பயிற்றுவித்ததின் விளைவாக பம்பாயில் டோமான் இன்ஸ்டிட்யூட்டிற்கு ஒரு கிளை ஆரம்பிக்க யத்தனம் செய்கிறார். இந்த இன்ஸ்டிட்யூட்டின் முக்கிய 5 புத்தகங்களின் சுருக்கத்தை ரேவதி சங்கரன் மங்கையர் மலரில் 5 மாத இதழ்களில் வெளியிட்டுள்ளார்.

சுமையாகும் சுமைதாங்கிகள்

போட்டிக்கு வந்த சிறுகதை: 3

இரா. கேசவமூர்த்தி

மீனாட்சிக்கு எதிர்காலம் ஒரே இருட்டாய்த் தெரிந்தது. அந்த இருட்டின் மையத்தில் வெகு தொலைவில் சிறியதாய் ஒரு வெள்ளைப் புள்ளி தென் பட்டது. 'அந்த வெள்ளைப் புள்ளியை அடைவதுதான் என்னுடைய வாழ்க்கையின் லட்சியம்'. உள்ளத்தில் உறுதி செய்து கொண்டாள். கண்களை மூடினாள். தூக்கம் வரவில்லை. நாளைய தினத்தின் சிந்தனை ஒரு குறுகிய வட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வந்தது. சிந்தனையின் முடிவில் நெஞ்சத்தில் குழப்பமும் அச்சமும் படர்ந்தன. புரண்டு திரும்பினாள். மூத்த மகன் சுந்தரம் கண்களை மூடாமல் மேலே தெரிந்த விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான். பதினைந்து வயதின் விளிம்பில் இருந்தான்.

மீனாட்சி சுந்தரத்தின் தலையை வருடினாள். சுந்தரம் திரும்பினான்.

"ஏம்மா... தூக்கம் வரலையா?"

ஆமென்று தலையசைத்தாள்.

"அப்பா செத்துட்டாரே. இனிமே என்ன பண்றதுன்னு பயமா இருக்காம்மா?"

உலகத்தைப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டு விட்ட பையன் கேள்வி கேட்டான். அவன் நெஞ்சில் பயம் படர்ந்திருக்கிறது. அடுத்த வேளை சோற்றுக்கு என்ன செய்வது என்று யோசித்திருக்கிறான். இள நெஞ்சத்தில் பயத்தையும் சுமையையும் படர விடக்கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.

"எதுக்கு சுந்தரம் பயப்படணும்? நான் இல்லையா உங்களுக்குச் சம்பாதிச்சுச் சோறு போடறதுக்கு? கொஞ்ச வருஷம் போனா, நீங்க வளந்துடறீங்க. அப்புறம் எனக்கு என்ன கவலை?"

"உன்னோட ஒரு சம்பாத்தியத்துல நாங்க எல்லாரும் படிக்க முடியுமாம்மா?"

படிக்க வேண்டும் என்ற பையனின் வேட்கையும் அது முடியுமா என்ற ஏக்கமும் கேள்வியில் தெரிந்தது.

"அதைத்தான் யோசனை பண்ணிட்டிருக்கேன் சுந்தரம். கண்ணை இறுக மூடிட்டுத் தூங்கு. காலையில பேசிக்கலாம்."

திடீரென்று வந்த சாவல்லவா என்னை விதவையாய், சோற்றுக்கு வழி இல்லாதவளாய் நிறுத்திவிட்டது? இந்த ஒரு வீடுதான் ஆஸ்தி. இதை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்? நாலு பேருக்கு இந்த வீடு அதிகம்தான். பின்னால் இருக்கும் பட்டக சாலையில் பட்டு நூல் ராட்டை போடக் கேட்டுப் பார்க்கலாம். மற்ற எந்த வேலையில் வரும் வருமானத்தை விடவும் பட்டுநூல் ராட்டையில் அதிக வருமானம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அப்படியே, அந்த ராட்டை போட்டாலும் நாலு பேர் சாப்பிட்டு, மூன்று பேரைப் பள்ளிக்கு அனுப்புவது முடியாது. சுந்தரத்தைப் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி, கடை வேலைக்குச் சேர்த்துவிட வேண்டும். வாரத்துக்கு இருபது அல்லது இருபத்தைந்து ரூபாய் கிடைத்தாலும் ஓரளவு உதவியாய் இருக்கும்.

"பாரு மீனாட்சி. எங்கப்பா தான் என்னைப் படிக்க வைக்கலை. நான் கைத்தறி ஓட்டிட்டுக் கஷ்டப்படறேன். சுந்தரமும் குமாரும் நல்லாப் படிக்கறாங்க. மூணு பேரையும் நல்லா படிக்க வச்சு, சர்க்கார் உத்தியோகத்துக்கு அனுப்பணும். அதுக்காக, இருபத்து நாலு மணி நேரமும் கஷ்டப்பட நான் தயார்."

கணவரின் வார்த்தைகள் காதில் ஒலித்தன.

"ஒண்டியா நான் என்னங்க பண்ணுவேன்? எனக்கு மட்டும் ஆசை இல்லையா? அவன் கிட்டே எப்படிச் சொல்றதுன்னு தான் தெரியலை."

தனியாளாய்த் தனக்குத் தானே பேசிக் கொண்டாள். கண்களில் இருந்து வந்த கண்ணீர் கன்னப்பரப்பை நனைத்தது. திடீரென்று ஒரு கை அவள் கண்ணீரைத் துடைத்தது. சுந்தரம் உட்கார்ந்து இருந்தான்.

"அழாதம்மா. நீ அழறதைப் பாத்தா எனக்கும் அழுகையா வருது."

அவசரமாய்க் கண்ணீரைத் துடைத்தாள்.

பையன் அம்மாவையே ஒரு கணம் உற்றுப் பார்த்தான்.

"அம்மா! நான் நாளையில இருந்து கடைக்குப் போறேம்மா.. நம்ம வெங்கடேஷ் போற கடையில ஒரு பையன் வேணுமாம். வாரத்துக்கு இருபத்தைஞ்சு ரூபா தருவாங்களாம்."

மீனாட்சிக்கு மீண்டும் கண்களில் நீர் துளிர்த்தது. கற்பூரமாய்ப் பற்றிக் கொள்ளும் பிள்ளை. ஆசைகள் வேறு யதார்த்தம் வேறு என்பதை நிதர்சனமாய் உணர்ந்து கொண்ட பிள்ளை.

சுந்தரத்தை இறுகக் கட்டினாள். நெற்றியில் முத்தம் கொடுத்தாள். தூங்கு என்று முதுகில் தட்டிக் கொடுத்தாள். உறங்கிப் போனாள்.

"பாரும்மா மீனாட்சி. நீ நினைக்கற மாதிரி பட்டு நூல் ராட்டை சுத்தறது ஒண்ணும் லேசான வேலை இல்லை. டவுன்ல மூணு ஹார்ஸ் பவர் மோட்டார்ல சுத்தறதை, கையால சுத்தணும். ஏற்கனவே, இந்த ராட்டை ஓட்டிட்டு இருந்த இரண்டு பேர் அடிக்கடி நெஞ்சு வலி வருதுன்னு சொல்லி நிறுத்திட்டாங்க. அந்த ரெண்டு ராட்டை சும்மாதான் இருக்கு. வேறு யாராவது வந்து கேட்டிருந்தா, நான் உடனே தந்திருப்பேன். உம் புருஷன் கந்தன் என்னோட நண்பன்ங்கறதால சொன்னேன். வேணும்னா கட்டை சுத்தற ராட்டை தர்றேன். எடுத்துட்டுப் போ."

"ரெண்டுக்கும் கூலி எவ்வளவு வித்தியாசம் வருங்க?"

"பெரிய ராட்டைல வாரத்துக்கு நூறு ரூபா முடிய சம்பாதிக்கலாம். கட்டை ஓட்டற ராட்டையில நாப்பது, அம்பது ரூபா வரும்."

"பெரிய ராட்டையே ஓட்டறேங்க."

"பணத்தை மட்டுமே பாக்காதம்மா. உன்னோட வாழ்க்கையையும், உடம்பையும் யோசிச்சுப் பாரு."

பட்டு நூல் பேக்டரி முதலாளி அறிவுறுத்தினார்.

"பெரிய ராட்டை ஓட்டிப் பாக்கறேங்க. முடியலைன்னா, கட்டை ராட்டை ஓட்டிக்கிறேங்க."

பேக்டரி ஆட்கள் வீட்டிற்கு வந்து இடம் பார்த்தார்கள். ராட்டை வைப்பதற்கு அளவு குறித்தார்கள். மண் வெட்டி, மெஷினை நட்டார்கள். மீனாட்சி, ராட்டைக்குப் பூஜை செய்தாள். கோன்களை வைத்து இழைகளை இணைத்து, கண்களை மூடிக் கணவனை நினைத்தாள். மூக்கின் வழியாய் நிறையக் காற்றை உள்ளிழுத்து, அடி வயிறு எக்கி, பலமனைத்தும் கைகளில் திரட்டி ராட்டையைச் சுற்றினாள். ராட்டை மெதுவாகச் சுழல ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வேகம் பிடித்துச் சுழன்றது.

பத்து ஆண்டுகள் பத்து யுகங்களாய், பத்து நரகங்களாய் மாறி ஓடியிருந்தன. மீனாட்சியின் தலையில் நரை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. ராட்டை சுற்றிச் சுற்றிப் பெண்மையின் மென்மை மறைந்து கைகள் காப்புக் கட்டி இறுகிப் போயிருந்தன. இந்த வருடத்துடன் குமாரின் காலேஜ் படிப்பு முடிந்து விடும். ஹாஸ்டல் பீஸ் கட்ட வேண்டும். அப்போதுதான் பரிட்சை எழுத விடுவார்கள் என்று கடிதம் போட்டிருக்கிறான். முதலாளி பணம் இல்லை என்று கையை விரித்து விட்டார். சுந்தரம் தெரிந்தும் தெரியாதவன் போலப் பணம் இல்லை என்று சொல்லி ஒதுங்கிக் கொண்டான். வாங்கும் சம்பளத்திலும் கணக்குப் பார்த்து வீட்டிற்குத் தருகிறான். தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டான்.

ராட்டையைச் சுற்றினாள். அடி வயிறு எக்கினாள். நெஞ்சுக் கூட்டுக்குள் 'சுரீர்' என்றது. நான்கைந்து பேர் ஒன்றாய் ஏறி மிதிப்பது போல் இருந்தது. மெல்லச் சுவரில் சாய்ந்தாள். கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் கொடுத்த மருந்தையும், மாத்திரையையும் வாய்க்குள் போட்டாள். ஆசுவாசப்படுத்தினாள். பத்து நிமிடம் கழித்து இயல்புக்கு வந்தாள். குமார் வேலைக்கு வந்ததும் இந்த ராட்டை சுற்றுவதை நிறுத்தி விட வேண்டும் என எண்ணிக் கொண்டாள்.

சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்த சுந்தரம் பார்த்ததும் தெரிந்துகொண்டான்.

"என்னம்மா... நெஞ்சு வலியா?"

"ஆமா சுந்தரம்."

"ஆஸ்பத்திரி போயிருந்தியா?"

"மருந்து, மாத்திரை சாப்பிட்டேன். இப்ப தேவலை."

"இந்த ராட்டை சுத்தறதை நிறுத்துனாதான், உனக்கு இந்த வியாதி தீரும்."


"இதை நிறுத்திட்டு என்னடா பண்றது?"

"குமார் இன்னும் ரெண்டு மாசத்துல படிப்பை முடிச்சிடுவான். அவனுக்கு இங்கியே ஒரு மில்லுல சூபர்வைசர் வேலைக்குச் சொல்லிட்டேன். நீ ராட்டை சுத்திச் சம்பாதிக்கற சம்பளம் ஆரம்பத்துலயே வரும். ஒண்ணும் பிரச்னையில்லை."

"அப்ப ராஜீவோட படிப்புக்கு?"

"அவனை உள்ளூர்லேயே ஏதாவது படிக்க வைக்கலாம்."

"பாரு சுந்தரம். நல்ல படிப்புக்கு வெளியூர்தான் போயா



கணும்னா, அனுப்பிப் படிக்க வச்சிதான் தீரணும். என்னோட ராட்டை சுத்துனாதான் அது நடக்கும்னா, எந்த வலியையும் தாங்கிட்டுச் சுத்தறதுக்கு என்னோட மனசுல தைரியம் இருக்கு."

"நீ சொன்னா கேக்க மாட்டே. இப்ப குமாருக்குப் பணம் கட்ட என்ன பண்றது?"

மீனாட்சி அமைதியாய் ரூமுக்குள் போனாள். பழைய தகரப் பெட்டியைத் திறந்தாள். உள்ளே இருந்த தாலிச் சரட்டை வெளியே எடுத்தாள். தன்னுடைய கணவரின் நினைவாய் வைத்திருந்ததை உற்றுப் பார்த்தாள்.

'மீனாட்சி. இந்தத் தாலிச் சரடு செய்யறதுக்கு நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கேன் தெரியுமா? இதுல இருக்கற ஒரு குண்டுமணி தங்கமும் என்னோட ரத்தம்.'

கணவரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'உங்க ரத்தம் உங்க பையனோட படிப்புக்கு உதவத் தாங்கப் போகுது.'

"சுந்தரம். இதை வித்து, அந்தப் பணத்தைக் கொண்டு போய் குமாருக்குக் குடுத்துட்டு வா."

நினைவுகளும் கனவுகளும் சுகமானவை. நிகழ்காலப் பிரச்னைகளை மறக்க வைப்பவை. மீனாட்சி அம்மாளும் கடந்து வந்த பாதையை அசை போட்டாள். இதயக் கூட்டில் எழுந்த 'சுரீர்' என்ற வலி அவளை நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தது. நாடாக் கட்டிலில் இருந்து மெதுவாக எழுந்தாள். அருகில் வைத்திருந்த செம்பை எடுத்துத் தண்ணீர் குடிக்கும்போதுதான்

கைகள் நடுங்குவதைக் கவனித்தாள்.

'மூணு ஹார்ஸ் பவர் மோட்டார் இழுக்கற ராட்டையைச் சுற்றிய கைகளா இவை?' சிரித்துக் கொண்டாள். இன்னும் இந்தக் கைகளுக்கு எதற்கு வலிமை? என்னுடைய வாழ்க்கையின் லட்சியம்தான் ஈடேறி விட்டதே! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருட்டுக்கு மத்தியில் மெலிதாகத் தெரிந்த எதிர்கால நம்பிக்கை ஒளி - வெள்ளைப் புள்ளி- விசுவரூபமெடுத்து, இப்போது இருட்டுப்புள்ளியாகி விட்டதே. இதற்கு மேல் என்ன வேண்டும்?.

மூன்று பேரும் வாழ்க்கையில் ஓரளவு நல்ல நிலைக்கு வந்து விட்டார்கள். சுந்தரத்தின் மூத்த மகனும் படிப்பை முடித்து, வேலைக்குப் போக ஆரம்பித்த பின் அவனுக்கும் பிரச்னைகள் குறைந்து விட்டன. குமாருக்கு ஒரே மகன். அவன் படித்துக் கொண்டிருக்கிறான். குமார் தனியாய் ஒரு மாடி வீடு கட்டிக் கொண்டு தனியாகப் போய் விட்டான். ராஜீவுக்கு ஒரே ஒரு பெண். ஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் டி.வி., ஸ்கூட்டர் என்று வசதியாய்த்தான் இருக்கிறார்கள். போதும்; நான் பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைத்து விட்டது. மீனாட்சிக்குப் பெருமிதமாய் இருந்தது.

ஹாலில் இருந்து எழுந்த பேச்சுக் குரலை உன்னிப்பாகக் கேட்டாள். குமாரும் ராஜீவும் இருப்பதுபோல் பட்டது. வந்திருக்கிறார்களா? நாடாக் கட்டிலில் உட்கார்ந்தபடியே ஹாலில் தெரியும் சோபாவை எட்டிப் பார்த்தாள். தெளிவில்லாமல், மசமசப்பாய் ஒரு நபர் உட்கார்ந்திருந்தது தெரிந்தது. கண்களைச் சுருக்கி உற்றுப் பார்த்தாள். குமார்தான் உட்கார்ந்து இருந்தான். கண், நரம்புகள் உறுத்தி எரிந்தன.

ஹாலுக்குப் போகலாம் என்று எண்ணி எழுந்தாள். முழங்காலுக்குக் கீழே சுருண்டிருந்த நரம்புகள் தெறித்து விடுவது போல் வலித்தன. நின்று கொண்டே நேரம் பார்க்காது ராட்டை சுற்றியதால் கிடைத்த பரிசு. அப்படியே கட்டிலில் உட்கார்ந்தாள். நீவி விட்டுக் கொண்டாள். ஹாலில் பேசிக் கொள்வது காதில் விழுந்தது.

"இதைப் பாரு குமார். இந்த வீடு ரொம்பப் பழுதடைஞ்சி போயிடுச்சி. மழை வந்தா எல்லா இடத்துலேயும் ஒழுகுது. மராமத்துப் பண்ணுனா சரிப்படாது. இடிச்சிட்டுப் புது வீடுதான் கட்டியாகணும்."

"சரி. அதுக்கு என்ன பண்ணலாம்?"

"நமக்கு இருக்கற ஒரே சொத்து இந்த வீடுதான். இதை இப்பவே பிரிச்சிகிட்டா, அவங்க அவங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் பண்ணிக்கலாம். இல்லைன்னா, பின்னாலே பிரச்னைதான். என்ன சொல்றீங்க?"

"நீ சொல்றது சரிதாண்ணா. எப்படிப் பிரிக்கலாம்ங்கறதை நீயே சொல்லிடு."

"இப்ப நமக்கு இருக்கற முக்கிய பிரச்னையே இந்த வீட்டை மூணா பாகம் போடறதா இல்லை அம்மாவுக்கும் சேர்த்து நாலா பாகம் போடறதா? அதுக்கு முன்னால, அண்ணன்கிற உரிமையில நான் கொஞ்சம் கேக்கறேன். குமார், உனக்கு ஒரே பையன். அவனோட எதிர்காலத்துக்காக ஒரு வீடும் கட்டிட்டே. இந்தச் சின்ன இடத்தைப் பாகமா வாங்கி என்ன பண்ணப் போறே? அண்ணன் மகனுக்குக் குடுத்தோம்னு நினைச்சி இதை விட்டுத் தரக்கூடாதா?"

"நான் இதை உனக்கே விட்டுத் தரலாம். வாஸ்தவம்தான். ஆனா, அந்த வீட்டுக்கு பாங்க் லோன் கொஞ்சம் இருக்குது. இந்த இடத்தை வித்தா, வர்ற துலதான் அதை அடைக்கலாம்னு நினைச்சுட்டு இருந்தேன். லோன் பத்தாயிரம்தான் இருக்குது. இடத்தோட மதிப்பு குறைந்தது இருபது வரும். நீ அவ்வளவு கூடத்தர வேண்டாம். லோன் அடைக்கிற பத்தாயிரம் மட்டும் கொடு."

"சரி. அப்படியே செஞ்சுடலாம். ராஜீவ் நீ என்னடா சொல்றே?"

"பாருண்ணா. எனக்கு ஒரே பொண்ணுதான். கல்யாணமானா ஓடிடுவா. நீ கட்டற வீட்டுலயே வாடகை இல்லாம இருந்துக்கறேன். திவ்யா கல்யாணத்தப்ப, அந்த இட மதிப்புக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட அளவு பணம் குடுத்துடு. இடத்தை நீயே வச்சிக்க."

"சரி. அப்ப, திவ்யா கல்யாணத்தப்ப நான் இருபதாயிரம் குடுத்துடறேன். நீங்க புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் காலம் முடிய வாடகை இல்லாம இருந்துக்கலாம். இப்ப, நமக்கு இருக்கற ஒரே பிரச்னை அம்மாவுக்குப் பாகம் போடறதா? வேண்டாமா? நீங்க என்ன சொல்றீங்க?"

மீனாட்சி காதுகளைக் கூர்மையாக்கினாள். இப்போது, இவர்களுக்கு நானா பிரச்னை?

"அம்மா உயிரோட இருக்கறப்ப, சொத்து பிரிக்கறதால, ஒரு பங்கு குடுக்கறதுதான் நியாயம்! அவங்க கடைசி காலத்துக்கு அதுதான் பாதுகாப்பு."

"எதுக்காகப் பங்கு குடுக்கணும்? அம்மா சாகற வரை நாலு மாசத்துக்கு ஒருத்தர் வீட்டுலன்னு இருக்க வேண்டியதுதானே?"

"அது எப்படிங்க சரி வரும்? இப்பவே அடிக்கடி படுத்துட றாங்க. திடீர்னு ஹாஸ்பிடல்ல சேர்க்க வேண்டி வரலாம். பெரிய செலவு வரலாம். அதை யெல்லாம் யார் பாக்கறது?"

குமாரின் மனைவி கேள்வி கேட்டாள்.

"அந்த மாதிரி செலவு வரும்போது மூணுபேரும்தான் சமமாப் பிரிச்சுக்கணும்."

"அந்தச் சமயத்துல யாரா வது பணமில்லைன்னு சொல்லு வாங்க. அம்மாவை நான் மட்டுமே கவனிக்கணுமான்னு முகம் சுணுங்கும். கண்டுக்காம விட்டுடுவாங்க. அது எல்லாம் சரிப்படாது. அதனாலே, அம்மாவுக்குன்னு ஒரு பங்கு கொடுக்கறதுதான் அம்மா வுக்குப் பாதுகாப்பு."

"சரி. அப்படியே அம்மா வுக்கு ஒரு பங்கு குடுத்துட றோம்னு வை. அந்த ஒரு பங்கை அம்மா காலத்துக்கு அப்புறம் திரும்ப மூணா பிரிச்சி... அதெல்லாம் ரொம்ப கஷ்டம். அதனால வேற ஏதா வது ஐடியா இருந்தா சொல் லுங்க."

குசுகுசுவென்று பேசினார் கள். மீனாட்சிக்கு இதயத்தின் மேல் பாறாங்கல்லை வைத்தது போல் இருந்தது. இவர்களுக்கு நான்தானா பிரச்னை? பத்து மாதம் சுமந்து பெற்றதற்காக, தன்னந்தனியாய் வேள்வி நடத்தினேனே, யாருக்காக? எதற்காக? வெப்பத்தால் மனசு எரிந்தது.

நெஞ்சுக் கூட்டுக்குள் எழுந்த வலி, வல்லமை பெற்றது. நெஞ்சை அடைப்பதுபோல் இருந்தது. அருகில் கிடந்த மாத் திரைகளைப் பார்த்தாள். என் னுடைய உடலில் உயிரைப் பிடித்து வைக்கலாம். ஆனால், உள்ளத்தில் இருந்து ஓடிவிட்ட நம்பிக்கைகளைப் பிடித்து வைக்குமா?

வலி கூடிக் கொண்டே போனது. உள்ளத்தில் வாழ வேண்டும் என்ற ஆசை இல் லாத காரணத்தால் அது எளி தாய் ஆதிக்கம் செலுத்தியது. மீனாட்சி மெல்ல அடங்க ஆரம்பித்தாள். கண்கள் இருள ஆரம்பித்தன. படுக்கையில் சாய்ந்தாள். ஹாலில் சுந்தரம் பேசியது காதில் மெலிதாய் விழுந்தது.

"அம்மாவோட பிரச்னை முடிஞ்சுது. அம்மாவோட பங்கை நானே வச்சிக்கறேன். அதுக்குப் பதிலா, அம்மாவோட அந்திமச் சடங்கு முடிய எல் லாத்தையும் நானே செஞ்சுட றேன். உங்க யாருக்கும் இதுல ஆட்சேபனையில்லையே?"

"இல்லை" என்றார்கள்.

"சுந்தரம், நான் யாருக்கும் சுமையா இருக்க மாட்டேன்டா. நீங்க நல்லா வாழணும். அது தான்டா என்னோட ஒரே ஆசை."

நினைவு தப்பியது. சுமை யாக விரும்பாத சுமைதாங்கி சரிந்தது. ஃ


எழுத்தை அறிந்தால்...

எம். சோமாஸ்கந்த மூர்த்தி

நிலவும் வந்து நிற்கும் - புகழ்
நித்தம் கலந்து சிரிக்கும்
அகலும் இருளும்; ஆற்றல் பிறக்கும்
அறியாமை என்பது அணைந்து போகும் (நிலவும்)

எழுத்தை அறிவது இயல்பின் முயற்சி
எண்கள் உணர்த்தும் ஏற்ற தொடர்ச்சி!
வழுத்தும் படிப்பே வளமைப் புகழ்ச்சி
வாழ்வில் நிலைக்கும் இன்பத் தொடர்ச்சி (நிலவும்)

புத்தகம் என்பது.புதுமையின் நாட்டம்
புதுக்கும் எண்ணம் பொதுமை களாகும்
வித்தகம் கல்வி வெற்றியின் விருப்பம்!
வேண்டும் சிந்தனை விளைக்கும் திருப்பம் (நிலவும்)



திருபுவனம் திரிபுவன வீரேச்சுரம்

— தாமரைக்கண்ணன்

முன்னுரை : சோழநாடு சோறுடையது என்பர். அத்துடன் அஃது தமிழ்ப் பேறும், சமயப் பேறும் உடையது என்பதும் உண்மை. பிற்காலச் சோழப் பெருமன்னர்கள், சோழ நாட்டை ஆட்சி புரிந்த காலத்தில் தமிழக மக்கள் வாழ்வு வளத்தில் மிதந்தது. தமிழ்நாடு சிற்பக் கலை, கட்டடக் கலை, இசைக் கலை, நடனக் கலை, போர்க் கலை, ஆட்சிக் கலை, சமயக் கலை போன்ற கலைகளில் நனி சிறந்து விளங்கியது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தின் தன்னேரிலாக் கலைப் பெருமைகளை உலகெங்கும் அது பறைசாற்றிக் கொண்டிருப்பது போலவே, அடுத்து வரும் பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகளிலும் சோழர் காலக் கலைகளின் புகழ்க் கொடி பறந்த வண்ணம் இருக்கும்.

சோழப் பேரரசர் ஒவ்வொருவரும் தங்கள் ஆட்சிக் காலங்களில் தமக்கெனத்தனி முத்திரை பதித்துள்ளனர். அவர்களுள் ஒருவரான மூன்றாம் குலோத்துங்கனின் சமயப் பணி நினைந்து நினைந்து போற்றத்தக்கதாகும்.

மூன்றாம் குலோத்துங்கன்

இவன் இரண்டாம் இராசராசனின் மகன். வீரராசேந்திரன் முடித்தலை கொண்ட பெருமான், சோழ கேரள தேவன், முடிவழங்கு சோழன், உலகுடைய நாயனார், இராசாக்கள் தம்பிரான், தனி நாயகன் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவன்.

திரிபுவன வீரதேவன் என்ற இவனது சிறப்புப் பெயர் மிகவும் குறிப்பிடத்தக்கது.

சமயப் பணி

மூன்றாம் குலோத்துங்கன் தில்லைச் சிற்றம்பலவாணருடைய 'ஏக பக்தன்' என்று திரிபுவனக் கல்வெட்டு கூறுகிறது. 'நம் தோழன்' என்கிறது, திருவாரூர்க் கல்வெட்டு.

சுந்தரமூர்த்தி சுவாமிகளே, இறைவனின் நண்பராகக் கருதப்பெற்றுத் 'தம்பிரான் தோழர்' எனப் பெற்றவர். அவருக்குப் பிறகு 'தோழர்' என்ற சிறப்பைப் பெற்றவன் குலோத்துங்கனே ஆகும்.

மதுரை, குடுமியான் மலை, தில்லை, காஞ்சி, திருவிடைமருதூர், இராசராசபுரம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர் முதலான பல கோயில்களுக்கும் இவன் பெருமளவில் திருப்பணிகள் புரிந்துள்ளான். இவன் சைவனாக இருப்பினும், வைணவம், சைனம் போன்ற சமயங்களுக்கும் உதவி, சமயப் பொறை காத்த பெருமையுடையவன். இவனுடைய சமயப்பணிகளுள் தலையானதாகத் திரிபுவனம் கோயிலைக் கூறலாம்.

திரிபுவனம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறைக்குச் செல்லும் வழியில் ஏறத்தாழ எட்டாவது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊர், திரிபுவனம். தற்போது திருபுவனம் என்று வழங்கப் பெறுகிறது. காஞ்சியைப் போலவே, பட்டு நெசவுக்கும் பட்டு விற்பனைக்கும் மிகவும் புகழ்வாய்ந்தது இவ்வூர்.

திரிபுவன வீரேச்சுரம் தோன்றியது

சோழ நாட்டை ஆண்ட மூன்றாம் குலோத்துங்கன் இலங்கையையும் வெற்றி கொண்டவன். இவன் சேர நாட்டையும், பாண்டிய நாட்டையும் வென்ற பின், மதுரையில் விசயாபிஷேகமும், வீராபிஷேகமும் செய்து கொண்டபோது 'திரிபுவன வீரதேவன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

முதலாம் இராசராசன், தன் சிறப்புப் பெயரால் தஞ்சையில் 'இராசராசேச்சுரம்' எடுப்பித்துப் புகழ் பெற்றான். முதலாம் இராசேந்திரன், தன் சிறப்புப் பெயரால் கங்கைகொண்ட சோழபுரத்தில் 'கங்கை கொண்ட சோழீச்சுரம்' நிறுவிப் புகழ் பெற்றான். இரண்டாம் இராசராசன், பழையாறைத் தலைநகரைத் தன் பெயரால் இராசராசபுரம் என மாற்றி, அங்கு (தற்போதுள்ள தாராசுரத்தில்) தன் பெயரால் 'இராசராசேச்சுரம்' எனும் கோயிலை எடுப்பித்துப் புகழ்பெற்றான்.

தன் முன்னோரைப் போலவே தானும் சமயத்துறையில் பெரும் புகழை நிலைநாட்ட விரைந்தான் மூன்றாம் குலோத்துங்கன்.

இவன் கி.பி. 1178 முதல் 1218 வரை நாற்பது ஆண்டுகள் பேரரசனாக விளங்கினான். தனது 24 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1202) திரிபுவன வீரதேவன் எனும் சிறப்புப் பட்டம் பெற்றதால், அப் பெயரிலேயே 'திரிபுவன வீரேச்சுரம்' என்ற கோயிலை எடுப்பித்தான். ஊருக்கும் திரிபுவனம் எனப் பெயர் உண்டாயிற்று. முன்னரே இவ்வூர் இருந்து பின்னர் இவன் பெயரால் 'திரிபுவனம்' என்று வழங்கப்பெற்றதா அல்லது 'திரிபுவன வீரேச்சுரம்' கோயிலை உருவாக்கியது போலவே இவ்வூரையும் தன் பெயரால் உண்டாக்கினானா என்பது தெளிவாக

இவன் பெயரிலேயே அமைந்தமை நினைக்கத் தக்கது.

குலோத்துங்கனது 34 ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1212) இக்கோயில் எடுப்பிக்கப் பெற்றது.

விக்கிரம சோழனுடைய அரச குருவான ஸ்ரீ கண்ட சம்பு என்பவருடைய மகனும், மூன்றாம் குலோத்துங்க சோழனின் அரச குருவும், சித்தாந்த ரத்நாகரம் என்ற நூலின் ஆசிரியரு மான ஈச்வர சிவர் எனும் சோமேச்வரரே, இக்கோயிலில் உள்ள பரமசிவனையும் பார்வதி யையும் கடவுள் மங்கலமாகச் (பிரதிஷ்டை) செய்துள்ளார்.

அச் செய்தியைக் கூறும் சம்ஸ்கிருதக் கல்வெட்டு இக்கோயிலில் உள்ளது.

அக் கல்வெட்டு, குலோத்துங்கனை, 'அழகில் மன்மதன், கொடையில் கற்பகத் தரு, பொறுமையில் பூமி, கோபத்தில் யமன், வீரத் தில் பரசுராமன், அர்ச்சுனன் ஆகியோர், நீதியில் பிரகஸ்பதி, சுக்கிரன் ஆகியோர், மூவுலகையும் பாதுகாத்து இரட்சிப்பதில் இந்திரன், இசை யில் பரத முனிவர்' என்று பாராட்டி, இவனது கோயில் திருப்பணிகளையும் விரிவாகக் கூறு கிறது.

திரிபுவன வீரேச்சுரம்

குலோத்துங்கன் காலத்தில் திரிபுவன வீரேச் சுரம் என்னும் பெயர் பெற்றுள்ள இக்கோயில், தற்போது கம்பஹரேஸ்வரர் கோயில் என்று அழைக்கப் பெறுகிறது.

கம்பம் – நடுக்கம். தேவர்களின் நடுக் கத்தைத் தீர்த்த பெருமான் என்ற பொருளில் கம்பஹரேச்சுரர் எனப் பெற்றார்.


கிழக்கு நோக்கிய இக்கோயிலின் வான ளாவிய கருவறை விமானம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் கோயில் விமானங்களை நினைவு கொள்ளச் செய்கிறது. ஆறு நிலைகளைக் கொண்ட இவ்விமானம் கண்களுக்குப் பெருவிருந்தாகும்.


கொடி மரம், பலி பீடம், நந்தியோடு காட்சியளிக்கும் கோயிலின் வடகிழக்கே ஐம் பெருங்கடவுள் விழா மண்டபம் உள்ளது.


கோயில் தலத்தரு, வில்வம்.


மேற்குச் சுற்றில் முருகன் கோயில், தெற்குச் சுற்று மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியது. இம் மண்டபத்தில் உள்ள யானை, குதிரை, தேர்க்கால்கள் ஆகிய அனைத்தும்






சிற்பி







சில்பி
சில்பி







கைதேர்ந்த சிற்பிகளின் சிற்றுளிகளால் உயிர் பெற்று விளங்குகின்றன. ஒவ்வொரு தூணும் ஓராயிரம் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு உயிருள்ள உருவங்களை நம்மிடம் பேச வைக்கிறது. வீரம், காதல், அச்சம், அன்பு ஆகிய மெய்ப்பாடுகளை முகத்தில் காட்டி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன அவை.

திருச்சுற்றில் உள்ள பால கோட்டச் சிற்பங்களான யோக தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், நான்முகன், துர்க்கை ஆகியவற்றை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு நுண்ணிய வேலைப்பாடுகள்! துர்க்கைக்கு ஆறு கைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அறம் வளர்த்த நாயகி

இறைவியின் திருப்பெயர் அறம் வளர்த்த நாயகி. வடமொழியில் தர்ம சம்வர்த்தினி என்பர்.

அடியவர்களைத் தன் அருள் விழிகளால் நோக்கிப் புன்முறுவலுடன் இப்பூவுலகை ஆள்கிறாள் இவள்.

சரப மூர்த்தி

மனித உடல், விலங்கு முகம், பறவைச் சிறகு ஆகியவை கலந்த அற்புதமான கற்பனை வடிவமே சரபம். இக்கோயிலில் சரபமூர்த்தி வழிபாடு சிறப்புமிக்கது. பகைமையை முறியடிக்கவே இச்சரபமூர்த்தியை வணங்குகின்றனர்.

இங்குள்ள சரபமூர்த்தியின் கீழ் உள்ள நரசிம்மம் எட்டு கைகளைக் கொண்டுள்ளது. சரபத்தின் தாக்குதலைத் தாங்கமுடியாமல் நரசிம்மத்தின் சங்கு சக்கரங்கள் கீழே விழுந்து கிடக்கின்றன. நரசிம்மன் சரபத்தை இரு கைகூப்பி வணங்குகிறார். இதைக் காணும் போது, சிற்பியின் கற்பனைத் திறத்தையும் அந்நாளைய சைவத்தின் மேம்பாட்டையும் நம்மால் உணர முடிகிறது.

இரணியனை வதைத்த நரசிம்மமூர்த்தி ஆணவத்தால் உத்வேகம் கொண்டு உலவியது. தேவரெல்லாரும் நடுங்கினர். சிவபெருமான் இச்சரப உருவம் கொண்டு நரசிம்மத்தின் வேகத்தைத் தணித்தார் என்கிறது புராணம்.

துறவிகளும் சரபமூர்த்தியை வழிபடுகின்றனர். ஐம்புலப் பகையை இவ்வழிபாடு அழிக்கும் என்பது அவர்கள் நம்பிக்கை.

இங்கே சிறப்புமிக்க விழாக்களின்போது, சரபமூர்த்திக்கு வெள்ளிக் கவசம் அணிவிக்கிறார்கள்.

சிற்பங்கள்

இக்கோயிலில் காணப்படும் விமானச் சிற்பங்களும், மண்டபச் சிற்பங்களும், கொடியிடையுடனும் மதர்த்த கொங்கைகளுடனும் பல்வேறு கோணங்களில் காணப்பெறும் கோல வடிவழகிகளின் சிற்பங்களும் கண்களுக்குப் பெருவிருந்து அளிக்கின்றன. இராமாயணச் சிற்பங்களும் கொள்ளை அழகு!

நிறைவுரை

சிற்பக் களஞ்சியமாகக் காட்சியளிக்கும் இக்கோயில், காலத்தை வெல்லும் கலையழகு மிக்கது. மூன்றாம் குலோத்துங்கனின் இறையுள்ளத்தைப் புரிந்து கொள்ளவும் சோழர் காலச் சிற்பிகளின் கலைவண்ணத்தை அறிந்து கொள்ளவும் பகைமையை அடியோடு முறியடிக்கும் ஆற்றல் பெறவும் நாம் இக் கோயிலுக்குச் சென்று வணங்கி வரலாம்.

மூலக்குரல்

கவியரசு. நா. காமராசன்

மூலக் குரல் ஒன்று கேட்டது – அது
மூடு பனி மூட்டத்தைத் தாண்டி – மேல்
வானத்தின் மேலேறிப் போனது.


மழைக் கோட்டையில் இடியோசை எழுந்தது
மாலை வெண்ணிலவின்
கண் வீச்சாய்த் தெறித்த
மின்னல் சரம் விட்டு...
தண்ணீர் வசந்தம் உதிர்ந்தது.

தென்றலில் அடிபட்ட
மலர் மணம்...
திசைகளைக் கட்டி இழுத்து
கொதிக்கும் கோடை இரவை மயக்க வந்தது.

குப்பத்தில் தெப்பம் விட்ட
மழைக் காலம்...
கோபுரத்து பொம்மைகளை
நனைத்த போது...
ஒரு நீலக் குயிலின் பாடல்
மௌனமானது – அடடா
உரக்கக் குரைக்கும் வெறி நாயின்
குரல் ஓசை மேகத்தைத் தொட்டது.

மூலக் குரல் ஒன்று கேட்டது – அது
ஓலக் குரலாய் முடிந்தது.





தமிழில் தவறுகளை அறிவோம்

முத்து கண்ணப்பர்

14. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் மிகும்:

இதைப் புரிந்து கொள்வதற்கு முதலில் குற்றியலுகரம் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னர் மாத்திரை என்பது என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை என்றால் எழுத்து ஓசைகளின் கால அளவு அதாவது கை நொடிப் பொழுது (சிட்டிகை போடுதல் அல்லது கண் இமைகள் இயல்பாக இமைக்கும் பொழுது). எழுத்துகளில் குறில், நெடில், மெய் என்று மூன்று வகை உண்டு. குறில் அல்லது குற்றெழுத்துகளின் ஓசைக்கால அளவு ஒரு மாத்திரை - அதாவது ஒரு கை நொடிப் பொழுது அல்லது கண் இமைப் பொழுது. நெடிலுக்கு இரண்டு மாத்திரை; மெய்யெழுத்து அதாவது தன் மேல் புள்ளிகளை உடைய எழுத்து. அதற்கு அரை மாத்திரை. இவற்றையெல்லாம் பள்ளிக் கூடங்களில் ஐந்தாம் வகுப்புக்குள்ளேயே படித்திருப்பீர்கள்.

இப்பொழுது குற்றியலுகரம் என்றால் என்ன என்று பார்ப்போம். குற்றியல் என்றால் குறுகிய இயல் அதாவது உரிய ஓசை குறுகி ஒலிப்பது என்பதாம். ஓர் எழுத்துத் தனக்கு உரிய ஓசையை முழுமையாக ஒலித்தால் அது முற்றியல். அதன் ஓசையளவு குறைய ஒலித்தால் அது குற்றியல். சில நேரங்களில் சொற்களில் வரும் எழுத்துகள் தமக்கு உரிய ஓசை குறைய ஒலிக்கப் பெறும். உகரம் தனக்கு உரிய ஓசை நிறைய ஒலித்தால் அது முற்றியல், குறைய ஒலித்தால் அது குற்றியல்.

(எ - டு) பாடு, நாடு, ஓடு, உப்பு, கூத்து இந்தச் சொற்களில் வரும் 'டு' என்னும் எழுத்து தனக்குரிய முழு ஓசையைப் பெறுவதில்லை. 'டு' இது குறில்; குற்றெழுத்து. குறிலுக்கு ஓசையளவு ஒரு மாத்திரை. ஆனால் மேற்காணும் சொற்களில் வரும் 'டு' வின் ஓசை அரை மாத்திரையே பெறுகிறது. ஆனால், 'படு', 'மடு', மாவு, பளு - இவை போன்ற சொற்களில் வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையை முழுவதுமாகப் பெறுகிறது. அதனால் இவையனைத்தும் முற்றியலுகரம். ஆனால் முன்னே குறிப்பிடப்பட்டுள்ள சொற்களில் வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையினும் குறைந்து ஒலிப்பதால் அது குற்றியலுகரம். அதாவது குறைந்த ஓசையை உடைய உகரம். அதன் ஓசைக் காலம் அரை மாத்திரையே

குற்றியலுகரங்கள் ஆறு வகைபபடும்.

1. வன்றொடர்க் குற்றியலுகரம் 2. மென்றொடர்க் குற்றியலுகரம் 3. இடைத் தொடர்க் குற்றியலுகரம் 4. நெடில் தொடர்க் குற்றியலுகரம் 5. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் 6. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகியன. ஒரு சொல்லின் கடைசி எழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளில் ஏதேனும் ஒன்று வந்து அதன் அயலெழுத்து வல்லெழுத்தாக (க்,ச்,ட்,த்,ப்,ற்) இருக்குமானால் அது வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும். க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று இவை சொற்களின் கடை எழுத்துகளாக வரும்.

(எ - டு) சுக்கு, அச்சு, பட்டு, கூத்து, தப்பு, ஒற்று.

இச் சொற்களை ஒலித்துப் பாருங்கள். அவற்றின் இறுதியில் உள்ள உகரங்கள் தமக்குரிய முழு ஓசையை - அதாவது ஒரு மாத்திரைப் பொழுதைப் பெறாமல் குறைந்த ஓசையை - அரை மாத்திரைப் பொழுதையே பெறுகின்றன. எனவே வல்லின உகர எழுத்துக் குறுகி ஒலித்தால் அது வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும். பிற குற்றியலுகரங்களுக்கு எடுத்துக்காட்டுகள் பின்வருவன.

பஞ்சு - மென்றொடர்க் குற்றியலுகரம்.

மார்பு - இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

கோடு - நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

எஃகு - ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

வரகு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

(கடைசி எழுத்துக்குப் பக்கத்து எழுத்து (ர் + அ) 'அ' என்னும் உயிரெழுத்து வருவதால் இது உயிர்த் தொடர்க் குற்றியலுகரமெனப் படுகிறது).

முன்னர், வன்றொடர்க் குற்றியலுகரத்துக்குப் பின் க்,ச்,த்,ப் - மிகும் என்று பார்த்தோமல்லவா? கீழ்க்காணும் எடுத்துக் காட்டுகளைப் பாருங்கள்!

சுக்கு + தண்ணீர் - சுக்குத் தண்ணீர்.

அச்சு + திருத்தம் - அச்சுத் திருத்தம்.

பட்டு + புடைவை - பட்டுப் புடைவை.

பத்து + கட்டளை - பத்துக் கட்டளை.

உப்பு + பாத்திரம் - உப்புப் பாத்திரம்.

உற்று + பார் - உற்றுப் பார்.

மேலே கூறியுள்ள ஆறு வகைக் குற்றியலுகரங்களுள் இந்த வன்றொடர்க் குற்றியலுகரங்களுக்குப் பின்தான் வல்லெழுத்து மிகும். ஏனையவற்றில் பொதுவாக மிகா. ஆனால், கீழே காணும் மென்றொடர்க் குற்றியலுகரங்களில் சில இடங்களில் மிகுவதுண்டு. அது விதி விலக்கு.

மருந்து + கடை - மருந்துக் கடை.

நண்டு + கொடுக்கு - நண்டுக் கொடுக்கு.

பாம்பு + தோல் - பாம்புத் தோல்.

குரங்கு + குட்டி - குரங்குக் குட்டி.

இங்கு இன்னொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள் நிலை மொழிகளாக இருந்து பன்மை விகுதியைக் காட்டும் 'கள்' என்பது சேருமானால் அப்பொழுது **வலிமிகல் கூடாது**. வருமொழி வேறு பொருள் உள்ள சொல்லாய் இருந்தால்தான் மிகும். இதனை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் 'கள்' என்னும் பன்மை விகுதி வந்தால்கூடச் சிலர் வல்லெழுத்துப் போட்டு எழுதுகிறார்கள். அது சரியன்று.

(எ - டு) பாட்டு + பாடு - பாட்டுப்பாடு - இங்கு மிகுந்தது 'ப்'

தோப்புகள் - இங்கு 'கள்' என்பது பன்மை விகுதியாகையால் மிகுவது சரியன்று. அப்படி, 'தோப்புக்கள்' என்று 'க்' மிகுத்து எழுதப்படுமானால் தோப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட 'கள்' என்று பொருள்படும். 'தோப்புகள்' என்றால் பல தோப்புகள் என்றாகும். எனவே, பாட்டுகள், சீட்டுகள், தோப்புகள், நாற்றுகள், பாக்குகள், கூத்துகள் - எனப் பன்மையைக் காட்டும் இடங்களில் வல்லெழுத்து மிகுதல் கூடாது.

15. 'அ' கர 'இ' -கரங்களை இறுதியாக உடைய வினையெச்சங்களுக்குப் பின் மிகும். இதை அறிவதற்கு முன்னர் வினை, வினையெச்சம், பெயரெச்சம் இவற்றைத் தெரிந்து கொள்வோம்.

வினைச்சொல் (Verb) : முற்றுப் பெற்றுள்ளதாயின் அது வினை முற்று.

(எ - டு) ஓடினான். ஓடிய செயல் முற்றுப் பெறுகிறது. எனவே இது வினைமுற்று. 'தேடி' என்னும்போது, இந்த வினைச் சொல் முற்றுப் பெறாமல் குறைந்து நிற்கிறது. 'தேடிப் பார்' என்றால், அப்பொழுது 'தேடி' என்னும் முற்றுப் பெறாத வினைச் சொல் 'பார்' என்னும் வினை முற்றுடன் சேர்ந்து பொருளைத் தருகிறது. அதாவது 'தேடி' என்னும் முற்றுப் பெறாத வினைச் சொல் 'பார்' என்னும் வினை முற்றைச் சார்ந்துதான் முற்றுப் பெறுவதால் 'தேடி' என்பது **வினையெச்சம்**. 'எச்சம்' என்றால் குறைவு, குறைந்து நிற்பது என்பது பொருள். 'அ'கரத்தை இறுதியாக உடைய வினையெச்சங்களுக்குப் பின் மிகும்.

(எ - டு)

ஓட (ஓடு + அ) + கண்டேன் - ஓடக் கண்டேன்

பாட + (பாடு + அ) கேட்டேன் - பாடக் கேட்டேன்

'இக'ரத்தை இறுதியில் உடைய வினையெச்சங்களுக்குப் பின் மிகும்.

(எ.டு) ஆடி + காட்டு = ஆடிக்காட்டு.

ஊன்றி + படி = ஊன்றிப் படி

முற்றுப் பெறாத வினைச் சொல் வினை முற்றைச் சார்ந்து பொருள் முற்றுப் பெற வருமானால் அது வினையெச்சம் என்று பார்த்தோம். அவ்வாறே முற்றுப் பெறாத வினைச் சொல், பெயர்ச் சொல்லைச் சார்ந்து பொருள் முற்றுப் பெற வருமானால் அது பெயரெச்சம்.

(எ - டு)

கற்ற + பாடம் - கற்ற பாடம்.

ஓடிய + குதிரை - ஓடிய குதிரை.

இங்கு 'கற்ற', 'ஓடிய' என்பன பெயர்ச் சொல்லைத் தழுவி முற்றுப் பெறுவதால் பெயரெச்சமாம்.

பெயரெச்சத்தின் பின் வலி மிகாது; வினையெச்சத்திற்குப் பின்தான் மிகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் பெயரெச்சம் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாய் இருந்தால் அங்கு மட்டும் மிகும் என்பதை மறத்தல் கூடாது.

இப்போது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

நிலைமொழி முற்றுப் பெறாத வினைச் சொல்லாயிருந்து, அது வருமொழியாகிய பெயர்ச்சொல்லைச் சார்ந்து பொருள் முற்றுப் பெற வருமானால் பெயரெச்சம் என்று கண்டோம் அல்லவா?

அவ்வாறு முற்றுப் பெறாத நிலைமொழியின் ஈற்றெழுத்து மறைந்து, எதிர் மறைப் பொருளைத் தருமானால் அது ஈறு கெட்ட எதிர்மறை. (எ - டு) பாடா + பாட்டு - பாடாப் பாட்டு. இங்கு, 'பாடாத' என்னும் நிலை மொழியின் இறுதி எழுத்தாகிய 'த' மறைந்து 'பாடா' என்று நின்று, 'பாட்டு' என்னும் வருமொழியாகிய பெயர்ச் சொல்லைத் தழுவினால் 'பாடாப்பாட்டு' என்று வருகிறது. இங்கு 'ப்' என்னும் வல்லெழுத்து மிகுகிறது. அத்துடன் பாடா என்பது எதிர் மறைப் பொருளில் உள்ளது. எனவே 'த' என்னும் எழுத்து மறைந்து எதிர் மறைப் பொருளில் வருவதால் 'பாடா' என்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும். இவ்வாறே ஓடாக் குதிரை, தேடாச் செல்வம் என ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களில் வலி மிகும்.

16. ஆக, போய், ஆய் - என்னும் வினை யெச்சங்களுக்குப் பின்னும் மிகும்.

(எ - டு)

நன்றாக + தூங்கு - நன்றாகத் தூங்கு.

போய் + பார் - போய்ப் பார்.

வருவதாய் + சொல் - வருவதாய்ச் சொல்.

17. ய்,ர்,ழ் - என்னும் எழுத்துகளை இறுதியாக உடைய சொற்களின் பின் மிகும்.

(எ - டு)

நாய் + குட்டி - நாய்க் குட்டி.

பொய் + பேச்சு - பொய்ப் பேச்சு - (ய்)

வேர் + பலா - வேர்ப் பலா.

நீர் + திவலை - நீர்த் திவலை - (ர்)

தமிழ் + தாய் - தமிழ்த் தாய்

கூழ் + பசை - கூழ்ப் பசை - (ழ்)

18. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் மிகும்.

(எ - டு)

தீ + சட்டி - தீச் சட்டி.

பூ + கூடை - பூக் கூடை.

(தொடரும்)

முதலில்லா வியாபாரம்

— கவிஞர் குடந்தை புகழேந்தி

நிலத்தை நீரை வளியினையும்
நீள்விசும் பினையும் தீயையுமே
பலவும் படைத்தான் பொதுவாக
பல்லுயிர் வளர்த்தான் சமமாக!

மனிதன் அவற்றைச் சூழ்ச்சியினால்
மண்ணில் விற்பனை செய்திட்டான்!
பனிமலை மீதில் ஏறிட்டுப்
பல்வித ஜாலம் செய்திட்டான்!

மண்ணை மனையாய் விற்றிட்டான்!
மனையில் வீட்டைக் கட்டிட்டான்!
எண்ணெய் வளத்தை மண்ணடியில்
எத்தனம் செய்து கண்டிட்டான்!

நீரைத் தேக்கி மின்சாரம்
நிலையாய்க் கிடைக்கச் செய்திட்டான்!
நீரைக் கொண்டு விவசாயம்
நிலத்தில் செய்து மகிழ்ந்திட்டான்!

காற்றை ஒசியில் பெற்றிட்டுக்
கலத்தில் அடைத்து விற்றிட்டான்!
நாற்றை வளர்த்து நெல்லாக்கி
நல்ல விலைக்கு விற்றிட்டான்!

நெருப்பைப் பல்வித மாக்கியதை
நாளும் வியந்திடச் செய்திட்டான்!
அரும்பைச் செடியில் பறித்தின்று
அழகாய்த் தொடுத்து விற்றிட்டான்!

விண்ணில் பறந்து சென்றிடவே
விலையாய்ப் பெருந்தொகை
கேட்டிட்டான்!
மண்ணில் பலவாய்க் கட்டடங்கள்
மாண்புறக் கட்டி விற்றிட்டான்!

எல்லாம் கடவுள் நமக்கென்று
இங்கே படைத்தான் இலவசமாய்!
பொல்லா மனிதன் அனைத்தையுமே
பொக்கென விற்றுக் களிக்கின்றான்!!



போட்டிக்கு வந்த சிறுகதை: 4

அது ஓர் இந்தியக் குழந்தை

நித்யாமூர்த்தி

மழையின் மும்முரம் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. அந்த பிரம்மசாரிக் குடியிருப்பிலிருந்து, சந்திரன் மெல்ல, ஜன்னலினூடே எட்டிப் பார்த்தான்.

காலை எப்படியோ, அவனது இரண்டு சக்கர வாகனத்தில் ஆபீஸ் போய் வந்தாயிற்று. மேஜை மீதிருந்த அலாரம் கடிகாரம் மணி எட்டைக் காட்டியது. அவன் வழக்கமாகச் சாப்பிடும் அந்தத் தெருமுனை குட்டி ஓட்டல் ஒன்பதரைக்கே உறங்கப் போய் விடும். மழைக் குளிர் வேறு. பெரிய ஓட்டல்களைத் தேடி நெடுஞ்சாலை போக வேண்டுமானால் வாகன வசதி தேவை.

மேஜை மீது கிடந்த அம்மாவின் கடிதம், காற்றில் படபடத்து, நகையாடியது. மாலை திரும்பும் சமயம், கதவிடுக்கு வழியே தபால்காரர் தள்ளி விட்டுப்போன கடிதம்.

"எத்தனை நாள்தான் இப்படிப் பிரம்மசாரி விரதம் காக்கப் போகிறாய்? வயது ஏறிக் கொண்டே போகிறது ஞாபகம் இருக்கிறதா? வேளா வேளைக்குச் சமைத்துப்போட்டு, உன்னையும், வீட்டையும் ஒருத்தி வந்து கவனிக்க வேண்டாமா? எனக்கும் உன்கூட வந்து இருக்க வேணும் என்கிற ஆசை இருக்காதா?

அந்த நங்கேச நல்லூர்க்காரர், இன்னமும் விடாப்பிடியாக வந்து கேட்டபடி இருக்கிறார். அவர் பெண் மரகதம் பி.ஏ., படித்தவள். பார்க்க லட்சணம். பதவிசு. அப்படி ஒரு பெண் கிடைக்க நாமும் கொடுத்து வைத்திருக்க வேணும். நம்ம ஊர் காளி கோயில் உற்சவத்திற்கு நீ வந்த போது, அந்தப் பெண்ணும் வந்திருந்ததே, ஞாபகம் இருக்கா? நீ சரி என்று கடிதம் எழுது, மேற்கொண்டு நான் பார்த்துக் கொள்கிறேன்..."

ஒவ்வொரு முறை அம்மாவின் கடிதம் வரும்பொழுதெல்லாம், நழுவுகிற மீனாக, சமாதானம் எழுதிவிடுவது அவன் வழக்கம்.

இம்முறை அவனுக்கு மனதில் ஒரு குறுகுறுப்பு.

அன்று காலை நடந்த சம்பவம் மனத்தை நெருடத் துவங்கியது. ஆபீஸ் டெஸ்பாட்ச் கிளார்க் தங்கவேலு பெரிய கிண்டல் பேர்வழி. வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பியபடி, சகல விஷயங்களையும் சொதப்பி விடுவார்.

ஸேல்ஸ் செக்ஷன் விசுவுக்கு இரண்டாவதாகப் பெண் பிறந்த வைபவத்தை, இனிப்பு மூலம், ஆபீஸில் அறிமுகம் ஆயிற்று.

"என்னப்பா சந்திரன்? உடனொடத்தவன் எல்லாம் சிவப்பு முக்கோணம் தேடற நிலைக்கு வந்திட்டான், நீ இன்னும் நேர்க்கோடு கூடப் போட ஆரம்பிக்கலே." சூழ நின்றவர்களின் கிண்டல் சிரிப்பில் முகம் சிவந்தான் அவன். அதைவிட அவனது கூடிக் கொண்டிருக்கும் முப்பத்து மூன்றாம் வயது, இப்போது கொஞ்சம் சேமிப்பு உடலிலும், வங்கியிலும் தேங்க ஆரம்பித்த வசதி, யாவும் ஒரு பூதாகார உருக்கொண்டு அவனை அச்சுறுத்தியது.

தங்கவேலு, அம்மா, தற்போது வயிற்றின் தேவை என்ற சூழ்நிலையில் மட மடவென அம்மாவிற்கு ஒப்புதல் தெரிவித்துக் கடிதம் எழுதி, உறையில் போட்டு ஒட்டிவிட்டு, நிம்மதிப் பெருமூச்சுடன் நிமிர்ந்தான்.

அலாரம் கடியாரம் மணி பத்தரை என்றது. "ஐயோ! சாப்பாட்டு வாயில் மண். பன்னும், டீயும் தெருமுனைக் கடையில்தான்". சலித்தபடி எழுந்து கதவைத் திறந்தான். மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. சட்டென சவரிமுத்து நினைப்பு வந்தது.

தெருமுனை டீக்கடை வாயிலில் இருக்கும் ரிக்ஷா தொழிலாளி.திடீர்க் குப்பத்தில் பெரிய

குடும்பம் அவனுடையது. ஆனால் இரவு பகல் பாராமல் தெருமுனைதான் வாசஸ்தலம். சந்திரனின் இரண்டு சக்கர வாகனம் கைவிடும் போதெல்லாம், கை கொடுத்து உதவுவது, சவரிமுத்துவின் சைக்கிள் ரிக்ஷாதான். அதில் புறப்பட்டுப் போய் வயிற்றுப்பாட்டை ஒழிக்க வேண்டியதுதான்.

கதவைப் பூட்ட முனைந்தவன் கண்ணில்...

ஈ, கொசு எதுவும் நடமாட சோம்பல் படும் அந்தத் தெருவில், அவன் வீட்டு வாயிற்படியில், மழையில் நனைந்து முக்காடிட்ட இரு உருவங்கள்.

முனகல் ஒலி. ஓர் உயிர்ப் போராட்டத்தின் தீர்க்கமான அழுகைக் குரல் அந்த மழை இருட்டின் சிலிர்ப்பில், அவனை ஊடுருவிச் சென்றது. தொடர்ந்து ஒரு வயதான பெண்குரல், "ஸ்! குளி குளிக்கற ஆஸ்பத்திரிவரை நடந்திடு. பொறுத்துக்க. புத்தி கெட்டவளே! எவடி உன்னைப் பாத்துப்பா? இப்படி செய்திட்டியே. ம்! நட, நட..." அடிக்குரலில் அதட்டியது.

"முடியலேக்கா..." தொடர்ந்து ஈனமான குரலில் வேதனையும், அழுகையும் தீவிரமாகியது. கதவைப் பூட்ட வந்த சந்திரன், சட்டென உள்ளே சென்று வாயிற்புற விளக்கைப் போட்டான்.

"நா போறேண்டியம்மா. யாரோ வாராங்க" தலையில் முக்காடிட்டபடி அதட்டிய உருவம் இருளில் ஓடி மறைந்து விட்டது. சந்திரன் வியப்பு, பயம், பரிதாபம் எனப் பல வேறு உணர்ச்சிகளுடன், படிக்கட்டருகே சென்று குனிந்தான்.

விளக்கின் ஒளியைக் கண்டு, பீதியுடன் அந்தப் பெண் நிமிர்ந்து பார்த்தாள். இளம் பெண். தாய்மையின் போராட்டத்தில், முக்கலும், முனகலுமான வேதனையில் அவள் துடித்துக்கொண்டிருந்தாள்.

ஒரு விநாடி உறைந்து போய் நின்றான் அவன். மனித அரவம் இல்லாத அந்தச் சந்தில், அந்த வேளையில் இந்த வீட்டு வாயிற்படியைத் தஞ்சமடைந்து விட்ட அபலைப் பெண் யார்?

மறுகணம் இயல்பான கோபம் பீறிட்டது. "ஏய்! யார் அது! எந்திரி. எங்க வீட்டு வாசப்படியில வந்து உக்காந்துகிட்டு... ம்! வேற எடமா கெடைக்கலே!"

சட்டென அவனை நிமிர்ந்து பார்த்து இரு கரங்களையும் சிரமத்துடன் கூப்பினாள் அவள். கண்களில் நீர் மாலையாகப் பெருக, உதடு வேதனையில் சுழிக்க, அவள் முகத்தில் தெறித்த வேதனைச் சுடர், சாட்டையடியாக அவனது மனசாட்சி மீது சொடேரென விழுந்தது.

புதியதாகத் தோன்றப் போகும் உயிரின் நேரம் நெருங்குகிறது என்பதை அவளது முனகலும், வேதனையும் அதிகரிப்பதிலிருந்து புரிந்தது. ஓடு! ஓடு. பச்சாதாபம் வேகமாய் பிடரி பிடித்து உந்த, மழை நீரைப் பொருட்படுத்தாமல் அசுரகதியில் இயங்கினான்.

அப்போதுதான் முனைக் கடை டீயை ருசித்துக் குடித்தபடி, கையிலிருந்த பீடியை உறிஞ்சி அனுபவித்தபடி நின்றிருந்தான் சவரிமுத்து. மழைக்குளிரில் அவனது கிழிந்த பனியனையும் மீறித் தாக்கிய குளிருடன், கழுத்திலிருந்த கறுப்புக் கயிற்றுச் சிலுவையும் ஆடியது.

சந்திரனைக் கண்டதும் சட்டெனப் பீடியைக் காலால் மிதித்து அணைத்துவிட்டு, டீக் கோப்பையைக் கடை வாயிலில் வைத்தான்.

விஷயத்தைச் சொன்னதும், "நீ கவலைப்படாதே வாத்யாரே. இன்னா, ஒரு கை குடு. அலேக்கா, ஆசுபத்திரி கொண்டு போட்டுருவோம்" என்றபடி பரபரப்பாகப் புறப்பட்டு வந்தான்.

அந்தப் பெண்ணைக் குனிந்து பார்த்தவன், "வாத்யாரே! நெறமாசமா கீது. கோஷா ஆசுபத்திரிவர தாங்காது போல. ஒரு கை புடி" என்றான் அனுபவத்தின் மிகுதியினால்.

ரிக்ஷாவில் அந்தப் பெண் ஏற்றப்படும்போது, மழை நீருடன், கண்ணீர் கலக்க அரற்ற ஆரம்பித்திருந்தாள்.

"த பாரு வாத்யாரே. அடுத்த தெரு முனையில ஒரு குளி குளிக்கற நர்சிங் ஓம் கீது. அங்கனே நிப்பாட்டுறேன். துட்டு செலவாவும். ஆனா ஓர் உயிரு பொழக்கும். இன்னா சொல்றே?"

அப்போதைய மனநிலையில் சந்திரன் எதற்கும் தயாராகவே இருந்தான். அடுத்தத் தெருவில் புதிதாக முளைத்திருக்கும் ஒரு குட்டி நர்ஸிங்ஹோம். வரவேற்பறைக்குள் சென்று அவன் சொன்னதும், வெளியே ஓடி வந்த நர்ஸ் பரபரப்பாக உள்ளே பாய்ந்து சென்றாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் ஸ்ட்ரெச்சர் சகிதம் ஆட்கள், அந்தப் பெண்ணைத் தூக்கியபடி உள்ளே பறக்க, அல்லோலகல்லோலப்பட்டது. திடும்மென நினைத்துக் கொண்டவளைப் போல, வெளியே வந்து எட்டிப் பார்த்த நர்ஸ், "ஸார்! ரிஸப்ஷன்ல உங்க அட்ரஸ், பேரு சொல்லிட்டு, ரிஜிஸ்தர் செய்திட்டுப் பணத்தைக் கட்டிட்டுப் போங்க. முன் பின் தெரியாத கேஸை நாங்க எடுக்கறதில்லே. இது ரொம்ப அர்ஜெண்ட்" சொல்லியபடியே உள்ளே ஓடிச் சென்று மறைந்துவிட்டாள்.

"கையில பர்ஸ்கூட எடுக்கலேப்பா" சவரிமுத்துவிடம்

தயங்கியபடி கைகளைப் பிசைந்தான் சந்திரன். வாயிற் கதவை அவசரமாகப் பூட்டிய சாவிதான், சட்டைப் பையினுள் இருந்தது.

"வாத்யாரே. பெரிய டாக்டரம்மாவை எனக்குத் தெரியும். நீ சும்மா குந்து. நாளைக்கிக் கட்டிடலாம் துட்டே" அலட்சியமாகக் கூறிவிட்டு, வீடு திரும்பிய சந்திரனின் மனத்தில் ஒரு நெருடல். ரிக்ஷாவிலிருந்து அந்தப் பெண்ணை இறக்கும் போது நன்கு கவனித்து விட்டிருந்தான். நெற்றி நிறைய குங்குமம் மட்டுமே அணிகலனாக, நைந்து போன ரவிக்கையும், நூல் சேலையுமாகக் கழுத்தும், காதும் வெறிச்சோடிக் கிடக்க... கழுத்தில் மஞ்சள் கயிறுகூட இல்லாமல் ....ஒருவிதமான அதிர்ச்சி அவனை ஆட்கொண்டது. இவள் கழுத்தில் வெறும் உரிமைக் கயிறில்லாதவளாக அதாவது ஒரு கன்னித் தாயாக... அப்படியானால் சமூகம் மறுக்கின்ற, மறுக்கப் போகிற ஒரு குழந்தைக்கு அவள் தாயாகப் போகிறாளோ!

வீடும், ஆபீஸுமாக நாற்பத்தெட்டு மணி நேரங்களை அவன் குழப்பத்தில் தள்ளினான். இந்தச் சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாது. அதுவும், அவனுக்குத் திருமணம் நிச்சயமாகப் போகும் இந்த நேரம் பார்த்து... சே. சே! கூடவே கூடாது! மறக்க முயன்று அந்த நினைப்பிலிருந்து தப்பிக்கப் பார்த்தான்.


அன்று மாலை சவரிமுத்து, தெருமுனை திரும்பும்போதே சந்திரனை மடக்கிவிட்டான்.

"இன்னா வாத்யாரே நர்சிங் ஓம்ல கண்டுக்கினு வந்தியா? ஏதாச்சும் 'நியூஸ்' கெடச்சிதா?"

அவன் பதில் பேசவில்லை. மனிதநேயம் உள்ளவனாக இருந்திருந்தால் மறுநாளே அவன் போய் பணம் கட்டி, விசாரித்திருக்க வேண்டும். தலைக்கு வந்தது, தலைப் பாகையோடு போயிற்று என்ற சுயநலமா அல்லது ஊர் வம்பு நமக்கெதற்கு என்ற பயமா? அப்பன் பெயர் தெரியாத அநாதைக் குழந்தையோடு உறவு எதற்கு என்ற அச்சமா? எது? எது? எது?

"கம்னு கீறே. பாவம்பா. போய் பணத்தைக் குடுத்து தருமம் செய்பா. வா" சவரி முத்துவின் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை.

ரிசப்ஷனில் உள்ள பெண் அவனை விநோதமாகப் பார்த்தாள். "என்ன ஆள் ஸார் நீங்க, திடும்னு அட்வான்ஸ் கூடக் குடுக்காம ஓடிட்டீங்க? நீங்க வந்தா, பெரிய டாக்ட



ரம்மா உங்களை உடனே பாக்கணும்னாங்க" அவன் பதிலைக் கேட்க முற்படாமல் படபடத்துவிட்டு, இன்டர்காமில், பேசியவள் அவனைப் பாராமல், "கோடியில இருக்கற ரூம். டாக்டர் ராஜாமணி. நர்ஸிங் ஹோம் தலைவி. போய்ப் பேசிட்டு, பணத்தைக் கட்டிட்டுப் போங்க" கடுமையாக முடித்துவிட்டுப் புத்தகத்தில் ஆழ்ந்தாள்.

டாக்டர் ராஜாமணி, முழுநீள வைத்தியப் பட்டங்களைச் சுமந்து நின்ற பலகை பதித்த அறைக்குள் தடித்த கண்ணாடியும், உடம்புமாக அமர்ந்திருந்தார்.

"கம் இன்" அதட்டலான குரலில் அழைத்ததைத் தொடர்ந்து,கண்ணாடி வழியே கூர்மையான அவனைப் பார்த்தபடி, "உட்காருங்க" என்றதும், சப்தநாடியும் ஒடுங்கிப் போனான் சந்திரன்.

"நீங்கதான் அந்தப் பெண்ணோட கணவரா?"

இடியால் தாக்குண்ட நிலை. சந்திரன் துள்ளி எழுந்தான். "நோ... டாக்டர்.. நோ" அலறினான்.

"நினைச்சேன்! இந்தக் கால வாழ்க்கை ஒப்பந்தமா?" டாக்டரது உதடுகளில் கேலிப் புன்னகை.

"எ... எனக்கு.. நிசம்மாவே ஒண்ணும் தெரியாது டாக்டர்" தொண்டை வரள, நடந்தவற்றைக் குறைவாகக் கூறி முடித்தான் அவன்.

"அதான் அவ ஓடிப் போயிட்டா."

"ஓடிப் போய்ட்டாளா?"

"மிஸ்டர்..."

"சந்திரன்..."

"அ! மிஸ்டர் சந்திரன்! நீங்க அட்மிட் செய்த பெண் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாகிட்டா. எது கேட்டாலும் பதில் பேசாம அழுதுகிட்டே இருந்தா. மயக்கமானாப்போல நடிச்சா. நேத்து படுக்கையில இருந்து 'டிமிக்கி' கொடுத்திட்டு மாயமா மறைஞ்சிட்டா. சரி நீங்களாச்சும் வந்தீங்கன்னா உங்க குழந்தையை எடுத்துக்கிட்டுப் போகச் சொல்லலாம்னு பாத்தா, புதுசா கதை சொல்றீங்க". டாக்டரின் குரலில் சந்தேகம்...

"ப்ளீஸ்! சத்தியமாய் என்னை நம்புங்க. வேணுமானா, என்கூட வந்த ரிக்ஷாக்காரன் சவரிமுத்துவைக் கேளுங்க. தருமம், நல்ல காரியம்னு நெனச்சுத்தான் இதைச் செய்தேன். 'பீஸ்' வேணா கட்டிடறேன். ஆனா... குழந்தையை எங்கிட்ட குடுத்திடாதீங்க, ப்ளீஸ்" நடுக்கம் அவனை உட்காரவிடவில்லை.

டாக்டரின் முகத்தில் கடுமை. "ஒரு நிமிஷம் என்கூட வாங்க." நாய்க் குட்டியாகப் பின்னால் வெளியே வந்தவனை, வாயிற்புறம் நின்றிருந்த சவரிமுத்து பார்த்துவிட்டு ஓடோடி வந்தான்.

"தாயும், கொளந்தையும் சுகமா?".

சந்திரன் பற்களைக் கடித்து உறுமினான். "பெரிய வம்பை விலைக்கு வாங்கிகிட்ட குழந்தை நலமே".

ஒன்றும் புரியாத சவரிமுத்து அவர்களைத் தொடர்ந்து ஓர் அறைக்குள் சென்றான். ஒரு மூலையில் நின்றிருந்த இரும்புத் தொட்டிலில், மனதே இரும்பாகிப் போன மனிதர்களை அறியாத அந்தச்சின்ன உயிர், கையையும், காலையும் அசைத்தபடி அழுது கொண்டிருந்தது.

"தயவு செஞ்சு இந்தக் குழந்தையை எடுத்திட்டு போயிடுங்க மிஸ்டர் சந்திரன். எங்களால ஆயிரம் கேள்விங்களுக்குப் பதில் சொல்லிட்டிருக்க முடியாது. அநாதை ஆஸ்ரமம் போலீஸ்னு விவகாரம் பெரிசாச்சினா, எங்க நர்சிங் ஹோம் பேர் கெட்டுடும். நான் பீஸ் வேணா வாங்கலே. ஆனா, இந்தக் குழந்தை மட்டும் வேணாம்."

"ஐயையோ! என்னால முடியாது. நான் பிரம்மசாரி. கலியாணமாகப் போறவன்..." அலறினான் சந்திரன்.

குழந்தை வீரிட்டது. நர்ஸ் ஒருத்தி மலர்போல அதை வாரி எடுத்து சந்திரனிடம் கொடுக்கப் போனாள். "வேணாம். வேண்டவே வேண்டாம்" என்று அலறினான்.

"இன்னாபா இது? அல்லாருமா சேந்து ஒரு பச்சைப் பூவை ஏலம் உட்றீங்க. குடுபா... இப்டி..." வெடுக்கென நர்ஸிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டான் சவரிமுத்து.

யாவரும் வியப்புடன் அவனைப் பார்க்க, "எங் குடிசையில நாலு வளருது. அத்தோட அஞ்சா வளரட்டும். கௌம்பு வாத்யாரே" அதட்டினான் அவன்.

"சவரிமுத்து. அது என்ன ஜாதியோ. உன்னால காப்பாத்த முடியுமா? நல்லா யோசிச்சுப்பாரு. எங்காச்சும் அனாதை ஆஸ்ரமத்தில விட்டுரலாம்" சந்திரன் பதறினான்.

அங்கிருந்தவர்களை சிங்கம் போல் உற்றுப் பார்த்தான் சவரிமுத்து. "தபாரு, நான் கிறித்தவன். ஒத்துக்கறேன். ஆனா நா மனுசன். இந்தக் கொளந்தை மனுச சாதி. அதிலயும், இந்த ஊர்ல, மண்ல பொறந்த மனுச சாதி, பொறப்படுவியா... இன்னாவோ சொல்லிக்கினு" துரிதப்படுத்தியபடி வெளியே இறங்கினான்.

மனம் கூசி, குறுகியபடி பின்னால் நடந்து சென்றான் சந்திரன்.

	செவ்		சூரி, புத சுக், கே
	கிரக நிலை		
சனி(வ)			குரு
ராகு			

கிரக மாறுதல்

22-6-1992 முதல் கடக – புதன்,
8-7-1992 முதல் கடக – சுக்கிரன்.

கிரக பாதசாரம்

சூரியன் – மிருகசீரிஷம் 3, சந்திரன் – கேட்டை 4, செவ்வாய் – அசுவினி 2, புதன் – திருவாதிரை 3, குரு – பூரம் 1, சுக்கிரன் – மிருகசீரிஷம் 3, சனி – அவிட்டம் 1 (வக்ரி), ராகு – மூலம் 3, கேது – திருவாதிரை 1.

மேஷம்: (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் அறிவுத்திறமை பளிச்சென்று பிரகாசிக்கும். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும். பொருள்வரவு கூடும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபட்டு மற்றையோரின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள். சமூகத்தில் உயர்மதிப்புள்ளவர்களால் போற்றப்படுவீர்கள். முன்னேற்றத்திற்கான தகவல் கிடைக்கப் பெறுவீர்கள். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். அரசியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குத் திறமைக்குரிய வரவேற்பு கிடைத்துவரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மக்கள் நலம் சீர்பெறும். மக்களால் ஓரிரு செலவுகளும் உண்டாகும்.

தந்தையால் அனுகூலம் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். உடனபிறந்தவர்கள் அளவோடு உதவி புரிவார்கள். 10இல் சனி வக்கிர நிலையில் சஞ்சரிப்பதால் அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கவே

15-6-1992 முதல் 15-7-1992 வரை

உங்கள் ராசி பலன்

செய்யும். சோர்வுக்கு இடம் தராமல் சுறுசுறுப்புடன் பாடுபட்டால் கூடுதலான நன்மைகளை அடையப் பெறமுடியும். அந்தஸ்தும், மதிப்பும் உயர்வடையச் சந்தர்ப்பம் உண்டு. 22 ஆம் தேதி முதல் மாணவர்கள், வியாபாரிகள், கணிதத்துறையாளர்கள் ஆகியோர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். கடல் வாணிபம் லாபம் தரும். ஜூலை 8 ஆம் தேதி முதல் கணவன், மனைவியிடையே சலசலப்புகள் உண்டாகும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சேர்க்கை ஓரளவு நலம் தரும். ஜூன் 17,18,19,21,24, 25,27,28,29 ஜூலை 2,4,5,6,9,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத்திசை அனுகூலமானது. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடும், பக்குவத்தோடும் ஈடுபடுவது அவசியமாகும். பொருளாதார நிலை வளர்ச்சி பெறும் என்றாலும் திடீர்ச்செலவுகளும் ஏற்படும். சிக்கனத்தைக் கையாள்வது நல்லது. வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க வேண்டாம். உடல் ஆரோக்கியம் ஒருநாள் போல் மறுநாளிராது. நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். நெருங்கிய நண்பர்கள் ஓரிருவர் உதவ முன்வருவார்கள். மக்கள்நலம் சீர்பெறும். குடும்பத்தாரிடம் அன்புடன் பழகிவருவதன் மூலம் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாக முடியும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். வியாபாரிகளுக்கு வளர்ச்சி தென்படும். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் முன்னேற்றம் காணமுடியும்.

கணவன், மனைவியிடையே சிறுசிறு பிரச்சனைகள் எழும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு நலம் தரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும்

பாலஜோசியர்
வித்வான். வே. லட்சுமணன்

மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினியர்களும் பொறுப் புணர்ந்து காரியமாற்றினால் முன்னேற்றம் காண இயலும். 22 ஆம் தேதி முதல் வியாபாரிகள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் சிறுசிறு சங்கடங்களுக்கு ஆட்பட நேரும். ஜூலை 8 ஆம் தேதிக்குப் பிறகு நல்ல தகவல் ஒன்று வந்துசேரும். சிறு பயணம் ஒன்றை மேற்கொள்ள வும், அதன்மூலம் நலம் பெறவும் வாய்ப்புண்டாகும். உடன்பிறந்தவர்களால் அதிகம் நன்மையை எதிர் பார்க்க முடியாது. ஓரிரு தொல்லைகளுக்கும் அவர்களால் ஆட்பட வேண்டி வரும். வேற்று மொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். ஜூன் 18,19,20,21,24,25,28,29 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். 5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

ராசிநாதனாகிய புதனும், லாபாதிபதியாகிய செவ்வாயும் வலுப்பெற்றிருப்பதால் அந்தஸ்தும், கௌரவமும் உயர்வடையும். எதிர்ப்புகள் என் பவை ஓரிரு கோணங்களில் ஏற்படுமென்றாலும் அவற்றைச் சமாளிக்கக்கூடிய பக்குவம் உண்டாகும். ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப் படும். மாணவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சி யைக் காண்பார்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களால் அனுகூலமேற் படும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். வழக்கு, விவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். செந்நிறப் பொருட்கள் ஆதாயம் கொண்டுவரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை புரிவார்கள். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன் னேற்றமான சூழ்நிலை உதயமாகும். உற்றார், உறவினர்களாலும், நெருங்கிய நண்பர்களாலும் நலம்பெற வாய்ப்புண்டாகும். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும்.

ஜன்மத்தில் கேதுவும், 3இல் குருவும், 8இல் சனியும் உலவுவதால் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். பொருளாதாரநிலையில் விசேடமான வளர்ச்சியைக் காணமுடியாமல் தடைபேற்படும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். தந்தை நலனிலும், வாழ்க்கைத் துணை நலனிலும் அக்கறை தேவைப்படும். மக்கள் நலனும் கவனிக்கப்பட வேண்டிவரும். 22 ஆம் தேதி முதல் பொருளாதார நிலையில் ஓரளவு வளர்ச்சி உண்டாகும். குடும்பத்தில் நற்காரியம் நிகழுவதற்கு இடமுண்டு. ஜூலை 8 ஆம் தேதி முதல் மக்களால் நலமேற்படும். நற்பணிகளுக்காகச் செலவு செய்ய வும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் வாய்ப்புண்டாகும். குரு, சனிப் பிரீதியான காரியங் களில் ஈடுபடுவதன் மூலமாகவும், பெரியவர்களின் நல்ல யோசனைகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் செயலாற்றுவதன் மூலமாகவும் நலம் பெற முடியும். ஜூன் 21,24,25,27,28,29 ஜூலை 2,4,6,9,10,14 தேதிகள் அனுகூலமானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். கடக, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம்: (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

விரயத்தில் கூடியுள்ள கிரகங்கள் சிறுசிறு இடையூறுகளை அவ்வப்போது ஏற்படுத்திய வண்ணமிருப்பார்கள். உடல்நலம் சீராக இராமல் போகும். கைப்பொருளை இழக்கவோ, திடீர்ச் செலவுகளைச் சந்திக்கவோ நேரும். இடம் விட்டு இடம் மாறவும் காரணம் உண்டு. குரு, செவ்வாய் ஆகியோரது அனுகூலமான நிலை காரணமாக மோசமான நிலை என்று ஏதும் ஏற்பட்டுவிடாது. குடும்ப நலம், மக்கள் நலம், சகோதர நலம் யாவும் சீராகவே இருந்து வரும். தொழில்துறையில் வளர்ச்சி காண மார்க்கம் உண்டாகும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் உண்டு. பொன்நிறப் பொருட்கள் லாபம் தரும். பிறருக்கு உதவும் மனப்பான்மை கூடும். அதுபோல் மற்றவரால் நீங்களும் நலம் பெறமுடியும். வெளிநாட்டுத் தொடர்பு நன்மை தரும். ஆன்மிகம், மருத்துவம், இரசாயனம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண் பார்கள்.

தெய்வப்பணிகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ வாய்ப்புண்டு. பயணம் பயன்படும். சட்டம், காவல், இராணுவம், மின் சாரம், நெருப்பு போன்ற துறைகளில் பணியாற்று பவர்கள் சுபிட்சம் காண்பார்கள். ரியல் எஸ்டேட் இனங்கள் லாபம் தரும். வாழ்க்கைத்துணைநலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும். 22 ஆம் தேதி முதல் கணிதம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இருட்டிவிருந்து வெளிச் சத்திற்கு வருவார்கள். கடல்வாணிபம் லாபம் தரும். சிந்தனை ஆற்றல் கூடும். ஜூலை 8 ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். நூதன முயற்சிகள் கூடிவரும். நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. ஜூன் 17,18,19,24,25,27,28,29 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அதிர்ஷ்டமானவை. சிம்மம், மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம்: (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

11 ஆம் இடத்தில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். துணி வோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறு வீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் மூலமாக

வருவாய் கிடைக்கப் பெற முடியும். வியாபாரிகள் சுபிட்சம் காண்பார்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வளர்ச்சி கூடும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். மாணவர்கள், கணிதத்துறையாளர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். ஞானமார்க்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள்.

தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். பொது நலப்பணியாளர்களும், அரசியல்வாதிகளும் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அனுகூலங்கள் உண்டாகும். அரசாங்கத்தாரால் எதிர்பார்த்த ஓரிரு காரியங்கள் நிறைவேறும். கொடுக்கல் – வாங்கல் இனங்கள் ஆக்கம் தரும். வேலை வாய்ப்பைத் தேடி அலைபவர்கள் தகுந்ததொரு வேலை கிடைக்கப் பெறுவார்கள். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை கனிந்துவரும். 22 ஆம் தேதி முதல் பொருளாதாரநிலையில் ஒரு தொய்வு உண்டாகும். குடும்பநலப்பணிகளுக்காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள வேண்டிவரும். வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. ஜூலை 8 ஆம் தேதி முதல் சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. பெண்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்பட நேரலாம். இடமாற்றம் நிகழவும் கூடும். ஜூன் 17,18,19,20,21,26,28,29 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. மேஷ, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6,7,9 எண்கள் நலம் தரும்.

கன்னி : (உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோரது பலன் திருப்திகரமாக இல்லை என்பதால் மனச்சலனமும், பொருட்செலவும், அலைச்சலும் கூடும். மக்களாலும், உடன்பிறந்தவர்களாலும் பிரச்னைகளுக்கு ஆட்பட வேண்டிவரும். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோர் வளர்ச்சி காணமுடியாமல் தடைகளும், குறுக்கீடுகளும் உண்டாகும். கூரிய ஆயுதங்கள், எரி பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது பாதுகாப்பு அவசியம் தேவை. பயணத்தினால் அனுகூலமிராது. நண்பர்களால் செலவுகள் உண்டாகும். எதிர்ப்புகளின் கரம் ஓங்கியிருக்கும் என்றாலும் 10இல் உள்ள கிரகங்கள் அவற்றைச் சமாளிக்கக்கூடிய சக்தியை உங்களுக்கு வழங்குவார்கள். அரசாங்கத்தாரால் எதிர்பார்த்த ஓரிரு காரியங்கள் நிறைவேறும். அரசியல்வாதிகளும், சமூகநலப் பணியாளர்களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள்.

எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் புகழ் ஓங்கப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். சொந்தமாக வியாபாரம் செய்பவர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றினால் முன்னேற்றம் காண முடியும். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மந்தநிலை அகலப் பெறுவார்கள். மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். குடும்பலம் கவனிப்பின்பேரில் சீராக இருந்துவரும். தந்தையால் அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு லாபம் தரும். 22 ஆம் தேதி முதல் கடல் வாணிபம் செய்வோர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். ஜூலை 8 ஆம் தேதி முதல் சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்புண்டாகும். நூதனப் பொருட்சேர்க்கை நிகழும். கேளிக்கை உல்லாசங்களில் ஈடுபடும் சந்தர்ப்பம் கனிந்துவரும். பெரியவர்களின் ஆலோசனைகளை மதித்து ஏற்று அதன்படி நடப்பது நல்லது. ஜூன் 17,18,19,20,21,24,28,29 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. மிதுன, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். தென் கிழக்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. 5,6 எண்கள் நலம் தரும்.

துலாம் : (சித்திரை 3 ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் மனத்தில் நல்ல எண்ணங்கள் உருவாகும். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிடைக்கப் பெறுவீர்கள். புனித நதிகளில் நீராடவும் செய்வீர்கள். பயணம் பயன்தரும். நூதன நண்பர்கள் உதவ முன் வருவார்கள். அரசுப்பணிகள் ஆக்கம் தரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள். தரும காரியங்களில் ஈடுபாடு கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். மக்கள்நலம் சீர்பெறும். பொருளாதார நிலையில் திருப்திகரமான போக்கு இருந்து வரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்கள் அளவோடு லாபம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரப் பெறுவார்கள். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். கணவன், மனைவியரிடையே ஓரிரு பிரச்னைகள் உருவாகும் என்பதால் பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது.

கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டால் வளர்ச்சி காணமுடியும். எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். பொன் நிறப்பொருட்கள் ஆதாயம் கொண்டுவரும். 4இல் சனியும், 7இல் செவ்வாயும் சஞ்சரிப்பதால் எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல்

பொறுமையுடன் ஈடுபடுவது நல்லது. அலட்சியப் போக்கு என்பது அடியோடு கூடாது. உடல் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். 22ஆம் தேதி முதல் வியாபாரம் அபிவிருத்தி அடையும். கணிதத் துறையாளர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். மாணவர்களது நிலை உயரும். ஜூலை 8ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிவரும். பெண்களால் ஓரிரு தொல்லைகளுக்கு ஆட்படவும் நேரலாம். நீண்ட நாளாகத் தேங்கியிருந்த காரியம் ஒன்று இந்த நேரத்தில் நிறைவேறும். ஜூன் 17,18,19,20,21,24,25 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. 3,5 எண்கள் அதிர்ஷ்டமானவை. மிதுன, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

ராசிநாதனாகிய செவ்வாயும், சனியும் பலம் பெற்று உலவுவதால் உங்கள் ஆற்றல் வெளிப்படும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய காரியங்களில் ஈடுபட்டு வெற்றி வாய்ப்பைப் பெறுவீர்கள். பொதுநலப்பணியாளர்கள் நற்பெயர் பெறுவார்கள். எதிரிகளின் கரம் வலுவிழக்கும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் வெற்றி பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துக்களால் நலம் பெறமுடியும். புதிய பொருட் சேர்க்கைக்கு இடமுண்டு. தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், இயந்திரப் பணியாளர்கள் ஆகியோர் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைப் பெறுவார்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். வியாபாரம் அபிவிருத்தி அடையும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். நெருங்கிய நண்பர்கள் ஓரிருவரால் நலம் பெற வாய்ப்புண்டாகும்.

2இல் ராகுவும், 8இல் கேதுவும், சூரியனும் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியம் ஒருநாள்போல் மறுநாளிராது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. உஷ்ணாதிக்கம் கூடும். அரசாங்கத்தாரால் ஓரிரு பிரச்னைகளைச் சந்திக்க வேண்டிவரும். தந்தை நலனில் அக்கறை செலுத்தி வருவது நல்லது. பிற மொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புக்கள் உண்டாகும். பக்குவத்தோடும், விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தோடும் பழகிவருவது நல்லது. வாழ்க்கைத்துணை நலனிலும், உடன்பிறந்தவர்கள் நலனிலும் கவனம் தேவைப்படும். பொருளாதாரநிலை வளர்ச்சி பெறும் என்றாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். 22ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. ஜூலை 8ஆம் தேதி முதல் வாழ்க்கைத்துணைவரால் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கை வசதிகள் கூடும். புதிய பொருட்களின் சேர்க்கைக்கும் இடமுண்டு. ஜூன் 17,18,19,20,21,24, 25,26,27,28 ஜூலை 2,4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. மேற்கும், தெற்கும் அனுகூலமான திசைகள் ஆகும். மகரம், மேஷம் ஆகிய ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் 9இல் அமர்ந்து உங்கள் ராசியையும், 5இல் உள்ள செவ்வாயையும் நோக்குவதால் அறிவாற்றல் கூடப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீர்பெறும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும். பணவரவு திருப்திகரமாக இருந்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் கூடுதலான வருவாய் கிடைக்கப் பெறுவார்கள். சகோதர நலம் சீர்பெறும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். பொதுநலப் பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். நிலம், மனை, வீடு போன்ற இனங்களால் அனுகூலம் உண்டாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் கூடுதலான நன்மைகளைப் பெறுவார்கள்.

தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். முக்கியஸ்தர்களது தொடர்பால் நலம் பெறுவீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடன் வியாபாரம் செய்பவர்கள் கூடுதலான ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள். 7இல் கூடியுள்ள கிரகங்கள் அலைச்சலை அதிகரிக்கச் செய்வார்கள். வாழ்க்கைத்துணை நலனில் அக்கறை செலுத்தப்பட வேண்டிவரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாக நடந்து கொண்டால் முன்னேற்றம் காண முடியும். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் சீரான வளர்ச்சியைப் பெற்று வருவார்கள். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கெல்லாம் மதிப்பு உயரும். ஜூலை 8ஆம் தேதி முதல் கலைத்துறையாளர்களுக்கு மந்தநிலை அகன்று சுறுசுறுப்பான சூழ்நிலை உதயமாகும். ஜூன் 17,18,19,20,21,24,25,26,27, 28,29 ஜூலை 4,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத்திசைகள் அனுகூலமானவை. மேஷ, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் விசேடமான விளைவுகளை

நீங்கள் எதிர்பார்க்க இயலாமல் போகும். மனத்தில் சலனம் குடிகொள்ளும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். பணநடமாட்டம் ஏற்றம், இறக்கம் கொண்டதாக அமையும். எதிர்பாராத செலவுகளும், இழப்புகளும்கூட ஏற்படலாம். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ விதையூன்றப்படும். கேளிக்கை, உல்லாசங்களில் பங்கேற்க ஓரிரு வாய்ப்புகள் கூடிவரும். நண்பர்களே விரோதிகளாகும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகாமல் இருப்பது அவசியம். பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. அவர்களின் ஆலோசனைகளை மதித்து, அதன்படி செயலாற்றுவதன் மூலம் பிரச்னைகளிலிருந்து விடுபட வாய்ப்புண்டாகும். அலட்சியப்போக்கு என்பது அடியோடு கூடாது. பயணத்தின் போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் பாதுகாப்பு அவசியம்.

அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், பொதுநலவாதிகள் ஆகியோர் நற்பெயர் பெற வாய்ப்புக் கூடிவரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களால் வருவாய்க்கு இடமுண்டு. வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான முன்னேற்றம் தடைப்படாது. சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டிவரும். பொதுவாகப் பெண்களால் ஓரிரு சங்கடங்களுக்கு ஆளாக நேரலாம்; எச்சரிக்கை. வாழ்க்கைத்துணைநலம் கவனிக்கப்படவேண்டிவரும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவத்துடன் நடந்து கொள்வது நல்லது. நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைத்துவரும். மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்தினால் முன்னேற்றம் காண வழிபிறக்கும். வேற்றுமொழிக்காரர்கள் உதவ முன்வருவார்கள். ஜூன் 18,19,21,24,25,26,28,29 ஜூலை 2,6,9,10,11 தேதிகள் சிறப்பானவை. கிழக்கும், வடக்கும் நலம் தரும் திசைகளாகும். மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,7 எண்கள் அனுகூலமானவை.

கும்பம் : (அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)

தெய்வபலம் என்பது உங்கள் பக்கபலமாக இருக்கும் நேரமிது. அறிவாற்றலோடும், துணிவோடும், தன்னம்பிக்கையோடும் எடுத்த காரியங்களில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் லாபம் தரும். முக்கியஸ்தர்களது தொடர்பு காரணமாக ஓரிரு எண்ணங்களை ஈடேற்றிக் கொள்வீர்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். செய்தொழிலில் அபிவிருத்தி காணச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். பொருளாதார நிலை உயர்வடையும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களுக்கும் இடமுண்டு. பயணத்தால் ஒரு காரியம் ஈடேறும். வேற்றுமொழி, மதக்காரர்களால்

அனுகூலம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரது தொடர்பு ஆக்கம் தரும். அரசாங்கத்தார் மூலம் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் பாராட்டுக்களுக்கு உரியவர்களாவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடு வார்கள். மக்கள்நலம் மகிழ்ச்சி தரும். கணவன், மனைவியரிடையே களிப்புறவு கூடும். பொன், வெள்ளி, இரத்தின வியாபாரிகளுக்கும், பொருள் நடமாட்டமுள்ள இடங்களில் பணியாற்றுபவர் களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். எதிர்பாராத ஓரிரு செலவுகள் அவ்வப்போது ஏற்படும். சிக்கனத்தைக் கையாள் வது நல்லது. 22ஆம் தேதி முதல் வியாபாரம் வளர்ச்சி பெறும். ஜுலை 8ஆம் தேதி முதல் கலைஞர்களும், மாதர்களும் சிறுசிறு சோதனை களைச் சந்திக்கவேண்டிவரும். ஜுன் 17,18,19,20,21, 24,25,27,28,29 ஜுலை 2,4,5,8,9,10,11,14 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத்திசைகள் அனு கூலமானவை. மிதுன, சிம்ம, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

11இல் உள்ள சனி உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார். எதிரிகளின் கரம் வலுவிழக் கும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத் தைக் காண்பீர்கள். தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணி புரிபவர்கள் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார் கள். கறுப்பு நிறப் பொருட்கள் லாபம் தரும். பொதுநலப்பணியாளர்கள் பாராட்டுக்களுக்கு உரிய வர்களாவார்கள். அன்றாடப்பணிகள் சீராக நடந்து வரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். மாண வர்களது நிலை உயரும். நிலம், மனை, வீடு, வாக னம் போன்ற ஸ்திரச்சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கப் பெற முடியும். நூதனப் பொருட் சேர்க் கைக்கும் இடமுண்டு. வியாபாரிகள் சுபிட்சம் காண் பார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றமான சூழ் நிலைக்குக் கொண்டு செல்லப்படுவார்கள்.

சூடான வார்த்தைகளை உதிர்க்காமல் யாரிடத் திலும் அன்புடன் பழகுவதன் மூலம் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் செல்வாக்கைக் காப் பாற்றிக் கொள்ளமுடியும். பெற்றோர் நலம், மக் கள் நலம் ஆகியவற்றில் கவனம் தேவைப்படும். நண்பர்கள், உற்றார், உறவினர்கள் சேர்க்கையால் அனுகூலத்திற்கு இடம் உண்டு. கேளிக்கை, உல்லா சங்களில் ஈடுபடவும் வாய்ப்புகள் கூடிவரும். அலு வலகங்களில் பணிபுரிபவர்கள், அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் பொறுப் புக்களைச் சரிவர ஆற்றிவருவது நல்லது. மருத்து வர்களுக்கும், இரசாயனத்துறைகளைச் சேர்ந்தவர் களுக்கும் முன்னேற்றம் தடைப்படும். வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு நலம் தரும். நற்பணிகளுக் காக ஓரிரு செலவுகளை மேற்கொள்ள நேரலாம். 22ஆம் தேதி முதல் வியாபாரிகள் விழிப்புடன் இருப் பது நல்லது. ஜுலை 8ஆம் தேதி முதல் எதிர் பாராத ஓரிரு நன்மைகள் உண்டாகும். குரு பிரீதி யான காரியங்களில் ஈடுபட்டுவருவது நல்லது. ஜுன் 17,18,19,24,25,26,28,29 ஜுலை 2,4,6,10,11 தேதி கள் சிறப்பானவை. மேற்கும், வடக்கும் அனுகூல மான திசைகளாகும். மிதுன, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ஃ

கங்காபுரிக் காவலன்

22. கண்டது என்ன?

வெயில் வேளைக்கு அந்தக் காட்டுப் பகுதி குளுமையை அளித்தது.

சக்கரவர்த்தி இராஜேந்திரன் கரம் பிடித்த அரசிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச் சிக்குக் குறைவில்லை.

"மாளிகையில்கூட இத்தகைய சுகம் ஏற் படாது என்று கூறினாள் ஓர் இளவரசி. ஐம்பது அகவையைக் கடந்துவிட்ட அவர் களால் வெப்பத்தைத் தாங்க முடிய வில்லை.

"பஞ்சணை தராத சுகத்தை இந்த மெத் தென்ற புல் தரை தருகிறது" என்று இயற்கை இரத்தினக் கம்பளத்தைப் புகழ்ந் தாள் ஓர் இளவரசி.

"அப்படியென்றால் புல்லைக் கட்டு கட்டாகக் கோணியில் அடைத்து மஞ்சத்தில் பரப்பிவிட ஏற்பாடு செய்வோம்" என்று கூறினாள் பட்டத்து அரசி.

"அந்த மென்மையை நான் அறிவேன். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை தஞ்சையிலிருந்து திருவையாற்றிற்கு, கோயில் திருப்பணியைக் காணச் சென் றேன். இரட்டைக்காளை பூட்டிய வண்டி ஏற்பாடு செய்திருந்தார்கள். பட்டு விரிப்பு; அடியில் பசும்புல் அடைக்கப்பட்ட மெத்தை. ஆகா! அந்தச் சுகத்தை இப்போது நினைத் தாலும்..." என்று தன் அனுபவத்தை விவ ரித்தாள் பஞ்சவன் மாதேவி.

அந்த இடத்திலேயே அவர்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

இராசேந்திர சோழரும் விருந்தில் கலந்துகொண்டார். அவர்களுக்கு எதிரே தேக்கு மரத்தால் செய்த சிறு மஞ்சம். அதில் நுனி வாழை இலை விரிக்கப் பட்டிருந்தது.

விக்கிரமன்

வனப்பகுதியிலும் இப்படியொரு மாளிகை விருந்தா? இளவரசிகள் வியப் படைந்தனர்.

வீரமாதேவி ஒவ்வொருவரிடமாகச் சென்று விருந்தோம்பிய பாங்கு அவர் களுக்கு வியப்பை அளித்தது.

"வீரம்மா! பந்தி உபசரணை முடிந்ததா? நீ இப்படி வந்து உட்கார்" என்று தன் அருகே இருந்த இடத்தைச் சுட்டினார் சக்கரவர்த்தி.

வலப்புறம் அரசி. இடப்புறம் உள்ள இடம் யாருக்காக என்று ஒவ்வொருவரும் தமக்குத்தாமே கேட்டுக் கொண்டதற்கு விடை கிடைத்துவிட்டது.

அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. கம்பீரமாக நடந்து வீரம்மாள் அரசர் அருகே வந்தமர்ந்தாள்.

கையில் எடுத்த கவளம் அப்படியே இருக்க, விழிகள் அங்கே நிலைத்து இருக்க, பொறாமையா ஆத்திரமா அதிர்ச் சியா என்று இனம் புரியா உணர்வுத்தீ கொழுந்து விட்டெரிய அவர்கள் அரசரை யும், வீரமாதேவியையும் மாறி மாறிப் பார்த்தவாறிருந்தனர்.

இராசேந்திர சோழர் வீரமாதேவியிடம் ஏதோ கூறினார். அவளும் உடன் ஏதோ மறுமொழி கூற, அரசர் 'ஹோ ஹோ' என்று பெரிதாக நகைத்தார்.

அவர் நகைத்தது, இளவரசிக்கும் அர சிக்கும் தணலை அள்ளித் தெளித்தது போலிருந்தது.

அவர்களால் அந்தச் சூழ்நிலையைத் தாங்க முடியவில்லை. அங்கே அமர்ந் திருக்கவும் முடியவில்லை.

வீரமாதேவியின் நிலை என்ன? அவளை எங்கோ கண்காணாத இடத்திற்கு அனுப்பி விட்டதாகச் சொன்னார்களே? இதுதான் கண்காணாத இடமா?

இங்கே இவள் என்ன செய்கிறாள்? சகல வசதிகளுடன் கூடிய இடத்தில் மகிழ்ச் சியாக இவள் இருப்பது எப்படி?


சக்கரவர்த்தியின் திட்டப்படி, இந்தக் காட்டுப்பகுதிக்கு வந்து தங்கியிருக்கிறாளா? இங்கு அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? இளவரசியர் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டனர்.

திடீரென்று வீரமாதேவியும் இராசேந்திரனும் அங்கிருந்து சிற்பியின் குடிலை நோக்கிச் சென்றது அவர்களுக்குத் தெரியாது.

"பார்த்தாயா, பார்த்தாயா! சக்கரவர்த்தியின் போக்கைப் பார்த்தாயா? அவளை அழைத்துக் கொண்டு எங்கோ சென்றுவிட்டார். இரண்டு நாள்கள் வனப் பகுதியில் மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்று நம்மை அழைத்து வந்தவர் இங்கு வந்தவுடன் மனம் மாறிவிட்டாரே பார்த்தாயா?" என்று ஓர் இளவரசி கூறினார். எரிச்சலும் வேதனையும் அதில் நிறைந்திருந்தன.

"வனப்பகுதியில் ஓர் ஆசிரமம் இருக்கிறது. அங்கே ஒரு தபஸ்வினி இருக்கிறாள். அவள் கலைத்தொண்டு ஒன்றே நோக்கமாகக் கொண்டு ஒரு வேள்வியாகக் கழித்து வருகிறாள். சோழ நாட்டின் பல பகுதிகளிலிருந்து பெண்கள் நாட்டியம் பயில அங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய நடனத்தைக் கண்டு களிக்கலாம் என்று சொல்லி அழைத்து வந்தார். ஆனால் இங்கு நடப்பதோ..?" என்றாள் பட்டத்து அரசி.

"வீரம்மாளின் சாகசம்தான் காரணமாக இருக்கவேண்டும். நாம் உடனே இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டும்".





"அவசரப்பட்டு முடிவெடுக்க வேண் டாம். இங்கே நாம் தங்கியிருக்கும் இரண் டொரு நாள்களிலேயே வீரம்மாளுக்குச் சரியான பாடம் கற்பிப்போம்".

"பாடமா..?"

"ஆமாம்... இங்கே உள்ள தபஸ்வினி என்று சொல்லப்படும் மாதரசியை எனக் குத் தெரியும். பூங்கொடி என்ற பெயரில் அவள் சில நாள்கள் தஞ்சை மாளிகையில் பணிப்பெண்ணாக இருந்திருக்கிறாள். வீரம்மாளைவிட நடனக் கலையில் ஆற்றல் மிக்கவள்.

"அவளைச் சந்தித்து வீரம்மாளைப் பற் றிய உண்மையைச் சொல்வோம். அவ ளுக்குப் போட்டியாக வந்திருப்பவள் என் பதை எடுத்துச் சொல்வோம்" என்று கூறிய வுடன், மற்றவர்கள் ஆமோதிக்கனர்





வனப் பகுதியில் குடில் அமைத்து அமைதியாகக் கலைப்பணி புரிந்து வரும் தலைவியைச் சந்திக்க அவர்கள் புறப் பட்டனர். உண்டபிறகு சிறிது நேரம் கண் ணுறங்கும் வழக்கம் கொண்ட இளவரசி யர்கள் சோர்வு மிகக் கொண்டுச் சென் றனர்.

அவர்களுள் மீனவன்மாதேவி என்ற பாண்டியர்க் குலத்தில் வந்த இளவரசிக்கு நீண்ட நாள்களாக ஆத்திரமும், பொறாமை யும் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்தது.

அவள் சிரித்தாள். "அக்காமார்களே! ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டிய நேரத் தில் - ஏன் இன்னும் சொல்லப் போனால் வயதில் - இப்படிப் பொறாமையுடன் அலை கிறோம். வீரம்மாளை ஒரு பொருட்டாக நினைப்பதே நம் நிலைக்கு ஏற்றதில்லை. நமக்கோ வயது நாளுக்கு நாள் அதிக மாகிக்கொண்டு வருகிறது; வம்பு எதற்கு?" என்றாள்.

"வம்பா?" அரசி சீறினாள்.'' வீரம்மாள் வீரமாதேவியாகிவிட்டாளே உனக்குத் தெரி யாதா? மகுட விழாவின்போது, அவளை எங்கோ அனுப்பிவிட்டதால், செய்தி தெரி யாது செய்துவிட்டதால் நாம் பிழைத்தோம். இல்லாவிடில், நம் அரசருடன் சரிசமமாக அந்தப் பசப்புக்காரி உட்கார்ந்திருப்பாள்" என்று கூறும்போது, மீனவன்மாதேவி குறுக்கிட்டு, "நாம் பிழைத்தோம் என்று எங்கள் எல்லோரையும் சேர்த்து ஏன் சொல்கிறீர்கள். உங்கள் பதவிக்குத்தான் போட்டி. உங்களை நீங்கள்தான் காப் பாற்றிக் கொள்ள வேண்டும். நான் வர வில்லை. நான் இந்தப் புல் வெளியில் பஞ்சணை மெத்தை என்ற மகிழ்ச்சியுடன் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள். எனக்குத் தெரிந்த வரையில் வீரம்மாளை உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது" என்று கூறினாள்.

அரசிக்குக் கோபம் பொங்கியது. "என்ன வார்த்தை சொல்லி விட்டாய்? பட்டத்தரசியாக நான் அரியணையில் சக்கர வர்த்தியோடு சரிசமமாக அமர வேண்டும் என்பது எப்போதோ முடிவாகிவிட்டது. பிரம்மா வந்தாலும் மாற்றமுடியாத ஒன்றை அந்தச் சின்னப் பெண் மாற்றிவிட முடியுமா! அவளை நீயே தூண்டிவிடுவாய் போலிருக்கிறதே..."

மீனவன்மாதேவி நகர்ந்து கொண்டாள். மற்றவர்கள் அங்கிருந்து அரசியைப் பின் தொடர்ந்தனர்.

அந்தப் போதில், வீரமாதேவியும் இராசேந்திரனும் சிற்பியின் குடில் எதிரே உள்ள மர நிழலில் அமர்ந்து பேசிக் கொண் டிருந்தனர். சிற்பி சற்றுத் தொலைவில் கைகட்டி நின்று கொண்டிருந்தான். அவர் கள் பேசுவது முழுமையும் அவன் செவி களில் விழவில்லை.

"இன்று நீ படைத்த விருந்து மிகவும் ருசி யாக இருந்தது" என்று அவர் ஒரு முறை யன்று இரண்டு, மூன்று முறைகள் சொல்லி விட்டார்.

ஏதாவது பேச வேண்டும்; வீரமா தேவியைப் பாராட்ட வேண்டும். சிறிது நேரம் அவரைச் சோதிக்க விரும்பினாள் வீரமாதேவி.

"நான்தான் பார்த்துக் கொண்டேயிருந் தேனே நீங்கள் எங்கே இலையைக் கவனித் தீர்கள்?" என்றாள் வீரம்மாள்.

"நான் கவனிக்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"நான் பார்த்துக் கொண்டே இருந் தேனே!"

"அப்படியென்றால் நீயும் வயிறு நிறைய உண்ணவில்லை."

"இல்லை... திருப்தியாக ஏற்றேன்... ஒவ் வொன்றிலும் இரண்டு இரண்டு..."

"இரண்டா... என் இலையில் ஒன்றுதானே பரிமாறினார்கள்".

"ஒன்றா... ஒன்றுகூட இல்லை. அதிரச மும் ஒன்றைக்கூட உங்கள் கண்ணில் காட்ட வில்லை. பாவம் அதன் ருசிகூட உங்க ளுக்குத் தெரியாது... இல்லை... இல்லை தெரியும்."

"அவ்வளவு இனிமையா? எனக்கு ஏன் போடவில்லை?"

"போட்டார்கள். நீங்கள் சிறிது சுவைத் தீர்கள்; மீதியை யாரும் கவனிக்காதபோது என் இலையில் போட்டுவிட்டீர்கள்..."

இராசேந்திரன் மெல்ல நகைத்தார். "ஒன்றுகூட மிச்சம் வைக்காமல் ருசித்துப் புசித்துவிட்டாய்..." என்று கூறி அவளைப் பார்த்தார்.

கடை விழியால் நோக்கியவாறு அவள் சொன்னாள் : "வாழ்க்கையில் கடைசி நுனி வரை ருசிக்க வேண்டும் என்று என் பாட்ட னார் சொல்லுவார்".

"ஓகோ... அவர் சொன்னதைக் கடைப் பிடிப்பதாகத் தெரியவில்லை. இந்த வனப் பகுதிக்கு அப்படியொரு மகிமை. என் சகோதரியும் முற்றிலுந் துறந்தவளாக இந்தக் கானகத்தில் வாழ்கிறாள். நீயும் அவளுடன் சேர்ந்து விட்டாய்."

"இல்லை... இல்லை... முற்றும் துறக்க வில்லை. எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வனப் பகுதியில் கலைக் காக வாழ்ந்து வரும் தலைவி அளித்த ஊக்கமே நானும் என் வாழ்க்கையைக் கடைசிவரை கலைக்குக் காணிக்கையாக்க முடிவு செய்திருப்பது. உங்களுக்குத் தெரி யாதா? கலை ஆர்வம் கொண்டவர்கள் வாழ்க்கையைத் துறந்தவர்களாக இருக்க மாட்டார்கள்.

"சுவை, ரசனை, ஈடுபாடு, ஆர்வம் யாவும் நிறைந்த நான் வாழ்க்கையை என்றும் ருசிக்க விரும்புபவள்தான்" என்றாள்.

"அப்படித் தெரியவில்லையே? வாழ்க் கையை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கடைப்பிடிப்பவளாகத் தெரியவில்லையே. சில காலத்திற்கு முன்பு நீ எடுத்த முடிவை மாற்றிக் கொண்டு விட்டாயா? வாழ்க்கை வாழ்வதற்கே என் பதை ஏற்றுக் கொண்டுவிட்டாயா?" இராசேந்திரன் மெல்லிய குரலில் கேட்டார்.

"ஆம். இசை, ஓவியம், நடனம் யாவும் வாழ்க்கைமீது நம்பிக்கை வைப்பதற்காக இறைவனால் படைக்கப்பட்டவை."

வீரம்மாள் இப்படிக் கூறியவுடன் இராசேந்திரன் சிரித்தார்.

ஏன் அவர் சிரிக்கிறார் என்பதைப் புரு வத்தை உயர்த்தி வினவினாள் வீரமாதேவி.

"நாட்டியக் கலை அரசியான நீ வாழ்க் கையை அனுபவிக்க விரும்பாமல் சபதம் செய்து விட்டாய். ஆனால் இசை, ஓவியம், நடனக் கலையில் மட்டும் ஈடுபடலாமா?" சரியானபடி வாதத்தில் அவளை மடக்கி விட்டதாக எண்ணினார்.

"நான் துறவியாகிவிட்டதாக என்றுமே சொல்லவில்லையே. உங்கள் மீது எனக்கு ஏற்பட்ட காதல் ஒவ்வொரு நாளும் வளர்ந்து வருகிறது. ஏழேழு பிறவியிலும் உங்களை அடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். உங்களுடன் இணைபிரியாது இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். அதற்கான வேளையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். இந்தக் கானகத்தில் கலைக் கோயில் உருவாகும்போது நாமிரு வரும் இணைபிரியாதிருப்போம். உமா தேவி, ஈசனின் மறுபாதியாக விளங்கு வதைப்போல் நாம் என்றும் இணைபிரியாது வாழ வேண்டும்" உணர்ச்சி பொங்க அவள் பேசினாள்.

சிற்பி கையைக் கட்டிக் கொண்டு சிலை போல் நிற்பதைக் கண்ட இருவரும் தாங்கள் பேசுவதை நிறுத்தி, சிற்பியை அருகே அழைத்தனர்.



அருகே உருவாகிக் கொண்டிருந்த சிற்பத்தைச் சுட்டிக் காட்டிய இராசேந்திரன் சிற்பம் எப்போது முடிவடையும் என்று கேட்டார்.

வரும் பௌர்ணமிக்குள் முடிவடைந்து விடும். அன்று சிலைக்குக் கண் திறந்து விட முடியும் என்று கூறினான்.

"ஞான சரஸ்வதியின் சிற்பத்தை வடிக்க உனக்கு ஊக்கம் எற்படக் காரணம் யார்?" என்று அரசர் வினவினார்.

சிற்பி மௌனமாக வீரமாதேவியை நோக்கினான்.

"ஓ! இந்த நடனக் கலைவாணி, ஞான சரஸ்வதியாக உருப் பெற்று விட்டாளோ? இவளை உன் மனத்திற்குள் புகச் செய்து கரத்தின் மூலம் கல்லிலே உருவாக்கி விட்டாய் அப்படித்தானே?"

சிற்பி ஆமோதித்தான்.

"நீ பாக்கியசாலி; வீரமாதேவி உன் உள்ளத்தில் அழியாது என்றும் விளங்குகிறாள் அப்படித்தானே?"

சிற்பி அவருடைய கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை.

"அதுவும் என் முன் பிறவிப் புண்ணியம் தான்" என்றான்.

"நான் அந்தப் புண்ணியத்தைச் செய்யவில்லை..." அரசருடைய பேச்சின் உட்பொருள் அறிந்து வீரமாதேவி துணுக்குற்றாள்.

இராசேந்திரன் சிற்பியைப் பார்த்துக் கேட்டார். "ஞான சரஸ்வதி சிற்பம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு எப்படித் தோன்றியது?"

சிற்பப் பணியில் ஆவல் கொண்டு அரசர் கேட்கிறார் என்று எண்ணிய சிற்பி மாணிக்க சேகரன் உற்சாகத்துடன், "இளவரசியின் கலை ஆர்வத்தை நான் நுட்பமாகக் கவனித்து வந்தேன். பாறைகளைத் தேர்வு செய்வதிலிருந்து, சிற்ப சாத்திரத்தைப் பற்றிய அடிப்படை அறிவை அறிய ஆவல் காட்டுவதிலிருந்து நான் அவர்கள் கலைத் தாகத்தைக் கண்டேன். ஒவ்வொரு சிற்பத்திற்கும் இலக்கணம் உண்டு. தெய்வச் சிற்பங்களைப் படைக்கும்போது தூய்மையான நினைவு வேண்டும். கடுமையான விரதம் காக்க வேண்டும்."

"ஓ! சரஸ்வதி தேவியை நீர் பார்த்திருக்கிறீரா?" இன்றும் சிவபெருமான், உமைதேவி, திருமால் இவர்களையெல்லாம் தரிசித்திருக்கிறீர்களா?"

"எந்தத் தெய்வமும் சிற்பிகளின் எதிரே தோன்றுவர். நாம் அவர்களை அழைப்பதில் இருக்கிறது. நம் தியானம், நம் அறிவு, நம் ஆற்றல் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

தியானம் செய்யும்போது எந்தத் தெய்வத்தை அழைக்கிறோமோ அந்த இறைவனை நினைக்கவேண்டும்."

சிற்பியின் இந்த விளக்கம் கேட்டு அரசர் மௌனமாக இருந்தார். பிறகு, "அறிவுச் சுடராம் கலைக்கு அதிபதி கலைமகளை மனக்கண் முன் நீங்கள் நினைத்தீர்களா?" என்று கேட்டார்.

"ஞான தேவதைச் சிற்பத்தைப் படைக்கும் ஆவல் எனக்கு ஏற்பட்டது. என் எண்ணத்துக்கு ஆதரவு தந்தவர் இளவரசி. அவர்களே ஞான தேவதையாக என் முன் தோன்றினார்."

"ஞான தேவதைக்குத்தான் அப்படி யாராவது ஒருவர் முன்மாதிரியாகத் தோன்றுவாரா அல்லது எல்லா இறைவன் உருவங்களுக்கும் அப்படித்தானா?"

மாணிக்க சேகரன் அரசரை நிமிர்ந்து நோக்கினான். "தெய்வங்களை வர்ணித்து எழுதப்பட்ட பதிகங்களும், மந்திரங்களும், சுலோகங்களும் ஓர் ஓவியத்தை உள்ளத்தில் வரைந்துவிடும். எங்கள் குருநாதர் கற்பித்துள்ள மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே இருக்கும்போது எதிரே ஓர் ஒளி நிறைந்த உருவம் தோன்றிவிடும்."

சோழச் சக்கரவர்த்தி இராசேந்திரன், சிற்பி பேசுவதைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

"ஞான சரஸ்வதி உங்கள் முன் தோன்றினாளா? அவள் வர்ணம் என்ன? வடிவம் என்ன?"

"பளிங்கு போன்ற மேனி, பவழச் செவ்வாய், தாமரைப் பூப்போன்ற கரங்கள், அல்லி போல் குளிர்விழி..."

அமுதசுரபி ஜுன் 67 — 25 ஆண்டுகளுக்கு முன்...

1967 ஆம் ஆண்டைய ஜூன் (ஆனி) மாத 'அமுதசுரபி', திரிகூட ராசப்பக் கவிராயர் அனுபவித்து எழுதியுள்ள,

பாடலின் வரிகளுக்கேற்ப ஓவிய மாமேதை மணியம் வரைந்துள்ள வர்ண அட்டைப்படம், கோடையின் கொடுமையைக் குளிர்ச்சியாக்கி மனத்தை மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வித்வான் வே. இலட்சுமணன் அவர்கள் எழுதி வந்த 'காணிக்கை' தொடர்கதை, இந்த இதழில் முடிவடைந்து 'அஞ்சலை'க் கதா பாத்திரத்தை நாம் மறக்க முடியாதபடிச் செய்து - நாவல் உலகிற்கு நல்லதொரு 'காணிக்கை'யைப் படைத்துள்ளது.

வரலாற்று ஆராய்ச்சித் துறையிலும், தமிழிலக்கியத் துறையிலும் மிகச் சிறப்பாகத் தொண்டாற்றிய டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் மறைந்தாலும், அவர் இந்த இதழில் எழுதியுள்ள 'திருவதிகை' என்னும் கட்டுரை காலத்தால் மறைக்க முடியாத கல்வெட்டுப் பொக்கிஷமாய் மிளிர்கிறது.

பள்ளி ஆசிரியர் சிறப்புச் சிறுகதை வரிசையில் மு. அய்யாக்கண்ணு (பின் நாளில் 'அய்க்கண்') அவர்களின் திறமை 'மனிதனுக்குச் சாவு வேண்டும்' சிறுகதை மூலம் 'அமுதசுரபி' வாயிலாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

சோம. மகாதேவன் எழுதியுள்ள 'நல்ல மனிதர்', புஷ்கலா எழுதியுள்ள 'நான் ஓர் அம்மா', கோமதி சுப்ரமணியம் எழுதியுள்ள 'வழி நடுவில்', டி.எஸ். வேங்கடரமணி எழுதியுள்ள 'சத்தியம்', மங்கலத் தேவன் எழுதியுள்ள 'கனவும் கற்பனையும்' ஆகிய ஐந்து சிறுகதைகள் - ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகப் பஞ்சபூதங்களாய்ப் பிரகாசிக்கின்றன.

பிரும்மஸ்ரீ சி.வி. ஸ்வாமி சாஸ்திரிகளின் 'திரிபுரா இரகசியம்' ஆன்மிக அன்பர்களுக்கு மட்டுமில்லாமல்; அனைவருக்கும் கிடைத்துள்ள அரிய அமிர்தம்.

'மலை நாட்டில் மண்டபங்கள்' கட்டுரையில் மலேசியாவைப் பற்றி மிகத் துல்லியமாக, படங்களுடன் விளக்கியுள்ளார் மனசை ப. கீரன். (இன்று சென்னை வானொலி துணை இயக்குநர்)

அரவரசியின் 'புதுவைப் பெரியார்' தலைப்பிட்டப் பக்கங்கள் பாரதிதாசனின் பல முகங்களைத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

பல நாட்டுப் பாலர் கதையில் சீன நாட்டுச் சிறுவர் கதை யதார்த்தமாய், எளிமையாய்க் கருத்துகளைச் சொல்லியுள்ளது.

வளரும் இசைப் புலவர்கள் வரிசையில் தேரழுந்தூர் வி. ரங்கநாதனும், டி.எஸ். வல்லீசனும் அறிமுகப்படுத்தப்பட்டு (இதே போல் பல கலைஞர்கள்) - ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இது 'அமுதசுரபி'யின் ப்ளஸ் பாயிண்ட்.

'சேஃப் பாடி' தைக்கும் முறையைத் 'தையற் கலை'ப் பகுதியில் விரிவாகக் கற்றுத் தந்துள்ளார் ஆர். லட்சுமி.

இதழின் பக்கங்களில் விரவியுள்ள துணுக்குகள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கின்ற கருத்துக் குவியல்களைத் தாங்கித் ததும்புகின்றன. உதாரணத்திற்கு ஒன்று...

இப்படி 60 காசுகளுக்கு, 88 பக்கங்களும் எண்ணில்லாத விஷய விபரங்களைத் தன்னுள்ளே தாங்கி பத்திரிகை உலகில் ராஜ நடை போட்டுள்ளது, 25 ஆண்டுகளுக்கு முந்தைய 'அமுதசுரபி'.

— *மாலதி நாகராஜ்*

"வீரமாதேவி பளிங்கு போன்ற மேனி உடையவளா?"

"இல்லை. ஆனால் விழிகள், கரங்கள், இதழ்கள் எல்லாம் கலைமகள் போலவே தோன்றச் செய்தன. இளவரசியார் எப்போது வருவார் என்று காத்திருப்பேன். பாதச் சலங்கை ஒலிக்கக் கலைவாணி வருவதைப்போலவே தோன்றும். இங்கே உள்ள பாறையின்மீது அமர்வார்கள். பாறை வெண்தாமரையாக மாறும்."

சக்கரவர்த்தி வீரமாதேவியை நோக்கினார்.

வீரமாதேவி புரிந்துகொண்டுவிட்டாள். சக்கரவர்த்தி மனத்தில் சந்தேக விதை ஊன்றப்படுகிறதோ என்ற கவலை.

தன் குடிலுக்கு அவரை அழைத்துச் சென்றாள்.

அங்கே இருவருக்கும் நடைபெற்ற உரையாடல்களையும், கோபதாபங்களையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் தன் தகுதி மறந்து அரசியார் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

தொடரும்...

கத்தரித்து ஒட்டியது

நாடோடி

தகப்பனார் சாகக் கிடக்கிறார். அவருடைய நான்கு பிள்ளைகளும், ஒருவர்பின் ஒருவராக அவரிடம் வருகிறார்கள்.

"என்னுடைய நிலங்கள் எல்லாம் உனக்கு" என்கிறார் மூத்த பிள்ளையிடம்.

அதற்கு மூத்த பிள்ளை, "அவற்றை நீங்களே வைத்துக் கொண்டு பயன்படுத்தும்படியாக பகவான் அருள்புரிய வேண்டும்" என்கிறான்.

"என்னுடைய வீடு உனக்கு" என்கிறார் இரண்டாவது பிள்ளையிடம்.

அதற்கு இரண்டாம் பிள்ளை, "அதை நீங்களே வைத்துக் கொண்டு பயன்படுத்தும்படியாக பகவான் அருள் புரிய வேண்டும்" என்கிறான்.

"என்னுடைய வங்கிப் பணம் முழுவதும் உனக்கு" என்கிறார் மூன்றாவது பிள்ளையிடம்.

அதற்கு மூன்றாவது பிள்ளை, "அதை நீங்களே வைத்துக்கொண்டு பயன் படுத்தும்படியாக பகவான் அருள்புரியவேண்டும்" என்கிறான்.

கடைசியாக நான்காவது பிள்ளை வருகிறான். அவன் உதவாக்கரை. அதனால் தகப்பனார் கோபமாக, "நீ தூக்குப் போட்டுக் கொண்டு சாவதற்காகக் கிணற்றுத் தாம்புக் கயிறு உனக்கு" என்கிறார்.

மற்றவர்கள் போலத் தானும் பதில் சொல்ல வேண்டும் என்று நினைத்து, இவன், "அதை நீங்களே வைத்துக்கொண்டு, பயன் படுத்தும்படியாக பகவான் அருள் புரிய வேண்டும்'' என்கிறான்! ●

சோக்ரதர் கூறுகிறார்: திருமணம் செய்து கொள்வது எப்படிப் பார்த்தாலும் நல்லது. நல்ல மனைவி கிடைத்தால் வாழ்க்கை இன்பமாக இருக்கும். பொல்லாத மனைவி கிடைத்தாலோ, நீ ஞானியாக மாறிவிடுவாய். அதனால் உனக்கு நன்மைதான் விளையும்".

ஒரு நாள் வின்ஸ்டன் சர்ச்சில் பி.பி.ஸி. ரேடியோ நிலையத்துக்குப் போய்ப் பேச வேண்டியிருந்தது. அதற்காக தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு டாக்ஸியை நிறுத்தி ஏறப்போனார்.

ஆனால் டாக்ஸிக்காரன், "ரேடியோ நிலையமா! அத்தனை தூரம் என்னால் செல்ல முடியாது" என்றான்.

"ஏன்?"


"இன்னும் அரை மணி நேரத்தில் சர்ச்சில் ரேடியோவில் பேசப் போகிறார். அதை நான் வீட்டிற்குப் போய் கேட்கப் போகிறேன்".

இதைக் கேட்டு மகிழ்ந்த சர்ச்சில், ஒரு பவுன் நோட்டை எடுத்து நீட்டி, "இந்தா! இதை வைத்துக் கொண்டு எப்படியாவது என்னை ரேடியோ ஸ்டேஷனில் கொண்டுபோய் விடு" என்றார்.

ஒரு பவுன் நோட்டைப் பார்த்ததும் டாக்ஸிக்காரரின் முகம் மலர்ந்தது. "அந்த சர்ச்சிலும், அவருடைய ரேடியோப் பிரசங்கமும் எப்படியாவது போகட்டும். நான் உங்களை ரேடியோ நிலையத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்றான். ●

பாரிஸ் நகரசபைக் கிடங்கிலிருந்து விலை உயர்ந்த செம்புக் குழாய்களைத் திருடுவது என்று இரண்டு பேர் திட்டமிட்டனர். ஒரு லாரியைத் திருடி, அதற்கு முனிசிபல் லாரிபோல வர்ணம் கொடுத்தார்கள். டெல்கின் காவல்காரர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, உள்ளே நுழைந்து, செம்புக் குழாய்களை லாரியில் எடுத்து வைத்தார்கள். காவல்காரன் இவர்களைப் பற்றிச் சந்தேகமே படவில்லை. நகரசபை வேலையாள்கள் தான் வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் இருவரும் வெகு வேகமாக தங்கள் வேலையைச் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தபொழுது, இவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. நகரசபை ஊழியர்கள் அத்தனை வேகமாக வேலை செய்ய மாட்டார்களே என்று சந்தேகப்பட்டு, பக்கத்தில் வந்து அவர்களை விசாரிக்க ஆரம்பித்தான். அவ்வளவுதான், அவர்கள் அகப்பட்டுக் கொண்டுவிட்டார்கள். ⁂




நடனமாடும்...
உன்னிடம் சில்லறை வாங்க இப்படியே நடமாடிக்கிட்டே இருக்க வேண்டியது தானா?
நடமாடும் கடை
இப்படியே ஒரு இரும்பு இருந்து இஸ்திரி போடுப்பா! அவசரம்!
நடமாடும் தக்காளி கடை
ரோடு ஒரே மேடு பள்ளம்! தக்காளி நடனமாடுது! வண்டியும் நடனமாடுது!
நடமாடும் கடை
நடமாடாமே இப்படியே கிடக்குது வருஷக் கணக்கா!
அன்று நகரிலே இட்லி வாங்கி ஆயிரம் விளக்குலே சட்னி!
நடமாடும் சிற்றுண்டி சாலை

குன்றக்குடி பெரிய பெருமாள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஞானச் செல்வர் திருவள்ளுவரின் சிந்தனையிலிருந்து பிறந்து வந்த ஒரு கருத்து, இன்று நம் சிந்தையுள் புகுந்து சிலிர்க்க வைக்கிறது!

மனத்தின் உயர்வே மனிதனின் உயர்வு. ஆம்! 'உள்ளத்தனையது உயர்வு' எனக் கூறுகிறார் திருவள்ளுவர். எத்தகைய சத்திய வார்த்தைகள் அவை? இதோ... அந்த வார்த்தைகளுக்குரிய வாழ்வை, வரலாற்றை அறிகிற போது வியந்து மகிழ்கிறோம்; நெகிழ்ந்து போற்றுகிறோம்!

'மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டிய உடைமைகளுள் தலையாயது, தலை சிறந்தது உள்ளம்தான்' என உறுதியளிக்கிறார் திருவள்ளுவர். "உள்ளம் உடைமை, உடைமை" என்பதுதானே அவர் திருவாக்கு? இத்தகைய உடைமையை இளமை முதலாகவே பெற்றிருந்த காரணத்தால்தான் சாதனைச் செல்வர் எம்.வி.பீமராஜா இன்மையை, ஏழைமையை எதிர் நின்று போராடி வெல்லவும் முடிந்தது! நம்மால் 'உள்ளத்தனையது உயர்வு' எனும் திருவள்ளுவரின் கருத்தைச் சொல்லவும் முடிந்தது!

சாதனைச் செல்வர் எம்.வி. பீமராஜாவின் உள்ளம் எத்தகையது?

உழைப்பில் தாழ்வில்லை எனக் கருதிய உள்ளம்; உழைப்பு ஒன்றையே வாழ்வுக்கு அடிமுதலாகக் கொண்ட உள்ளம்; உழைப்பை மதித்து, உழைப்பவரைப் பேணும் உள்ளம்; இத்தனைக்கும் மேலாக உழைப்பதற்கு உறுதுணையாக நின்றவரை ஒருக்காலும் மறக்காது போற்றி, மகிழ்ந்து, பாராட்டும் மாசற்ற உள்ளம்! இந்த உத்தம உள்ளமே, வித்தக வாழ்வை விளைய வைத்திருக்கிறது! 'உள்ளத்தனையது உயர்வு' எனும் சத்திய வார்த்தைகளுக்குச் சரியான சரித்திரமாய்ச் சான்றாகி நிற்கிறது!

அப்போது சிறுவன் பீமாவுக்கு வயது பத்து. தலைவன் இல்லாத ஏழைக் குடும்பம். ஆம், அவன் பிறந்த பத்தாவது மாதத்திலேயே



தந்தையை இழந்துவிட்டான்! தாயும் தமையனும் குடும்பத்து உறுப்பினர். பாட்டியின் சகோதரர் சேஷகிரி ராஜா அன்போடும், வாஞ்சையோடும் இந்தக் குடும்பத்தை அரவணைத்தார். எனினும் பீமாவின் தமையனார் ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்து, தமது சிறிய வருவாயைத் தாயிடம் கொடுத்து வந்தார். தமையனாரைப் போலவே தானும் வேலைக்குச் செல்ல வேண்டுமெனக் கருதிய பீமா, தனது விருப்பத்தை ஒரு நாள் அன்னையிடம் தெரிவித்தான்.

கண்ணீருடன் புன்னகைத்த பீமாவின் அன்னை, "ஆமாம், உனக்கு யார் வேலை தருவார்கள்?" என்றார்.

தமது பத்து வயதுப் பாலகனை யார் வேலைக்குச் சேர்த்துக் கொள்வார்கள்? அப்படியே சேர்த்துக் கொண்டாலும், அவன் என்ன வேலை செய்துவிட முடியும்? பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய வயதில்,'வேலைக்குச் செல்கிறேன்' எனச் செல்கிறானே?... தாயின் உள்ளம் தவியாய்த் தவித்தது!

வேலை தேடி வீதியில் இறங்கினான் பீமா! இராஜபாளையம் நகரில் அப்போது 'ஆனந்த விலாஸ்' அசைவ உணவகம் பிரபலமானது. அதன் உரிமையாளர் அயோத்திராஜா 'கல்லா'வில் அமர்ந்திருந்தார். நேராக அவரிடம் போய் நின்றான் பீமா. குனிந்து பார்த்த அயோத்தி ராஜா, "என்னடா வேணும்?" என்றார் சிறுவனைப் பார்த்து.

"எனக்கொரு வேலை வேணும்" என்றான் பீமா.

அரைக்கால் டிரவுசருடன் தமக்கு எதிரே நிற்கும் சிறுவனை உற்று நோக்கிய அயோத்தி ராஜா, "வேலையா? உனக்கா? என்னடா வேலை செய்ய முடியும் உன்னால்?" எனச் சிரித்தார்.

"எல்லா வேலையும் செய்வேன்" எனப் பெரிதாகத் தலையசைத்தான் பீமா.

"எல்லா வேலையும் செய்வாயா? பலே!.. நல்லாப் பேசறியே!" என்றவர்,

"சரி, எப்போ வேலைக்கு வருவாய்?" எனக் கேட்டார் அயோத்தி ராஜா.

சிறுவன் பீமா, "இப்போதே!" எனச் சொன்னான்.

"அப்படியா?" என வியப்படைந்த ஆனந்த விலாஸ் உரிமையாளர், சிறுவன் பீமாவுக்கு முதன் முதலில் 'உழைக்கும் களம்' ஒன்றை உருவாக்கிக் கொடுத்தார்.

நள்ளிரவில் உறங்குவதற்கே வீட்டை நாடிப் போவான் பீமா. விடிவதற்கு முன்னமேயே வீட்டைவிட்டுப் புறப்பட்டு விடுவான். ஆனந்தாஸ் உணவகமே அவனின் அன்றாட உழைப்புக் களமாக விளங்கியது. மேஜைகளைச் சுத்தம் செய்வான்; பரிமாறுவான்; தண்ணீர் எடுப்பான்; அடுப்பருகே அமர்வான்! அவன் பார்க்காத வேலை இல்லை! அவனுக்குத் தெரியாத உணவகத்துத் தொழில் நுட்பமில்லை! நாளும், மாதங்களும் நகர, நகர உணவகத்தின் பொறுப்புகள் அனைத்தும் இளைஞன் பீமராஜாவிடம் வந்து சேர்ந்தன. பெரியவர் அயோத்தி ராஜாவை 'முதலாளி' 'முதலாளி' என வாஞ்சையோடு அழைத்து, அவரது அன்புக் கட்டளைகளை உடனுக்குடன் செய்து முடிப்பான் இளைஞன் பீமராஜா.

என்றாவது ஒரு நாள் ஆனந்தா உணவகத்திற்குள் தலையைக் காட்டும் அயோத்தி ராஜாவை, "என்ன? இந்தப் பக்கமே உங்களைக் காணலியே?" என உணவகத்தின் வாடிக்கையாளர்களில் எவராவது கேட்டால், "பீமா இங்கே இருக்கிறவரை நான் சீமானாகவே இருந்துடலாம்! எனக்குன்னு இங்கே என்ன வேலை இருக்கு, அடிக்கடி வர? நம்பிக்கை, நாணயம், இன்னம் உழைக்கிறதுலே சுகம் காணற மனசு உள்ளவன் பீமா. ஆண்டவன் எனக்களித்த அபூர்வப் பிள்ளை! அந்தப் பிள்ளை இங்கிருக்க, இந்தப் பிள்ளைக்கு இங்கே என்ன வேலை?" என்பார் மகிழ்ச்சியோடு அயோத்தி ராஜா.

இளைஞன் பீமராஜாவுக்கு வயது இருபதை எட்டியது. மனத்திற்குள் ஒரு விருப்பம் கிளைத்தது. நேராக அயோத்தி ராஜாவின் வீட்டிற்குச் சென்று, அவரை வணங்கி நின்றான். பரிவோடும், பாசத்தோடும், "என்னப்பா?" என்றார் அயோத்தி ராஜா. தன் விருப்பத்தை வெளியிட்டான் பீமராஜா.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! உனக்கும் வயசு இருபது ஆகிட்டது. இனி சுயதொழில் செய்ய வேண்டியது அவசியம்..." என்ற அயோத்தி ராஜாவை மிகுந்த வாஞ்சையோடு நோக்கினான் பீமராஜா. அயோத்தி ராஜா மேலும் சொன்னார்: "ஆனந்த விலாஸ் உணவகத்தைக் 'குரு பவனம்' என மாற்றி சைவ உணவகமாக மாற்றிக் கொள்கிறேன். உன் விருப்பப்படி, நீ புதுசா ஒரு ஓட்டலை வெச்சு நடத்து. உன்னொட உழைப்புக்கும், நாணயமா நடக்கிற உன்னொட மனசுக்கும் எந்தத் தொழிலும் அமோகமா வளரும். இராஜபாளையத்திலே நீ பிரபலமா ஆகிடுவாய்! என்னொட ஆசி உனக்கு எப்போதும் உண்டு".

"முதலாளி! ஓட்டல் வைக்க இப்போது எண்ணமுமில்லை; வசதியுமில்லை! சிறியதா ஒரு டீக்கடைதான் வைக்கலாமினு பார்க்கறேன். அந்த டீக்கடைக்கு 'ஆனந்தா'னு பேரு வைக்க நீங்க அனுமதிக்கணும்..." என்றான் பீமராஜா, மிகுந்த பணிவோடு.

"ஓகோ! அப்படியா! சரிப்பா வெச்சுக்கோ.. ராஜபாளையத்திலே இடம் கிடைக்கிறதுதான் கஷ்டம். என்றாலும் உன்னொட நல்ல மனசுக்கு ஆண்டவன் வழி காட்டுவான்" என நம்பிக்கை யோடும் நல்லாசியோடும் விடை கொடுத்தார் அயோத்தி ராஜா.

நண்பர்களும், வேண்டியவர்களும் ஓர் இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த இடத்திற்குச் சொந்தக்காரரோ புகழ்பெற்ற தமிழறிஞர்! ஸ்ரீவில்லிபுத்தூர் நகரவைத் தலைவராக வீற்றிருந்தார். நல்ல குற்றாலம் பிள்ளை என்றழைக்கப் பெறும் அந்தப் பெரிய மனிதரை எப்படிச் சந்திப்பதென எண்ணித் திகைத்தான் பீமராஜா. அவரிடம் சென்று ஆனந்தா டீக்கடைக்கு எப்படி இடம் கேட்பது? அதுவும் அசைவ உணவு பரிமாறும் கடை யென்றால் பிள்ளைவாள் கொடுப்பாரோ, என்னவோ? மனத்துள் தைரியத்தை வர வழைத்துக் கொண்டு, பொன்னுசாமி பிள்ளை என்பவரை உடன் வருமாறு வேண்டி, நல்ல குற்றாலம் பிள்ளையிடம் சென்று வணங்கி, தன் விருப்பத்தை வெளியிட்டான் பீமராஜா.

பீமராஜாவை மேலும் கீழும் பார்த்தார் நல்ல குற்றாலம் பிள்ளை. 'என்ன சொல்லப் போகிறாரோ?' என ஒவ்வொரு விநாடியும் ஏங்கித் தவித்தான் பீமராஜா. தொண்டையைக் கனைத்துச் சற்றே சீர்படுத்தினார் நல்ல குற்றாலம் பிள்ளை. அவர் கனைத்தபோது, 'இதோ வார்த்தை வெளிவரப் போகிறதே! என்ன வார்த்தையோ?' எனக் கவலையால் துவண்டான் பீமா.

"உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு! சின்ன வயதிலிருந்தே உழைக்க வேண்டிய கட்டாயம் உனக்கு ஏற்பட்டதை நினைச்சா, வருத்தமாகக்கூட இருக்குது. சரி, நாளைக்குக் காலையிலேயே நூறு ரூபாய் அட்வான்ஸ் கொண்டு வந்து கொடுத்திட்டு, கடையை வாடகைக்கு எடுத்துக்கோ...!" என்றார் நல்ல குற்றாலம் பிள்ளை.

குற்றாலச் சாரலோடு அருவியில் குளித் திருக்கிறான் பீமராஜா. அந்தச் சுகத்தைக் குற்றாலம் பிள்ளையின் வார்த்தைகளில் இப் போது அனுபவித்தான் பீமராஜா. என்றாலும் பிள்ளையின் வீட்டைவிட்டு வெளியே வந்ததும், "நூறு ரூபாய் வேண்டுமே? அதுவும் நாளைக் காலையில்?" என எண்ணிப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டான் பீமராஜா.

பக்கத்தில் வந்த சுப்பையா பிள்ளை, "என்ன பீமா? மகிழ்ச்சியா வராமே, மௌனமா, கவலையா வர்ராப்பலே இருக்கே?" என்றார்.

"ஒண்ணுமில்லே!" எனப் புன்னகைத்துச் சமாளித்தான் பீமராஜா. 'காலையில் நூறு



ரூபாயுடன் குற்றாலம் பிள்ளையைக் காணா விடில், கடை கிடைக்காதே? பிள்ளை கண்டிப் பானவர். சொல்லிய நாளில், சொல்லிய நேரத் திற்குத் தொகை கொண்டு போகவில்லை யெனில், பின்னால் அவர் முகத்தில் விழிக்க முடியாதே?' - கவலையால் வீட்டில் சுருண்டு படுத்திருந்த பீமராஜாவை, அவனது சிறிய தந்தையார் ஆளனுப்பி அழைத்து வரச் செய்தார்.

"என்னப்பா? கடை வைக்கப் போறியா? அம்மா சொன்னாங்க. காலையில் அட்வான்ஸ் கொடுக்கணுமா? சரி, இந்தா இந்த நூறு ரூபாயை வாங்கிக்கோ. திருப்பிக் கொடுக்க முடியறபோது கொண்டு வந்து கொடு" என்றார் சித்தப்பா. அப்போதே தனக்கு ஓர் ஒளிமய மான எதிர்காலம் காத்திருப்பதை உணர்ந்து மகிழ்ந்தான் இளைஞன் பீமராஜா.

கடை தொடங்குவதற்குக் 'கைமுதல்' வேண்டுமே? தமது அன்னையாரின் வார்த்தை களில் நம்பிக்கை கொண்ட சிலர், கடனாகக் கொடுத்து உதவ முன் வந்தனர். "எதற்கும் கவலைப்படாதே!... கடையைத் திற; எல்லாம் நன்மையாக வந்து சேரும்" என உடனிருந்து உற்சாகமூட்டிய 'சம்பா' எனும் தம் நண்பரை, இன்றும் நினைவில் கொண்டு நெகிழ்கிறார் சாதனைச் செல்வர் எம்.வி. பீமராஜா.

1953 இல் தொடங்கிய 'ஆனந்தா டீக்கடை' நாளும் பொழுதும் வளர்முகம் கொண்டது. வாடிக்கையாளர்கள் பெருகினர். தரமும், சுவையும் நகரில் ஆனந்தாவைப் பிரபலப் படுத்தின. உபசரிப்பில் கனிவும், உழைப்பில் அயரா உள்ளமும் பீமராஜாவை மக்கள் மத்தியில் புகழுக்குரிய புள்ளியாக அடையாளம் காட்டின!

1957 இல் பீமராஜாவிற்குத் திருமணம் நடந்தது. ஜானகி மனைவியாக மட்டுமல்லாது, மந்திரியாகவும், இல்லத்து லெட்சுமியாகவும் பீமராஜாவுடன் இணைந்தார். அவர் வலது காலை எடுத்து வைத்து வாழ்க்கைத் துணை யாக வந்த வேளை, செல்வமும் செல்வாக்கும் பீமராஜாவுக்கு, நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து, கிளைத்துச் செழிக்கத் தொடங்கின! 1963 இல் 'ஆனந்தா லாட்ஜ்' இராஜபாளையம் - தென்காசிச் சாலையில் உதயமானது. 'ஓட்டல் ஆனந்த்' 1966 இல் உருவானது. குற்றாலத்தில் ஆனந்த விலாஸ் ஓட்டலைத் திறந்தார் பீமராஜா. ஓட்டல் ஆனந்த் 1986 இல் விரிவாக்கம் பெற்று, இராஜபாளையம் நகரிலேயே வசதிமிக்க உணவகமாக வடிவம் கொண்டது. 'ஆனந்தா திருமண மண்டபம்' 1990 இல் மாவட்டத்தி லேயே மாபெரும் மண்டபமாக உருவாக்கம் பெற்றது. 'ஆனந்தா டிரைவ் இன் ரெஸ்ட்டா ரெண்ட்' நாள்தோறும் உருவாகிக் கொண் டுள்ளது!

ஓட்டல் ஆனந்தை 1986 இல் விரிவாக்கம் செய்தபோது, ஒரு வித்தியாசமான விழாவை ஏற்பாடு செய்திருந்தார் சாதனைச் செல்வர் எம்.வி.பீமராஜா. வாழ்வில் தமக்கு உந்து சக்திகளாக விளங்கிய பெருமக்களையெல்லாம் நினைந்து போற்றும் 'விசுவாச விழா'வாக அதனை அமைத்து, விமரிசையாகக் கொண் டாடி மகிழ்ந்தார். தந்தையை இழந்து, தாழ் வுற்று வறுமை மிஞ்சி நின்ற தம் குடும் பத்தை ஆதரித்த சேஷகிரி ராஜா, உணவகத் திறம் பெற உழைக்கும் களம் அமைத்துக் கொடுத்த அயோத்தி ராஜா, தொழில் தொடங்க இடமளித்து உதவிய நல்ல குற்றாலம் பிள்ளை ஆகியோர் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தும், தொழில் தொடங்கிய காலம் முதலாகத் தமக்குத் துணையாக அமைந்த 'சரக்கு மாஸ்டர்' மாரியப்பன் முதலிய தொழி லாளர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கியும், தமது நன்றியறிதலை வெளிப்படுத்தினார் பீமராஜா.

தொழிலில் கிடைக்கும் லாபத்தின் ஒரு பகுதியைத் தொழிலாளர்களின் வீட்டுக்கு வசதி செய்து தருவதற்குப் பயன்படுத்துகிறார் சாதனைச் செல்வர். எனவே 'முதலாளி' எனப் பீமராஜாவை அச்சத்தால் அழைக்காமல், தொழிலாளிகள் அன்பால் அழைத்து மகிழ் வதைக் காண முடிகிறது. இன்றும் சமையல் அறைக்குச் சென்று, கரண்டியைக் கையிலேந்து வதைப் பெருமிதமாக நினைக்கிறார் பீமராஜா. 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உணர்வு இளமை முதலாகவே அவர் இரத்தத்தில் கலந்திருப்பதால், ஓட்டலில் கூட்டம் பெருகும் போது, இலையைப் போட்டுப் பரிமாறத் தொடங்கி விடுகிறார்! தொழிலாளி, முதலாளி என்ற வர்க்க உணர்வு துளியும் பாராட்டாது தொண்டுள்ளம் கொண்ட காரணத்தால், பீமராஜாவின் 'ஆனந்தா குரூப்' நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் தமது சொந்த நிறுவனமாகவே கருதி முழுமையான உழைப்பை வழங்கும் அருமை - ஆனந்தா நிறுவனங்கள் பெற்றுள்ள தனிப் பெருமை!

தந்தையின் தொழில் துறைகளைச் சந்திரன், ராதா ஆகிய இரு புதல்வர்களும் உற்சாகத் தோடு கவனித்துக் கொள்வதைப் பீமராஜா பெற்ற தவமாகவே கொள்ளலாம். எனவே இரு தவப்புதல்வர்களுக்குத் தந்தையாகும் பேறு பெற்றவர் எம்.வி.பி. ஆனந்தி, ரமணி ஆகிய

புதல்விகளில், ஆனந்தி கவிதாயினியாகப் புகழ் பெற்றவர். நான்கு கவிதை நூல்களின் படைப் பாளராகத் திகழ்வதோடு, திறமிக்க இலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்குகிறார் ஆனந்தி.

மதுரை - இராமநாதபுரம் ஒட்டல் உரிமை யாளர் சங்கத்தின் துணைத் தலைவராக வீற்றிருக்கும் எம்.வி.பி. இராஜபாளையும் ராஜுக்கள் மகாசபைத் தலைவராகவும் பெருமை பெற்றுள்ளார். தேசிய நலனில் தாகம் கொண்டுள்ள பீமராஜா, நகர் காங்கிரஸ் தலைவராகவும், பூபதி ராஜா கூட்டுறவு வங்கி யின் உபதலைவராகவும் பொறுப்பேற்றுப் புகழ் அடைந்துள்ளார். எம்.வி.பி. தொடர்பில்லாத பொது விழாக்களோ, பொது நன்மைகளோ ராஜபாளையம் நகரில் நடந்ததில்லை! இளமை யில் முறையான கல்வி பெறவில்லையே என ஏங்கும் பீமராஜா, தேர்ந்த இலக்கிய ரசிகர்! கர்நாடக இசையில் தம்மைக் கரைத்துக் கொள்ளும் இயல்புடையவர்! பன்னிரண்டு ஆண்டுகளாகச் சென்னை மியூசிக் அகாடமியின் உறுப்பினர். டிசம்பர் இசை விழாக்கள் நிகழ்கிறபோது குறைந்தது பத்து நாள்கள் தொழிலை மறந்து, சென்னையில் முகாமிட்டு இசையின்பம் அனுபவிக்கும் பழக்கமுடையவர்!

"கெடுப்பது சோர்வு" எனப் பேசுவான் மகாகவி பாரதி. பத்து வயது முதலே சோர்வை, சோம்பலை அறியாதவர் பீமராஜா. 1932 இல் பிறந்த சாதனைச் செல்வர் எம்.வி.பி., அறுபதை எட்டிப் பிடிக்க இருக்கின்ற இன்றும், ஒரு தொழிலாளியைப் போல எட்டு மணி நேரமல்ல, ஓர் உழைப்பாளியைப் போல, உறங்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களி லெல்லாம் சோர்வில்லாமல் பரபரப்பாக உழைக்கிறார்! சொந்தத் தொழிலை மேன்மைப் படுத்துவதற்கு மட்டுமல்ல, பொது நன்மை களுக்கும் தமது நேரங்களை அர்ப்பணித்து வருகிறார். "உழைக்கின்றபோதும், செயலாற் றும்போதும் கிடைக்கின்ற இன்பமே கிடைத் தற்கரிய இன்பம்" என்கிறார் எம்.வி.பி. உண்மைதானே?

இராஜபாளையம் நகருக்குப் பெருமை யளிக்கும் 'குருபக்தமணி' பி.ஆர்.ராமசுப்பிர மணிய ராஜாவிடம் நன்மதிப்பும், நகரவைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பல காலம் வீற்றிருந்த ஏ.ஏ.சுப்பராஜாவிடம் நன்நட்பும், ரசிகமணி டி.கே.சி.யின் செய லாளராகப் பணியாற்றிய பி.சி. பலராம ராஜாவிடம் நல்லிணக்கமும், தொழில் துறையில் பெரும் புகழ் ஈட்டியுள்ள பெங்களூர் சின்னச் சாமி ராஜுவிடம் நல்லன்பும் கொண்டுள்ள சாதனைச் செல்வர் எம்.வி.பீமராஜா, 'உள்ளத் தனையது உயர்வு' எனும் திருவாக்கை மெய்ப்பிக்கும் உன்னத புருஷராவார்!

கலாபாரதி கவிதைகள்

இதுவும் ஒரு பந்தந்தான்...

பந்தம் - அது கொழுந்துவிட்டெரியும் தீப்பந்தமல்ல
பந்தம் - அது குடும்பத்திலிழையும் பாசபந்தமல்ல
பந்தம் - அது கட்டாயப்படுத்தும் நிர்ப்பந்தமல்ல
பந்தம் - அது பெண் - பிள்ளையைப் பரிமாறிக் கொள்ளும் சம்பந்தமல்ல
பந்தம் - அது இருதரப்பினரும் ஒத்துப்போகும் ஒப்பந்தமல்ல
பந்தம் - வேதமெல்லாம் நாலாயிரம் தமிழ்ச்
செய்யுள்களாய் முழங்கும் வைணவத்
திவ்யப் பிரபந்தம்

நல்முத்து

விண் முகில் விடுத்த நீர்த்துளி ஒன்று
விரி கடல் கண்டு வெட்கி வியந்தது
"அகண்டு பரந்த மாக் கடலெங்கே?
அணுவொத்த அற்பத்துளி நானெங்கே?"
தாழ்வு மனப் பான்மை தனக்குள் புகவே
தண்ணீர்க்கடல் விழத் தயங்கித் தவித்தது
திறந்த சிப்பி ஒன்று அபயம் கொடுக்க
தஞ்சம் புகுந்த நீர்த்துளியதுவோ
சிறந்த நல்முத்தானது பின்னொரு நாளில்.

இந்தக் காற்றும், இந்தப் பணமும்

அகல் விளக்கு சிறுசுடரை
அணைக்க வரும் காற்றதுவோ
பெருநெருப்பு ஜ்வாலைக்குப்
பிரிய நண்பனாய்த் துணைபோகும்
வறுமையினம் கண்டு உதறும்
வலியசக்தி பணமும்தான்
பெரிய பண முதலையிடம்
புகலிடமாய்ப் போய்ச் சேரும்

தமிழ் நாடு மருத்துவ மனையில்

தரமான நவீன மருத்துவக் கருவிகள்

சென்னை திருவான்மியூரைத் தாண்டியவுடன் (மாமல்லபுரம் செல்லும் பழைய பாதையில்) சேரன் நகர் பெரும்பாக்கத்தில் தமிழகத்தின் 'தவப்பேறாக'க் காட்சியளிக்கிறது தமிழ்நாடு மருத்துவ மனை. சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில் மக்கள் பிணி போக்கும் மாபெரும் மருத்துவ மனையாக இது கட்டப்பட்டிருக்கிறது. சென்னையை விட்டுத் தொலை தூரத்தில் அமைந்திருக்கிறது என்ற எண்ணத்திற்கே இடமளிக்காமல், அடையாறு பஸ் நிறுத்தத்தில் இருந்து அடிக்கடி இலவசப் பேருந்துகளும், வேன்களும் மக்களுக்கு உதவும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. சுமார் 600 படுக்கைகள் வரை திட்டமிடப்பட்டு மருத்துவமனையை விஸ்தரிக்க இப்போது துரிதமாகப் பணிகள் நடந்து வருகின்றன.

நுழைந்தவுடன் மருத்துவ மனையின் வரவேற்புப் பிரிவுடன்கூட மருந்தகமும் 'கிப்ட் ஷாப்' (பரிசுப் பொருட்கள் விற்பனைப் பகுதி) ஒன்றும் காணப்படுவது மிகவும் புதுமையாக இருக்கிறது. விற்பனைப் பகுதியில் இருந்த இளைஞர் மேல் நாட்டு மருத்துவமனைகளைப் போன்று இந்த மருத்துவமனையை வடிவமைத்திருப்பதால் 'கிப்ட் ஷாப்' இருப்பதாகவும், நோய் தீர்ந்தவுடன் மிகுந்த அன்பினால் இங்குள்ள டாக்டர்களுக்கும், நர்ஸ்களுக்கும் பரிசுப் பொருள்கள் கொடுத்து வருகிறார்கள் என்றும் தெரிவித்தார். இங்கிலாந்து நாட்டின் சிறந்த மருத்துவமனைகளைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளது இது. இங்கு ஒவ்வொரு நோயாளியையும் மிகுந்த அக்கறையுடன் பரிசோதித்து, தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து பூரண நலத்துடன் அவர்கள் வீடு திரும்புமாறு செய்யப்படுகிறது.

இந்த மருத்துவமனையின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான திரு சி.பி.வேலுசாமி அவர்கள் இதனை மேன்மேலும் சிறந்த முறையில் விஸ்தரிக்கும் எண்ணத்தில் கருத்துகளைப் பொதுமக்களிடம் பரிமாறிக் கொள்வதோடு, தானே சிறிய விஷயமாக இருந்தாலும் தன் நேர்ப்பார்வையில் மிகுந்த கவ



னத்துடன் அக்கறை எடுத்துச் செய்து வருகிறார். நடுத்தர வர்க்கத்தினருக்குக் குறிப்பாக மருத்துவ சிகிச்சையளிப்பதோடு, ஏழை எளிய மக்களுக்கும் இலவசமாகப் பிணி தீர்க்கும் லட்சியத்துடன் செயல்படுகிறார்கள். இங்கு பணிபுரியும் தலைசிறந்த மருத்துவர்கள், மேலைநாடுகளுக்குச் சென்று சிறந்த பயிற்சி பெற்றவர்கள். கம்ப்யூட்டர் இணைப்பு செய்யப்பட்ட தரமான பல நவீன மருத்துவக் கருவிகள் இந்த மருத்துவமனையில் இருப்பதால் எந்த நோயையும் உடனுக்குடன் கண்டுபிடித்து மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பலவித நோய்களுக்கென்று தனியாகப் பல சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. குறிப்பாக தமிழ்நாடு மருத்துவமனையின் முடக்கியல் பிரிவின் சிகிச்சை பற்றி அந்தத் துறையின் தலைமை மருத்துவரான டாக்டர் ஏ.பி. கோவிந்தராஜ் அவர்களைச் சந்தித்து உரையாடியதன் தொகுப்பை இங்கு அளிக்கிறோம்.

உங்களுடைய முடக்கியல் பிரிவில் எத்தனை மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்?

நானும், என்னுடன் டாக்டர் அஜீத் யாதவ் என்ற மற்றொரு மருத்துவரும் தலைமை மருத்துவர்களாகப் பணிபுரிகிறோம். எங்களுக்குக் கீழ் 3 பிஸியோதெரபிஸ்ட்கள் உதவி செய்கிறார்கள். இதைத் தவிர எங்கள் துறையில் விசேஷப் பயிற்சி அளிக்கப்பட்ட பல நர்ஸ்கள் மற்றும் வார்டு டெக்னீஷியன்கள் சிறந்த முறையில் சேவை செய்து வருகிறார்கள்.

உங்கள் சிகிச்சைப் பிரிவில் எவ்வளவு நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்?

கிட்டத்தட்ட 20 நோயாளிகள் முழுநேரமும் சிகிச்சை பெறுகிறார்கள். சிலர் புற மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி விடுகிறார்கள்.

அறுவை சிகிச்சைக்குச் சுமாராக எவ்வளவு செலவாகும்?

மேஜர் ஆபரேஷன் என்றால் ரூ 4000/- வரை ஆகிறது. சிறிய ஆபரேஷன் என்றால் மிகவும் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பணம் வாங்குவது எங்கள் குறிக்கோள் அல்ல. குறைந்த செலவில் நல்ல மருத்துவம் அளிப்பதுதான் எங்கள் லட்சியம்.

உங்கள் பிரிவில் உள்ள மிக நவீன விஞ்ஞான மருத்துவக் கருவிகளைப் பற்றி கூற முடியுமா?



டாக்டர்
அஜீத் யாதவ்

எங்களிடம் உள்ள 'ஆர்த்ரோஸ்கோபி ஸிஸ்டத்தின்' மூலம் முழங்கால், முட்டி, தோள்பட்டைப் பகுதிகளை முழுதும் திறக்காமல் எங்கு ஆயுத சிகிச்சை தேவையோ அந்த இடத்தை எளிதாகக் கண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதே போல் வயதானவர்களுக்கு இடுப்பு எலும்பு முறிவிற்குப் பிறகு எலும்பு சேராது என்று கூறுவதை மாற்றி வலியேயில்லாமல் அவர்களுக்கு எலும்பு நன்றாகச் சேர்ந்து அவர்கள் முன்போல் ஓடியாடி வேலை செய்ய வைக்க உதவும் வகையில் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. எங்கள் மருத்துவமனையில் இருக்கும் சில நவீன மருத்துவக் கருவிகள் மூலம் எந்த நோயையும் வலியில்லாமல் போக்க எங்களால் கட்டாயம் முடியும். மாதம் ஒரு முறை மருத்துவர்கள் ஒன்றுகூடி சிறந்த முறையில் மேலும் சிகிச்சையளிப்பது பற்றி விவாதிக்கிறோம்.

முடக்கியல் பிரிவின் மற்றொரு முக்கியமாக செயல்படும் பிஸியோதெரபிப் பிரிவிற்குச் சென்றபோது அங்கு 3 பேர் சிகிச்சை அளித்து வருகிறார்கள் என்று கேள்வியுற்றோம். திரு இளங்கோ என்ற சுறுசுறுப்பான இளைஞரிடம் அந்தப் பிரிவின் சிகிச்சை முறையைப் பற்றிக் கேட்டபோது அவர் தந்த விளக்கங்கள்:

இங்கு என்னென்ன சிகிச்சை அளிக்கிறீர்கள்? உங்கள் பிரிவில் என்னென்ன நவீன மருத்துவக் கருவிகள் உள்ளன?

இங்கு பாரலெல் பார்ஸ் பாஸ்ச்சுரல் மிரர் ஆகிய

ற்றை உபயோகித்துப் பக்க ாதம் வந்தவர்களுக்கு நடக்க தவுகிறோம். பாஸ்ச்சுரல் ிரர் மூலம் தான் சரியாக டக்கிறோமா என்று அவர் ளே பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆக்குபேஷனல் தெரபி றையில் மூளை வளர்ச்சி ில்லாதவர்களுக்குச் சில பொருட்களைக் கொடுத்து ண்ணங்களை அடையாளம் ாட்டவும், சிதறிய துண்டுகளைப் டிப் படியாக ன்று சேர்த்து வடிவம் அமைக் வும் கற்றுத் தரப்படுகிறது. ஹேபலிடேஷன் முயற்சிகளுக் ாக எங்கள் பிரிவில் ருத்துவர், பிஸியோதெரபிஸ்ட், ூக்குபேஷனல் தெரபிஸ்ட், மூக சேவகர்கள் கொண்ட ழு ஒன்று செயல்படுகிறது. க்கவாதம் உள்ளவர்களுக்குக் கையில் பலம் வர சில பொருட் ளைப் பிடிக்கச் செய்யும் கையில் பயிற்சியளிக்கி



டாக்டர் ஏ.பி. கோவிந்தராஜ்

றோம். ஸெரிபிரல் பால்ஸி நோயில் அவதியுறுபவர்களுக்கு 'லூஸ் லிம்பர் அக்ரோ பேட்ஸ்' முறையில் கண்களுக்குப் பயிற்சி கொடுத்து உதவு கிறோம். இதைத் தவிர இங்கு வாக்கர், ஸுபிமேடர், மரைன் வீல் வாக்கிங் எய்ட்ஸ் ஆகிய கருவிகள் மூலம் சிகிச்சை யளிக்கப்படுகிறது.

அல்ட்ராஸோனிக் தெரபி மற்றும் கன்டினுவஸ் பாஸிவ் மோஷன் தெரபி முறை எலும்பு முறிவு அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடனே உபயோகிக்கப் படுவதால் எலும்பு முறிந்து கூடியவுடன் 'ஸ்டிப்னஸ்' இல்லாமல் காக்க உதவுகிறது. இதைத் தவிர 'வாக்ஸ் தெரபி' மூலம் தொழுநோய் உள்ளவர் களுக்குக் கை, கால் அசைக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

—கே. இந்திரா.

அபிராமியும் அம்புலியும்

பால. இரமணி



வா... ஒரு
சொல் கேள்!
நிலவு மகளே!
உன்னைப்
பத்து மாதங்கள்
அல்ல...
இந்த ஜனங்களின்
ஜனனத்திற்கு
முன்பிருந்தே...
இன்னமும்
வயிற்றில்
சுமந்துகொண்டு
வாழ்கிற
வானத்துக்கு
நன்றி சொல்!

நிலவு மகளே...
உன்னை
வான்மழையில்
குளிப்பாட்டி -
கருமேகக் கருப்புப்
பொட்டிட்டு-
மின்னல் சூடத்தில்
திருஷ்டி கழிக்கிற
வானத்துக்கு
நன்றி சொல்!

எத்துணை மழலையரின்
எச்சில் உணவை
இரவின் மடியில்
இருந்து சாப்பிடுகிறாய்...?
எதற்காக நிலவே -
எங்கள்
அபிராமிக்கும்
மீனாட்சிக்கும்
காமாட்சிக்கும்
விளையாட்டுக்
குழந்தையாய்
ஆவதனாலா?

வா... ஒரு
சொல் கேள்
நிலவு மகளே!
உன்
வானத் தாயின்
வயிற்றுக்குள்ளேயே
அமுதசுரபி
கிடைக்கவில்லையா?
அதனால்தான்
அமுதசுரபிகளாம்
அபிராமியும்
அகிலத்துக்
குழந்தைகளும்
நிலாச் சோற்றில்
உன்னோடு
கூட்டா...?

சிறந்த கலைச் சேவை புரிந்து வரும் கலாமந்திர் ட்ரஸ்ட்

மார்ச் மாதம் 10 ஆம் தேதியிலிருந்து 13 ஆம் தேதி வரை கலா ரசிகர்களுக்கு ஒரு நாட்டிய விருந்து அளிக்கப் பட்டு மகிழ்ச்சிப் பெருக்கில் அவர்களை மூழ்க அடித்தது. கலாமந்திர் ட்ரஸ்ட் ஏற்பாடு செய்திருந்த இந்த அற்புத நாட்டிய உத்ஸவ நிகழ்ச்சி "தேவதா வந்தனமாகப் பெயர் சூட்டப்பட்டு, எல்லாக் கலை களுமே இறைவனுக்கே அர்ப் பணிக்கப்படும் என்ற உன் னத லட்சியத்துடன் படைக்கப் பட்டது. ஏனைய நாட்டிய நிகழ்ச்சிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதுமையான நிகழ்ச்சியான இதில் ஒரு குறிப்பிட்ட பொருளைத் தேர்ந் தெடுத்து ஒவ்வொரு நாளும் பிரபல நாட்டிய மணிகளைக் கொண்டு ஆடச் செய்தது செவிகளுக்கும், கண்களுக்கும் ஒரு அற்புத விருந்தாக அமைந்தது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

'தேவதா வந்தன'த்தின் ஆரம்ப நிகழ்ச்சியாக "கணபதி திருவடி சரணம்" என்ற நடன நிகழ்ச்சியில் கலைமாமணி கே.ஜே. சரஸாவின் சிறந்த மாணவியான ஊர்மிளா சத்ய நாராயணன் 'கணபதிக்கு' சிறப்பு வந்தனங்கள் செலுத்தி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். "ஸ்வாமி புறப்பாடு" என்ற அடுத்த நிகழ்ச்சியில் பிரபல நடனமேதை அமரர் ருக்மிணி தேவியின் சீடரான திரு. ஜே.வெங்கடாசலபதி அற் புதமாக ஆடி ரசிகர்களை மகிழ்வித்தார். நம் கோயில் களில் இறைவனை வீதிக்கு எழுந்தருளச் செய்யும்போது நாதஸ்வரத்தில் 'மல்லாரி' வாசித்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது. மாம்பலம் திரு. எம்.கே.எஸ். சிவா அவர்களின் நாதஸ்வரத்தில் இருந்து கம்பீரமாக "கம்பீர நாட்டை ராக மல்லாரி" பீறிட் டெழுந்து ரசிகர்களை உவகை யில் ஆழ்த்தியது.

தொடர்ந்த அடுத்த நிகழ்ச்சி. "தேவி தரிசனம்". திரு. தனஞ் செயன் அவர்களின் மாணவி யான ஸ்ரீலதா விஸ்வநாதன் தேவியின் முப்பெரும் சக்தி களாக, கலைமகள், திருமகள், மலைமகளின் தத்துவங்களை அருமையாக ஆடினார். "வந்தே சிவம் சங்கரம்" என்ற அடுத்த நிகழ்ச்சிக்கு அமரர் மாங்குடி துரைராஜ அய்யர் அவர்களின் மாணவியான திருமதி ரேவதி ராமச்சந்திரன் ஆடியது மிகச் சிறப்பாக இருந்தது. பஞ்சபூத ஸ்தலங் களில் எழுந்தருளியிருக்கும் சிவனின் ப்ரதோஷ தாண்ட வமும், ஆனந்த தாண்டவமும்,



திரு. விஸ்வநாதன்



ரேவதி ராமச்சந்திரன்



ஊர்மிளா சத்ய நாராயணன்



ஸ்ரீநிதி ரங்கராஜன்

ஊர்த்துவ தாண்டவமும் மிகவும் அற்புதம். இவர் நிகழ்ச்சியின் கடைசியில் மிகவும் சிறப்பாக அமைந்தது 'சுத்த நிருத்தம்'. பாடல்களே இல்லாமல் மத்தளமும், சுத்த மத்தளமும் மட்டும் வாசிக்கப்பட்டு, தன் நாட்டியத் திறமை முழுவதையும் பயன்படுத்தி சலங்கையிலேயே அந்த வாசிப்புக்கு ஈடுகொடுத்து அவர் ஆடியது மெய் சிலிர்க்க வைத்தது. 'பஞ்சகதி நடை பேதம்' என்ற இந்த 'சுத்த நிருத்த' நிகழ்ச்சி அமரர் மாங்குடி துரைராஜ அய்யரின் சிறப்புத் தயாரிப்பு.

திரு.ஏ.பி. ஹரிதாஸ் மிகவும் சிறப்பான முறையில் கச்சேரிக்கு மெருகூட்டும் வகையில் நட்டுவாங்கம் செய்தார். திரு. பாலச்சந்தரும், திரு. கேசவனும் மத்தளமும், சுத்த மத்தளமும் மிகச் சிறப்பாக வாசித்தனர்.

"நமோ நாராயணாய" என்ற சிறப்பு நிகழ்ச்சிக்கு அபிநயித்தவர் வழுவூர் பாணியைச் சேர்ந்த கலைமாமணி திரு. எஸ்.கே. ராஜரத்னம் அவர்களின் சீடரான அனுராதா ஜெகந்நாதன். உயர்ந்த நாராயண தத்துவத்தை விளக்கி அருமையாக ஆடினார். மகாகவி சுப்ரமண்ய பாரதியின் 'கண்ணன் பாட்டு'களை மையமாக வைத்து 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' என்ற சிறப்பு நிகழ்ச்சியில் அருமையாக நடனமாடினார் கலைமாமணி திரு.எஸ்.கே. ராஜரத்னம் அவர்களின் மாணவி ஷோபா நடராஜன். இதே குருவின் மற்றொரு மாணவியான ஸ்ரீநிதி ரங்கராஜன் வழங்கிய "பாவயே கார்த்திகேயம்" என்ற சிறப்பு நிகழ்ச்சி முழுக்க முழுக்க முருகனை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. ஸ்ரீநிதி அன்று ஆடிய 'சுப்ர மண்ய புஜங்கமும்', 'செந்தில் மேவும் தேவ தேவர்', 'முருகா, முருகா என்றால்' என்ற பாடல்களுக்கு அவர் வழங்கிய அபிநயமும் ரசிகர்களை சொக்கிப் போகச் செய்தன. நிகழ்ச்சியின் கடைசியில் இவர் வழங்கிய 'காவடிச் சிந்து' கண்ணுக்கு விருந்து.

பிரபல நடனக்கலைஞர் திருமதி சுதாராணி ரகுபதியின் மாணவியான ப்ரியா மஹாதேவன் "சக்திப் பிரபாவம்" என்ற சிறப்பு நிகழ்ச்சியில் சக்தியின் பல்வேறு ரூபங்களை அழகாகச் சித்திரித்து மகிழ்வித்தார்.

இந்த நாட்டிய உத்ஸவத்தின் கடைசி நிகழ்ச்சியாகக் கண்ணுக்குப் பெரும் விருந்தளித்தார் நாட்டியமணி குமாரி சுஜாதா ஸ்ரீனிவாசன். திரு. உடுப்பி லக்ஷ்மி நாராயணின் மாணவியான இவர் "நமாமி ரகு வீரம்" என்ற சிறப்புப் பொருளில், மானுடனாக அவதரித்த ஸ்ரீராமனின் சிறப்புகளைப் பற்றி மிக அழகாக ஆடி அனைவரையும் பரவசப்படுத்தினார். 'ராமஸ்துதி'யில் (புஷ்பாஞ்சலி) தொடங்கிய இவர் நிகழ்ச்சியில் மிகச் சிறப்பாக அமைந்தது 'பாவயாமி ரகுராமம்' என்ற ராகமாலிகையில் அமைந்த ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் பாடலுக்கு இவர் அபிநயித்தது.

'தேவதா வந்தனம்' என்று அழகாகப் பெயர் சூட்டியது முதல் திறமையான இளம் கலைஞர்களுக்கு வாய்ப்பு அளித்து, அவர்களுடன் முதலிலேயே ஆடுவதற்கு எடுத்துக் கொண்ட சிறப்புத் தலைப்புகளைப் பற்றி விவாதித்து, அரங்க மேடையில் அந்தந்த



சுஜாதா ஸ்ரீனிவாசன்



ஷோபா நடராஜன்



தலைப்பிற்கேற்ப அழகிய சிலை வடிவங்களை நிறுத்தி, பின்னணித் திரையில் வேல், சூலம் போன்ற பொருத்தமான சித்திரங்களை வரையச் செய்து, இவ்வாறு அனைத்து முக்கிய பொறுபபுகளையுமதானே முன்னின்று செய்து முடித்த பெருமை கலா மந்திர் ட்ரஸ்ட்டின் தலைவர் திரு. விஸ்வநாதன் அவர்களையே சேரும். திருமதி கோமதி விஸ்வநாதன் இந்த நிகழ்ச்சியின் அத்தனை வெற்றிகளுக்கும் உறுதுணையாகத் தன் கணவருக்குப் பின் நின்று உதவிகள் செய்தும், ஆலோசனைகள் வழங்கியும் உதவி வந்திருக்கிறார்.

தரத்தில் உயர்ந்த அற்புத நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்த கலாமந்திர் ட்ரஸ்ட் அமைப்பினை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கே. இந்திரா.



கல்வியே கலங்கரை விளக்கம்

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்

"எதிர்காலம் உன் கையில்" என்று மேதை அரிஸ்டாட்டில் முதல் நம் பேரறிஞர் அண்ணா அவர்கள்வரை கூறி விட்டனர். இந்த எதிர்காலத்தைச் சமைத்துக் கொள்ள என்ன கருவி தேவை என்பதையும் நம் பொய்யாமொழியார், "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்று அறுதியிட்டுக் கூறி விட்டார்.

ஒருவனை, ஒரு சமூகத்தை, ஒரு சமுதாயத்தை முட்டாள்களாக்க வேண்டுமா (?) கொத்தடிமைகளாக்க வேண்டுமா(?) அதற்கு ஒரே ஒரு வழிதான், கல்விக் கண்ணைத் திறக்காதே, கல்வி ஊற்றை அடைத்துவிடு.

பெண்கள் பலரை ஆண்கள் பலர், கொத்தடிமைகளாக வைத்திருப்பதன் தந்திரம், மந்திரம் என்ன தெரியுமா? அறியாமை - அறியாமை - அறியாமை என்னும் விலங்குதான். கையிலும் காலிலும் விலங்கிட்டுக் கை நாட்டுப் பேர்வழியாகப் பெண்களை வைத்துவிட்டால், அடுப்பூதும் பெண்கட்குப் படிப்பெதற்கு(?) என்று தற்குறிகளாக வளர்த்துவிட்டால், அம்மடந்தையர் ஆண்கள் இழுத்த இழுப்புக்கு வருவார்கள். எந்தப் பத்திரத்திலும் படிக்காது கைநாட்டுப் போடுவார்கள்.

கிராமத்திலே படிக்காத, கையெழுத்துக்கு, வண்டி மையை அப்பும் பேர்வழிகளிடம், ஆஸ்பத்திரி வருது.பள்ளிக்கூடம் வருது என்று கூறிக் கைநாட்டு வாங்கி ஊர்ப் பொது நிலங்களைக் கிரயம் செய்து சம்பாதிக்கும் பாபிகள் எவ்வளவோ பேர் இன்று பேருடனும் சீருடனும் விளங்குகிறார்கள். கட்டிய மனைவியிடம், குழாய் வருவதற்கு மனு என்று கூறி மணமுறிவுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிய புனிதர்கள் பலப்பலர் இன்று பெருந்தலைவர்களாக உலகெங்கும் உள்ளனர். தற்குறி மனைவியைச் சினிமாவுக்குக் கூட்டிப்போய், குளுகுளு அறையில் சாப்பாடு போட்டு, 'நிலம் உன் பேரில் வாங்கப்போகிறேன் கண்ணே' என்று கொஞ்சி சின்னவீடு வைத்துக் கொள்ளப் பூரண சம்மதம் என்று பத்திரத்தில் கைநாட்டு வாங்கும் வள்ளல்கள் இன்று பெரும் பெரும் உயரத்தில் உள்ள பதவிகளில் உள்ளனர்.

முன்பு அரசர்களைப் பற்றி வேடிக்கையாகச் சொல்வார்கள். அவர்களது இந்தப் புறத்தைவிட அந்தப்புரத்தின் கனம்தான் அவர்களுக்குக் கனம் சேர்த்து அவர்களைக் கனவான்களாக ஆக்கும் என்று. "ஓஹோ! - அந்த சமஸ்தானமா? மிகவும் பெரியது அந்தப்புரத்தில் 500 பேர்?' என்பார்கள். வியந்து வியந்து பாமரர்கள், பரவசமடைவார்கள். தங்கள் ஜமீன்தார் 50 சின்ன வீடுகளை வைத்துள்ளார் என்று. இவையெல்லாம் என் கருத்தென்று எண்ணி விடாதீர்கள். வந்தேமாதரம் என முழங்கிய வங்கவீரர் 'ஆனந்தமடம்' எழுதிய தீரர் பங்கிம் சந்திரர் அன்றே எழுப்பிய குரல் இது. பெண்களை மூடங்களாக வைக்கிறார்கள். படித்தால் அவர்கள் விதவைகளாகி விடுவார்கள் என்ற கட்டுக் கதை கட்டி விட்டார்கள் வங்கத்திலே. இந்நிலையில் எந்தத் தாய் தன் பெண்ணைப் பள்ளிக்கு அனுப்புவாள்?

வால்மீகி முனிவரின் இராமாயணத்தில்கூட ஓர் ஆராய்ச்சி வருகிறது. பலருக்கு இது தெரியாது. நாட்டிலே மழையே இல்லை. கடும் வற்கடம், பெரும் வறட்சி; என்ன செய்வது என யாருக்கும் புரியவில்லை. இன்றுபோல் அன்றும் ஒரு குழுவை அமைத்து வேண்டியவர்களைத் தலைவராகவும் உறுப்பினராகவும் அமைத்து மழை இல்லாக் காரணம்பற்றி ஆய்வு நடத்தச் சொன்னார்கள். மற்றைய குழுக்கள் போல் இவ்வுயர்மட்டக் குழுவும் நாடெங்கும் அரசுப் பணத்தில் சுற்றிக் கடைசியில் ஒரு பேருண்மையைத் தெள்ளத் தெளிவாகக் கண்டது. என்ன உண்மை அது? நியூட்டன் என்ற விஞ்ஞான மேதை கண்ட மூலாதார உண்மைபோல் ஒன்றை இவர்கள் கணித்தார்கள்.



மழையே இல்லை - விசும்பின் துளி வீழி லல்லால் பசும்புல் காண்பது அரிது. நாடு பூரா வும் கடுமையான பஞ்சம். இதற்குக் குழு கண்ட "விஞ்ஞானக் காரணம்" அவர்கள் நேரடி ஆய்வின் முடிவு, "நாட்டில் ஓர் அக்கிரமம் நடக் கிறது. அதனால்தான் மழை இல்லை, என்ன அக்கிரமம்? அரசு குலத்தைச் சேராத, வேதியர் குலத்தைச் சேராத தாழ்ந்த குலத்தோன் ஒரு வன் வடமொழி படித்து வருகிறான். இதனால் தேவர்கள் (மேலுலகில் ஆட்சிபுரிவோர்) மனம் கவன்று, வருணனுக்கு (மழை பகவான்) ஒரு 144 உத்தரவு போட அவன் வான் மழைக் குழாய் களை அடைத்து விட்டான். பஞ்சமன் படிப் பதா? எவ்வளவு பெரிய பாபம். அதனால் நாட் டில் மழை இல்லை. கல்விக்கும், கீழோர் படிப் பதற்கும், மழை வருவதற்கும் ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்தினால் எந்தச் சமூகம் கீழுள்ளோரை மேலே ஏற்றும்?

இவர்கள் படிப்பின்றி, பாரதி கூறியபடி "பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர்"களாக இருப்பர். இந்த நிலையை மாற்றப் பாடுபட்ட முதல் கல்வியாளன், உலகின் முதல் கல்விச் சிந்தனையாளன் திருவள்ளுவன்தான். அதே போல் உலகிலேயே கல்வியின் முக்கியத் துவத்தை விடாது போதித்த சிறந்த மாபெரும் அறிஞர்பிரான், நபிகள் நாயகம் அவர்கள்தான்.

அண்மையில் பாகிஸ்தான் கிரிக்கெட் தலை வர், கிரிக்கெட் சக்கரவர்த்தி இம்ரான்கான் அவர்கள் கூறியுள்ளார். டில்லி ஆங்கிலப் பத்திரிகைகளில் இவர் கருத்துகள் பிரபலமாக வெளிவந்தன. "இஸ்லாம் மதத்தின் மூலக் கருவே கல்விதான். அடிமட்டத்திலுள்ளோரை மேலே கொண்டுவரும் கருவி அறிவுதான். இதை அளித்தலே அரசின் முதல் வேலை. ஆனால் இன்று என் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதோர் ஏராளம் ஏராளம். லாகூரில் உள்ள மாபெரும் ஆஸ்பத்திரிகள் பல்லாண்டு கட்கு முன்பு கட்டப்பட்ட மார்கோ ஆஸ்பத்திரி, கங்காராம் ஆஸ்பத்திரி, ராணி குலாதி தேவி ஆஸ்பத்திரி இவைதான். பின்னால் வந்த, மற்றையோர் பணம் பண்ணும் முயற்சியில் இருந்தனரே தவிர ஆஸ்பத்திரிகள் கட்ட அவர்கட்கு நேரமில்லை" என்கிறார் உலகக் குடிமகன் இம்ரான்கான்.

இந்தியச் சட்ட மாமேதை பாரத இரத்தினம் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கார் கூறுவ தென்ன? மனிதன் மனிதனை அடக்கி வைக்கப் பயன்படும் முக்கிய ஆயுதம், அறியாமை.

நான் கல்வி அதிகாரியாக இருந்த காலை (சுமார் 40 ஆண்டுக்கு முன்னர்) ஒரு கத்தோ லிக்கப் பள்ளியின் வைர விழா நடந்தது. அதற் குப் பக்கத்து ஊர் ஜமீன்தார் தலைமை வகித் தார். நான் விழாவில் முக்கிய உரையாற்றி னேன். விழாவின்போது கேட்கக் கூடாத, இதுவரை யாரும் அவரிடம் கேட்காத கேள்வி ஒன்றை ஜமீன்தாரிடம் நான் கேட்டுவிட்டேன்.

இம்மாதிரி பெரியவர்களிடம் இக்கட்டான கேள்விகளைக் கேட்டு அவர்கள் கால்களை இடறிவிட்டு நான் அவஸ்தைப்பட்டது உண்டு. ஆனால், அதை எனது இனிய பொழுது போக் காக (HOBBY)க் கொண்டவன் நான்.

நான் கேட்ட கேள்வி, "ஜமீன் ஐயாவே உங்கள் ஊரில் பள்ளி இருக்கிறதா"(?)" என்ற குற்றமற்ற கேள்விதான்.

இக்கேள்வியைச் செவிமடுத்த மாண்புமிகு ஜமீன்தார் அவர்கள் ஓர் இராட்சசச் சிரிப்புச் சிரித்தார். "என்ன கல்வி அதிகாரிகளே; நீர் 23 வயது இளைஞர். புதிதாக வேலைக்கு வந்துள் ளீர். உம் வேலையை மட்டும் கவனியும். இந்த ஜமீனில் பள்ளி வராது, வரக்கூடாது. அப்படி வந்து இவர்கள் படித்துவிட்டால் நான் வீதியில் போகும்போது இடுப்பில் வேட்டிக்கு மேல் துண்டுகட்டி, கைகட்டி வாய்பொத்தி நிற்க மாட் டார்கள். சந்துக்குச் சந்து மண் தரையென்றும் பாராது சாஷ்டாங்கமாக என் காலில் விழ மாட்டார்கள். நீர் ஒரு நாள் வந்து பாரும். எவ்வளவு பேர் எனக்குக் காலில் விழுந்து தண்டனிடுகிறார்கள் என்று தெரியும். ஆனால் இவர்கள் படித்தால் நிமிர்ந்து விடுவார்கள். என் ஆட்சியில் அது நடக்காது" என்றார் இந்த மாபெரும் குறுநில மன்னர். அந்தக் காலத் திலேயே "பெயர்போன", ஜமீன்தார் இவர். கலா ரசிகர், நடனமணிகளின் தாளாளர். சங்கீதக் கனிகளின் ஆதரவாளர். ஆனால், அவர் ஜமீ னில் எல்லோரும் தற்குறிகளாக இருப்பதுவே அவரது மாபெரும் இலட்சியம்.

இந்த ஜமீன் இலட்சியங்களை, இலட்சாதி பதிகளின் இச்சைகளை, (பட்டிக்குப் பட்டி பள்ளி திறந்து) முறியடித்தவர் கர்மவீரர் காமராசர்தான். ஏழைப் பிள்ளைகட்கு இலவசக் கல்வி, இலவச மதிய உணவு முதலில் தந்தவரும் இவரே. இதுகூட இன்று நம்முள் பலருக்குத் தெரியாது. உலகின் மூத்த குடியாகிய தமிழனுக்கு ஞாபக மறதி மிக மிக அதிகம்.

நம் வாழ்க்கைப் படகு நன்கு திசை மாறாது ஓடக் கலங்கரை விளக்கம் கல்வி என்று ஆணித்தரமாகத் திருவள்ளுவர் முதல் நம் ஜமீன்தார் ஈராக இதை மெய்ப்பித்துக் காட்டி விட்டார்கள். கல்வி இல்லையா -கொத்தடிமைதான் - அன்று உண்மையான அறிவை அளிக்கும் கல்வியைக் கற்றவன் தமிழன்.

நியாயத்தைத் தவிர எதற்கும் வணங்காத தமிழன் புறநானூற்றுத் தமிழன். அவன் கற்ற கல்வியும் இதயமுள்ள இனிய கல்வி.

சரி. இன்றைய நிலை என்ன? ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் (UNDP) சமீபத்தில் நடத்திய உலக ஆய்வின்படி இந்தியா 160 நாடுகளில் மனித மேம்பாட்டு வளர்ச்சியில் 121ஆம் இடத்தில் உள்ளது - இது நம் ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகட்கும் தெரிய வேண்டியதொன்று. நமக்குள் ஒரு திருப்தி சில பேருக்கு. நம் சகோதர நாடு பாகிஸ்தான் 122ஆம் இடத்தில் நமக்குப் பின்னால் நிற்கிறது.

பர்மாகூட நமக்கு மேலே 111ஆவது இடத்தில் உள்ளது -

பங்களாதேஷ் 135ஆவது இடம்.

ஸ்ரீ லங்கா 76ஆவது இடம். சைனா 79ஆவது இடம்.

எப்படி இந்த இடங்களை நிதானிக்கிறார்கள்? பல காரணிகளை ஆய்ந்தபின்தான் முடிவெடுக்கிறார்கள். வாழ்க்கை வளம், ஆயுள் நீடிப்பு, முதியோர் கல்வி, ஆரம்பக் கல்வி நிலை, பெண் கல்வி நிலை, தனி நபர் வருமானம், குற்றங்கள் எண்ணிக்கை, ஆஸ்பத்திரி வசதிகள் இவையெல்லாம் சேர்ந்ததுதான் "மனித வள மேம்பாடு" (Human Resource Development) இதன்படி உலக வரிசை எண் கொடுக்கிறார்கள். மனித வள மேம்பாட்டிற்கென்று தனி அமைச்சு ஒன்றை மறைந்த அமரர் ராஜீவ் அவர்கள் அமைத்தார்கள். அப்படி அதில் பதவியேற்ற முதல் மனித வள அமைச்சர்தான் இன்றைய பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு.பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள்.

ஆனால், நம் இன்றையக் கல்விநிலை என்ன? மத்தியப் பல்கலைக் கழகங்கள், நடுவண் அரசின் செல்லப் பிள்ளைகள், அவற்றிற்குக் கூட பணமில்லாத நிலை. இனி புதுத் துறைகள் வேண்டாம். பழைய துறைகளைக்கூடக் களைய வேண்டும் என உத்தரவு. அதாவது "பழையன கழிதல் வேண்டும்", ஆனால் புதியன புகுதல் வேண்டாம், எப்படி?

நம்மால் நடத்தப் பணமில்லை என்று கண்ட அரசு, தனியார் துறையை ஊக்குவிக்கலாம் என்று அடித்துக் கூறுகிறது. சுயநிதி நிறுவனங்கள் என்றால் என்ன பொருள்? பண முதலைகளின் திறமையற்ற குழந்தைகளே (7 முதல் 10 இலட்சம் வரை கொடுக்கும் பக்குவம் கொண்டவரே) இனி டாக்டர், இன்சினியர் ஆக முடியும்.

இது நல்லதா, கெட்டதா என்று நான் சொல்ல வரவில்லை. ஏழைகள் இதில் புக முடியாது என்பதை மட்டும் நான் ஆணித்தரமாகக் கூறமுடியும்.

அண்மையில் ஆர்ட்புச்வால்டு (ART BUCHWALD) எனும் அமெரிக்க ஹாஸ்ய எழுத்தாளர் எழுதினார். "நான் ஒரு பல் டாக்டரிடம் போனேன். அத்தனை பல்லையும் பிடுங்கிவிட்டார். ஒரு கண் டாக்டரிடம் போனேன். இரண்டு கண்ணுக்கும் ஆபரேஷன் தேவை என்றார். சற்று உடல் தளர்வாக இருக்கிறது என்று ஒரு வைத்தியரிடம் சென்றேன். 7 நாள் என்னைக் குளு குளு அறையில் வைத்து எல்லாப் பரிசோதனைகளும் செய்து மாதம் ஒருமுறை எல்லாப் பரிசோதனைகளும் மீண்டும் மீண்டும் தேவை என்றார். எனக்கு ஆன செலவு பல்லாயிரக்கணக்கான டாலர்கள். அப்போதுதான் எனக்கு 'ஞானோதயம்' ஏற்பட்டது. இந்த



டாக்டர்களெல்லாம் (அமெரிக்க டாக்டர்கள், நம்மவர் அல்ல) வங்கியில் பெருங்கடன் வாங்கி, கடனை அடைக்க வேண்டியவர்கள். அவர்கள் கடனை நாம் அடைக்கிறோம்" என்று கூறி வெடிச் சிரிப்புச் சிரிக்கிறார் அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் புச்வால்டு அவர்கள்.


நம்ம ஊர் அப்பாவி கேட்கிறான், "சாமி 7 லட்சம், டாக்டருக்குப் படிக்குமுன்னே, அட்மிசன் பீஸ் என்றால் இலவசக் கல்வி என்றார்களே அது எங்கே போச்சு" என்று. பாவம் இவன் - கேட்கிறான். இவன் ஓட்டை நம்பித்தான் நாம் குடியாட்சி நடத்துகிறோம்.

இக்குடிமகனுக்கு நாட்டு நடப்புத் தெரியாது. பேப்பரும் படிக்கத் தெரியாது. கைநாட்டுப் பேர்வழி. இவனுக்கு யாரும் பதில் சொல்ல முடியாது. சொல்லவும் மாட்டார்கள். இவனது குழந்தைகள் இவன் போலவே இருந்து வாழ்ந்து மடியும். டாக்டர்களுக்கு, "பேஷண்டுகளாக" மாறும். இன்சினியர்கட்குக் கல்லுடைப்போராக மாறும்.

அண்மையில் கொசு ஒழிப்புப் பிரசாரத்துக்கு ஹரியானா பூராவும் சுவரொட்டி ஒட்டி இலட்சக் கணக்கில் பணம் செலவிட்டார்கள்.

இதுபற்றி நம் நகைச்சுவை அரசு குஷ்வந்த் சிங் ஒரு பேருண்மையைக் கூறுகிறார். "நல்ல அமர்க்களமான பிரசாரச் சுவரொட்டிகள். ஆனால், ஒரே ஒரு சிக்கல்தான். கொசுக்களுக்கும் அங்குள்ள மக்கட்கும் படிக்கவே தெரியாது!" எப்படி சிங்கின் முதல் தரமான நகைச்சுவை பாருங்கள்! கல்வி இல்லாவிடில் எந்தப் பிரசாரமும் எடுபடாது.

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தைப் பார்ப்போம். அங்கு ஒரு புதிய கல்விச் சட்டம் இயற்றி உள்ளனர். "காப்பியடிப்பதே கண்கண்ட தெய்வம்" எனப் பலப்பல ஆண்டுகளாக இருந்த நம்பிக்கையை முறியடிக்கக் காப்பியடிப்போரைக் கம்பி எண்ண வைக்கும் சட்டம் இது. இதுவரை 3000 மாணவர்கள் கம்பிக்குப் பின்னர் இருக்கின்றனர்.



நம்மைப்பற்றி முக்கியமான நிலை ஒன்றை யூனிசெப் நிறுவன உலகத் தலைவர் ஜேம்ஸ் கிரான்ட் அவர்கள் அண்மையில் இந்தியா வந்தபோது சுட்டிக் காட்டினார். என்ன அது பார்ப்போம். அதற்கு முன் பழைய வரலாற்றுக் குறிப்புகள் சில. காந்தியடிகள், இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றார். சிறு சிறு கிராமங்களில்கூடப் பள்ளிகள் திறந்தார் கர்ம வீரர் காமராசர். ஒரு மைலுக்குள் பள்ளி இல்லாத ஊரே இல்லை என்ற பெருமையைத் தமிழகம் அன்று பெற்றது.

யூனிசெப் நிறுவனத் தலைவர் இன்று என்ன கூறுகிறார்?

தமிழ்நாட்டின் தலைநகரில் பேசிய இவர் இந்து பத்திரிகையின் செய்திப்படி கூறியுள்ளது பின்வருமாறு : "தமிழகம் ஆரம்பக் கல்வியில் 100க்கு 96% பிள்ளைகளை ஆரம்ப நிலையிலேயே சேர்த்து, கேரளாவை (86%) மிஞ்சி நிற்கிறது. பாராட்டுகள். ஆனால் 5ஆவது வகுப்பு வருவதற்குள் இந்த 96 சதவிகிதம் 68 சதவிகிதமாகக் குறைந்துவிடுகிறது. ஆனால், கேரளாவிலோ அவை 86 சதவிகிதமும் அதற்கும் மேலாகவும் 90வரை (பள்ளி வயதுக்கு, அதிக வயதுள்ள, பிள்ளைகளும் சேர்வதால் கூடுகிறது சதவிகிதம்) இருக்கிறது. அதாவது கேரளாவில் சேர்ந்த பிள்ளைகள் முழுவதும் பள்ளியில் நின்று வள்ளுவன் வாக்கில் 'கல், நில்' என்று படிக்கிறார்கள். நம்ம ஊரிலோ 96 பேர் சேர்ந்து படிப்படியாக 5ஆவது வகுப்பில் 68 பேராகி, 10ஆவதில் 40 பேராகிறார்கள்.

இங்கு நாம் சத்துணவு போடுகிறோம். இலவசச் சட்டை துணி பல இடங்களில் உண்டு. இலவச ஸ்லேட் புத்தகம் - இவை எல்லாம் இருப்பினும் பிள்ளைகள் பள்ளியில் நிற்கா நிலையை உடனடியாக ஆராய வேண்டுகிறார் யூனிசெப் தலைவர்.

அது மட்டுமல்ல. இதில் பெண் கல்வி மிகவும் பின்தங்கி உள்ளது. அதிலும் கிராமத்தையும் நகரத்தையும் கணக்கெடுத்தால் கிராமப் பள்ளிகளில் கரும்பலகைகள் கூட வெறும் பலகைகளாக இருக்கின்றன. நூலகம் அநேகமாகக் கனவில்தான். விஞ்ஞானத்தில் நமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, ஆரம்பப் பள்ளிகளில் விஞ்ஞானக் கருவிகளே கிடையாது. மெஞ்ஞானிகளாக ஆசிரியப் பெருமக்கள் "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்று வேண்டுமானால் பாடிக் கொண்டிருக்கலாம்.


கிரிக்கெட் வீரர்கள், டென்னிஸ் வீராங்கனைகள், இந்திய ஆட்சிப் பணியில் உள்ள

(I.A.S.) பெரும்பாலோர் வருவது எல்லாம் நகர்ப் புறங்களில் இருந்துதான்.

Public Distribution System (PDS) என்னும் குறைந்த விலை மளிகைக் கடைகளைக் கூடப்பல மாநிலங் களில் நகர்ப்புறங்களில் மட்டுமே அரசு நடத்தி வருகிறது. கிராமங்களில் இது கிடையாது. இவ்வுண்மை பலருக்குத் தெரியாது.

டான் பாஸ்கோ போன்ற உயர், உயர், உயர் பள்ளியில் படித்த மாணவனுடன் கூடுவாஞ் சேரியில் உபகரணங்களே இல்லாத பள்ளியில் படித்த மாணவன் போட்டி இட வேண்டும். கருவிகளே இல்லாது, கல்விப் பெரும் பணி செய்யும் முனிவர்கள் கிராமத்து ஆசிரியர்கள் தாம். அதிலும் அரசுத்துறை ஆசிரியர்தாம் உண்மையிலேயே எழுத்தறிவிக்கும் இறை வர்கள். இவர்கள் கையை வலுப்படுத்தினா லன்றி யூனிசெப் தலைவர் சுட்டிக்காட்டியபடி RURAL URBAN IMBALANCE - கிராம நகர ஏற்றத் தாழ்வு பெருகி நம் நாகரிகத்தை நசுக்கி விடக் கூடும்.

"தேர்தல் சமயம் மட்டும் கிராமங்கள் முன்னணியில் நிற்கும்; பின்னர் ஐந்தாண்டுகள் அவை மறக்கப்படும். இது மாபெரும் தவறு" என்று நேருபிரானே அன்றே சுட்டினார்.



எனவே, எல்லோர் வாழ்க்கையும் மலர, கல்வி தான், கலங்கரை விளக்கம். ஆனால், அதில் இன்று ஒளியில்லை. கல்வி ஓடம் தத்தளிக் கிறது. கல்விக் கலங்கரை விளக்கத்தில் ஒளி யூட்டிக் கல்விக் கலத்தை நம் கல்வியாளரும் அரசும் கரையேற்றுவர் என்பது என் திண்ணம். இன்னும் இதற்குக் காலம் கடந்து விட வில்லை.

ஆனால், அதிகக் காலம்தான் இல்லை.

பார்த்துப் பார்த்து

சந்தக் கவிமாமணி தமிழழகன்

நாள்காட் டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் பொறுமை பெறும்.


ஆள்காட் டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் திறமை பெறும்.

பொய்காட் டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் தெளிவுபெறும்.

கைகாட்டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் நெளிவு பெறும்

வழிகாட்டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் வாழ்வு பெறும்.

விழிகாட் டியைப்
பார்த்துப் பார்த்து
என்மனம் யாவும் பெறும்.




பொன்னும் வெள்ளியும்

— கவிஞர் நெய்தற்கிழான்

பொன்னுக்கு வெள்ளிகால் மாற்றாம் எனக்கூறின்
மன்பதை கைகொட்டிச் சிரியாதோ? - பொன்வேய்ந்த
மன்றினுள் கூத்தாடும் கால்மாற்றை வெள்ளியம்
மன்றினுள் சென்றுமே காண்!

பொன்னுமே சூடேற வெள்ளியாய்ப் போமென்னின்
மன்பதை கைகொட்டிச் சிரியாதோ? - பொன்போலும்
காலைக் கதிர்நீட்டும் வெய்யோன் மதியத்தில்
பாலைப் பழிப்பதே காண்!

அமுதசுரபியின்
'முக்கனி'- திட்டம்



ஸ்ரீராம் டிரஸ்டில்
ரூ.3000/- டெபாஸிட் செய்து
6 வருடங்களில் இரட்டிப்பாக
ரூ.6000/- பெறுங்கள்.

4 வருடங்களாகத் தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் "அமுதசுரபி" தமிழ்ப் பெருமக்களால் விரும்பிப் படிக்கப்படும் தமிழ் மாதப் பத்திரிகை.

இயல், இசை, நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கமான ஸ்ரீராம் ட்ரஸ்ட், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய அமுதசுரபி'யை வெளியிடுகிறது.

அதன் தொடர்பாக வாசகப் பெருமக்களுக்கு இனிய பல ல்ல பலன்களை அளிக்கவே இந்த முக்கனித் திட்டம்.

முக்கனி போனஸ்:

. ஒவ்வொரு மாதமும் "அமுதசுரபி" மாத இதழ் சந்தா முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ அனுப்பப்படும்.

ஆறு வருடத்திற்கு, வருடா வருடம் "தீபாவளி மலர்" பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்கு (அன்பளிப்பாக) 8 கிராம் எடையுள்ள பூஜையில் வைப்பதற்கேற்ற வெள்ளிப் பதக்கம் அளிக்கப்படும்.

ங்கள் முதலீட்டிற்கு, ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் hriram Investments) முழு உத்திரவாதம் அளிக்கிறது.

சந்தா முதலீட்டுத் திட்டத்தில் (டெபாஸிட்) முதலீடு செய்பவர்களுக்கு :

1. தமிழ் அன்பர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளிக்கப்படும் டெபாஸிட் இது.
2. ரூ.3000/-ம் டெபாஸிட் தொகை ஆறு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் ரூ.6000/-ம் ஆகத் திருப்பித் தரப்படும்.
3. டெபாஸிட் தொகையை டிராப்ட்டாகவோ, செக்காகவோ "ஸ்ரீராம் டிரஸ்ட்" பெயருக்கு கிராஸ் செய்து Account Payee எனக் குறிப்பிட்டு எழுதப்படல் வேண்டும்.
4. டெபாஸிட்டுகளைத் தனியாகவோ கூட்டுக் கணக்காகவோ அளிக்கலாம். திரும்பப் பெறும்போது முதலில் குறிப்பிட்டுள்ள பெயருக்கோ அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கப்படுபவருக்கோ டெபாஸிட் தொகை அளிக்கப்படும்.
5. ஆறு ஆண்டு காலத்திற்குப் பிறகே டெபாஸிட் தொகை (இரட்டிப்பாக) திருப்பி அளிக்கப்படும்.

கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம்.

ஒரு டலின் காயம்

போட்டிக்கு
வந்த
சிறுகதை:5

உத்தமசோழன்



அசோகன் அலுவலகத்திற் நுழைந்ததுதான் தாமதம்... ஆதவன் துள்ளி எழுந்து ஓடிவந்தான். அசோகனின் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். "கங்ராஜுலேஷன்ஸ்" என்று ஆரவாரம் செய்தான்.

"எதுக்குடா...?" அசோகனின் குரலில் விவரம் தெரியாத பரபரப்பும் ஆவலும்.

"உனக்கு டிரான்ஸ்பர் - கப்பட்டினத்திற்கு... அதுக் க..."

"அடப்பாவி... நான் ான்ஸ்பர் ஆகறதிலே உனக் ன்னடா அவ்வளவு சந் ாஷம்?"

சந்தோஷமில்லே...எனக்குப் ாறாமை. ஏன்னா உன் ாட வருகையை எதிர் ர்த்து நாகப்பட்டினம் பீஸ்லே ஒரு அப்ஸரஸ் த்துக்கிட்டிருக்கா... அதை னைச்சு..."

"என்னடா பேத்தறே?"

"பேத்தலை... நிஜம். அந்த ப்ஸரஸ் ஒரு இருபத்திரண்டு து சொர்க்கம். பேர் அம்ச கா. அவளுக்கு உன்னை திரி கட்டை பிரம்மசாரி ளைக் கண்டா ரொம்பப் டக்கும். அதுக்குத்தான் ராஜுலேஷன்ஸ் சொன் ன்".

ஆதவனின் ஆர்ப்பாட்டத்தி ல் அசோகன் கலவரப் டுப் போனாலும், அதனை மீறி அம்சலேகா என்ற ந்த முகம் தெரியாத பெண் ன் எழிலார்ந்த வடிவத்தை னது மனம் தன் கற் னக்கேற்றவாறு தீட்டிப் ர்க்கத் தொடங்கியது.

மாலையில் அவனது வுக்கு உபசாரம் தெரி து. ஒரு தேநீர் விருந்து. னது அதிகாரியிடம் விடை ற்றபோது, "ஒரு நிமிஷம் சாக்... உட்கார்" என்று சிப் எடுத்துத் தேவையில் மல் முகத்தைத் துடைத்துக் ண்டவர் சொன்னார்.

என் லெவல்லே இதைச் சொல்லக் கூடாதுதான். இருந் ும் உம்மேலே இருக்கிற கறையினாலே சொல்ல ண்டியிருக்கு... ஏன்னா... நீ ம்ப நல்லவன். யாரையும் மா நம்பிடுவே... அதனால ..."

அசோகன் சற்றுக் குழம்பிப் போனான்.

"உன்னோட புது ஆபீஸ்லே அம்சலேகான்னு ஒரு பொண்ணு இருக்கா. பொதுவா அவளோட காரக்டர் சரியில் லேன்னு கேள்வி. நீ கல்யாணம் ஆகாத இள வயசுப் பையன். சட்டுன்னு வந்து ஒட்டிக்குவா. ஜாக்கிரதையா இருந்துக்கோ. அவ்வளவுதான்... போயிட்டு வா".

அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

ஒவ்வொருவரிடமும் தனித் தனியாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டான். கடைசி யாக அவனது பிரிவின் அதி காரி சரசுவதி. அவனைவிடப் பத்து வயது மூத்தவள்.

அவளிடமும் சொல்லிக் கொண்டான்.

"போயிட்டு வாப்பா... போற இடத்திலே ஜாக்கிரதையா நடந்துக்கோ. ஏன்னா அங்கே அம்சலேகான்னு ஒரு பொண்ணு இருக்கு. அவ நடத்தை அவ்வளவா சரியில் லேன்னு சொல்றாங்க. அத னாலே அவகிட்ட தேவையில் லாம பேச்சு வச்சுக்காதே. நீ உண்டு உன் வேலையுண்டுன்னு இருந்துக்க. அதான் நல்லது".

இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் சொல்லச் சொல்ல அசோகனுக்கு உடனடியாக அந்த அம்சலேகாவைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது.

புதிய அலுவலகத்தில் அதிகாரியிடம் ஜாயினிங் ரிப் போர்டைக் கொடுப்பதற்கு முன்பாகவே அசோகனின் கண்கள் அம்சலேகா என்ற அப்ஸரஸின் தரிசனத்திற் காகப் பரபரத்தன.

ஆனால் அலுவலகம் தொடங்கிப் பதினைந்து நிமி டங்களுக்கு மேலாகியும் அது போல எந்தப் பெண்ணும் வரவில்லை. சொல்லப் போனால் அந்த அலுவல கத்தில் பெண்களே இருப்ப தாகத் தெரியவில்லை.

யாரிடமாவது அந்தப் பெண் ணைப் பற்றிக் கேட்கலா மென்றால் அச்சமும் கூச்சமு மாக இருந்தது. 'என்ன இவன்... வந்ததும் வராததுமாக அவளை எதுக்காக விசாரிக்கிறான்?' என்று மற்றவர்கள் தன்னை அலட்சியமாகப் பார்க்க நேர்ந்தால்...?

வருகைப் பதிவேட்டில் இவன் பெயர் புதிதாக எழுதப் பட்டு அவனது கையொப்பத் திற்காக வந்தது. அதில் கையெழுத்திட்டவன் யதேச்சை யாகப் பார்ப்பவனைப்போல் அதில் அம்சலேகாவின் பெயர் இருக்கிறதா என்று பார்த்தான்.

இருந்தது. அவளது பெய ருக்கு நேரே அன்றைய தேதி யில் 'அ' என்று போட்டிருந்தது.

'அப்பாடா...! ஆள் இருக்கி றாள். ஒரு மணி நேரம் பர்மிஷன்தான் போட்டிருக்கி றாள். இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவாள்...'

மனம் நிம்மதி பெற்றது.

காலை பத்தரை மணி இருக்கும். ஒரு டீ குடித்தால் தேவலாம் போலிருந்தது. எழுந் திருந்த அசோகன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான்.

வாசலில் அவள்... அம்ச லேகா... யாரும் சொல்லாமலே அவள்தான் என்று அவனுக்குத் தெரிந்து போனது. ஆதவன் சொன்னது போலவே அசர வைக்கும் அழகான தோற்றத் தில்... ஒரே பார்வையில் எத்தனை பெரிய வைராக்கிய முள்ள ஆணையும் வீழ்த்திவிடும் பெரிய பெரிய கண்களுடன்...

அவள் உள்ளே நுழைந்ததும், அந்த அலுவலகத்திற்கே ஏதோ புதிய உற்சாகம் வந்துவிட்ட மாதிரி புதிய பிரகாசம்

வந்துவிட்ட மாதிரி அவனுக்குத் தோன்றியது.

அவள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டாள். தனது இருக்கைக்குச் சென்று அமர்ந்து கொண்டாள். தனது வேலைகளில் மூழ்கிப் போனாள்.

யாரிடமாவது ஒரு வார்த்தை பேச வேண்டுமே... அக்கம் பக்கம் திரும்பி ஒரு பார்வையாவது பார்க்க வேண்டுமே... ம்ஹூம்...

அசோகனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

மதிய உணவு இடைவேளை...

எல்லோரும் வெளியே போய்விட்டனர். அம்சலேகா மட்டும் எங்கும் போகவில்லை. பாத்ரூம் போய்விட்டுத் திரும்பி வந்து தனது இருக்கைக்குக் கீழே வைத்திருந்த டப்பாவை எடுத்துத் திறந்து வைத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினாள்.

அந்த அலுவலகத்தில் ஏதோ அவள் மட்டுமே தன்னந்தனியாக இருப்பதுபோல் இருந்தது அவள் செய்கை.

இத்தனைக்கும் அவளுக்கு எதிர்த்தாற்போல்தான் அசோகன் உட்கார்ந்திருந்தான். அந்த அலுவலகத்தின் புதிய வரவு வேறு. அவனை அவள் ஓரக் கண்ணால்கூடப் பார்க்கவில்லை.

"என்ன மேடம்...எதிர்த்தாற்போல் புதுசா வந்திருக்கேன். நான் சாப்பிடாம உக்காந்திருக்கேன். நீங்க மட்டும் சாப்பட நீங்க. ஒப்புக்காவது ஒரு வார்த்தை 'சாப்பிடறீங்களான்னு' கேக்க மாட்டேங்குறீங்களே!"

ஏதோ நிஷ்டையிலிருந்து கலைந்தவளைப் போல் அவனை ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வை அவன்

பாட்டு வந்தது

சுப. இராஜேந்திரன்



பாட்டு வந்தது - ஒரு
பாட்டு வந்தது.

கோலமயில் போல ஒரு
கோதையவள் சோலையிலே
கூடவரும் வேளையிலே பாட்டு வந்தது!

கோடைவெயில் காலமதில்
ஆடையிடை தென்றல் வந்து
சேதிசொல்லும் போதினிலே பாட்டு வந்தது!

வானமென்னும் மேடையிலே
ஆடவந்த பெண்ணிலவைக்
காணுகின்ற காலமெல்லாம் பாட்டு வந்தது!

பூவிரித்த வாசனையில்
பூத்துவந்த மோகமதில்
காமரூப மாடக்காதல் பாட்டு வந்தது!

கட்டஒரு துணியுமற்ற
செத்தபோதும் நாதியற்ற
வெற்றிலக்கம் காண சோகப் பாட்டு வந்தது!

அப்பனுக்குப் பாடம்சொன்ன
சுப்பனுக்கு வாழ்த்துப்பாடும்
ஆனந்தத்தில் பக்திமயப் பாட்டு வந்தது!

புத்திகெட்டுப் போனபின்னே
சட்டிசுட்டு ஞானம்வந்த
தத்துவங்க ளாகஞானப் பாட்டு வந்தது!

நாட்டுநலம் காத்திடவே
வேற்றொருவர் மேல்பொருத
ஆத்திரத்தில் வீரதீரப் பாட்டு வந்தது!

ஏப்ரல் 92ல்
அமுதசுரபி-கவிதை உறவு இணைந்து வழங்கிய
கவிதை இரவில் முதல் பரிசு பெற்ற கவிதை

டடலைத் துளைத்து, எலும்பை ம் துளைத்து உடலுக்குள் ங்கே இருக்கிறது என்று தெரியாத மனத்தைத் தேடும் பார்வையாக இருந்தது... அதில் உன்னிடம் எனக்கென்ன பச்சு' என்ற ஏராள அலட்சிய மும் தெரிந்தது.

அவ்வளவுதான். அடுத்த னொடி மௌனமாகச் சாப் டத் தொடங்கினாள். ஒரு ன்ன வார்த்தை கூட அவளிடமிருந்து வெளிப்பட ல்லை. அவ்வளவு ஏன்... அவனது கேள்வி ஒரு சின்ன லனத்தைக்கூட அவளில் ற்படுத்தியதாகத் தெரிய ல்லை.

அசோகன் ஒரேயடியாய் டிந்துபோனான்.

இரவு நெடு நேரம் அவ க்குத் தூக்கம் வரவில்லை. ன்று இரவு முழுதும் மஞ்சள் லையாக, இறுகிப் போன ன்ன உதடுகளுடன், பளிச் டும் பெரிய கண்களுடன் அவன் மனம் முழுக்கக் றுக்கும் நெடுக்குமாக மெத்து மத்தென்று நடந்து இம்சித்துக் கொண்டிருந்தாள் அம்சலேகா.

'விடக் கூடாது... இவளை இப்படியே விட்டுவிடக் டாது... எப்படியும் இவளுடன் பசியாக வேண்டும். நாளை பசிப் பார்ப்போம். நாளைக்கும் இல்லை என்றால் ாளை மறுநாள்... விடக் டாது...'

மனம் உறுதி செய்து கொண் தும் தூக்கம் அவனைப் பார்த்திக் கொள்ளத் தொடங் யது.

மறுநாள். அலுவலில் ழ்கிப் போயிருந்த அலு லகம். நேரம் வாய்க்கும் ாதெல்லாம் அவனது ார்வை அவனையும் மீறி ம்சவின் மீதே போய் டிந்தது.

மதிய உணவு நேரம். அனைவரும் வழக்கம்போல் வெளியே போய்விட்ட சமயம்.

அம்சுவும் வழக்கம்போல் தனது மேஜை மீதே டப்பாவைத் திறந்து வைத்து உண்ண ஆரம்பித்தாள்.

அசோகன் ஒரு முடிவுடன், தான் கொண்டு வந்திருந்த டப்பாவை எடுத்துக் கொண்டு அம்சலேகாவின் மேஜையில் வைத்துவிட்டு ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டு எதிரில் அமர்ந்தான்.

டப்பாவைப் பிரித்து, "எங்க அம்மா செஞ்ச மாங்கா ஊறுகாய்... ரொம்ப நல்லா இருக்கும் மேடம்... கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்க" என்று அவள் டப்பாவில் வைத்தான்.

அவள் இவனை உறுத்துப் பார்த்தாள். பார்வை நெருப் பைக் கக்கியது.

அவள் அந்த ஊறுகாயைத் தீண்டவில்லை. மௌனத்தா லேயே அவனை ஒதுக்கித் தள்ளினாள். 'உனது எந்தக் குறுக்கீடும் என்னை இம்மி யளவுகூடப் பாதிக்காது'என்பது போல நிச்சலனமாய் சாப் பிட்டுக்கொண்டிருந்தாள்.

அவன் செய்வதறியாது திகைத்துப் போனான். சிறிது நேரம் பொறுமை காத்தான். பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய்சொன்னான்.

"மேடம்... நீங்க எங்கிட்ட பேசற வரைக்கும் நான் சாப்பிடப் போறதேயில்லை..."

சட்டென்று அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். பார்வை முழுக்க ஆற்றாமை.

"இப்ப எதுக்கு எங்கிட்ட இப்படி வலிய வம்புக்கு வர்றீங்க?"

அவன் கடகடவென்று சிரித் தான்.

"வம்பா... அதுவும் உங்க கிட்டேயா... யாருக்கு மனசு வரும்?" கேட்டு விட்டு மீண்டும் கடகடவென்று சிரித்தான்.

"முதல்லே இப்படிச் சிரிக் கறதை நிறுத்துங்க... இப்படிச் சிரிக்கிற உங்களை... அதுவும் இந்த மாதிரி சிரிக்கிற ஆம்பிளைங்களைக் கண்டாலே எனக்குக் கட்டோடு பிடிக் காது... கெட்ட கோபம் வரும்".

அவன் நொடியில் புரிந்து கொண்டான். அவள் மனத்தில் ஏதோ ஒரு பலமான காயம் பட்டிருக்கிறது. அதுவும் ஏதோ ஒரு ஆணால்... அதன் வெளிப்பாடே இந்தக் கோபம்.

"என்ன மேடம் நீங்க... இவ்வளவு அழகான முகத்தை ஏன் இப்படி சிடுமூஞ்சியா மாத்தி வச்சுக்கிட்டிருக்கீங்க... ஆனா... உங்களைப் பத்தி நான் கேள்விப்பட்டதென்னமோ வேற மாதிரி..."

"என்ன மாதிரி... அந்த அம்சலேகா ஆம்பிளைங் களைக் கண்டா விடமாட்டா... சுத்தி வளைச்சுக்கிடுவா... அப்படித்தானே...!"

அவன் சுத்தமாய் அதிர்ந்து போனான். வார்த்தைகள் சட் டென்று மறந்து போயின.

"ச்சேச்சே... அப்படியெல் லாம் இல்லே... மேடம்..." அவன் தடுமாறினான்.

"ஏன் சார் பொய் சொல் றீங்க... எனக்குத் தெரியாதா என்னைப் பத்தி மத்தவங்க என்ன சொல்றாங்கன்னு. ஆனா உண்மை என்ன தெரி யுமோ... உங்களை மாதிரி இந்த ஆபீஸுக்கு வர்ற ஒவ்வொரு ஆணும் உங்களை மாதிரியே வலிய வந்து எங்கிட்டே பேச்சுக் கொடுக்க வேண்டியது. என் மனசை ஆழம் பாக்க வேண் டியது. அப்புறம் எனக்குப் பிடிக்கிற மாதிரி பேச வேண் டியது.... நடந்துக்க வேண் டியது... நானும் பெண்தானே... 'பரவாயில்லையே இவ்வளவு நல்லவராயிருக்காரே'ன்னு என்

வைரவரிக் கவிதைகள்

மனிதனின் நிலை

கசாப்புக் கடையில் ஆடு!
மிலிட்டரி ஹோட்டலில் கோழி!
சோதனைக் கூடத்தில் குரங்கு!
மதத்தின் வாயிலில் மனிதன்!

— சமுரா

மனித நேயம்

வீட்டுக்கு ஒரு
மரம் வளர்த்தது போதும்
வீட்டுக்கு வீடு
மனிதம் வளர்ப்போம்
முதலில்

— பால சாண்டில்யன்

வியர்வை வேதம்

சோம்பலின் இமைகளில்
இருட்டை எழுதுவோம்...
இனி எல்லா தினமும்
மே தினம் தான்.

— மானா. பாஸ்கரன்

இதயம்

மறு கன்னத்தை அல்ல
இதயத்தைக் காட்டு!
குறுவாள் ஏந்தியவனும்
உன் காலடியில்

— தாயு. செந்தில்

மனசும் கரைஞ்சு போயிட வேண்டியது. அப்புறம் அவங் களையே சுத்திச் சுத்தி வர வேண்டியது... கடைசியா... 'வர்றியா... குற்றாலம் வரைக்கும் போயிட்டு வரு வோம்'னு கேள்வி கேப்பான். 'ஓ.... தாராளமா... கல்யாணம் முடியட்டும்'னு பதில் சொன்ன பிறகு அவன் என் பக்கமே திரும்ப மாட்டான்".

அவள் மனப் புழுக்கத்தின் காரணம் அவனுக்குச் சரசர வென்று புரிய ஆரம்பித்தது.

"இன்னொருத்தன்... நீயில் லாம நானில்லேன்னு சதா சர்வ காலமும் ஒரே புலம்பல் மயம்... எந்தப் பக்கம் திரும்பினாலும் எதிரே நிற்பான். கடைசியிலே கல்யாணம் வரை பேச்சு வந்தாச்சு... ஆனா... 'வேலை பாக்குறதாலே சீர்வரிசைகள் குறையக் கூடாது... சீக்காளி அம்மா... படிச்சுக்கிட்டிருக்கிற தங்கச்சி இவங்களை உன் னோட அழைச்சுக்கிட்டு வரக் கூடாது'ன்னு நிபந்தனை போட் டான். 'ச்சீ போ... நீயெல்லாம் ஒரு மனுஷனா'ன்னு காறித் துப்பிட்டேன். ஆக என் மனசைத் தொடற மாதிரி நடந்து கிட்டவன்கிட்ட, 'இவனைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா சந்தோஷமா இருக்கலாம் போலிருக்கேன்னு நினைச்சு நான் கையிலே மாலையை எடுத்துக்கிட்டு அவன் கழுத் திலே போடத் தயாரா நிக்கி றப்ப... அவன் 'நீ நினைக்கிற மாதிரி நானொண்ணும் உன் னத மனுஷன் இல்லே'ன்னு காட்டிட்டுப் போயிடறான்".

அவள் சொல்லச் சொல்ல மனசு வலிக்க அவளையே வெறித்துப் பார்த்துக் கொண் டிருந்தான்.

"இதுலே ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? நான் ஒவ் வொருத்தனோட சுத்தின மாதிரி அவனுங்களும் என்னையே சுத்தி வந்தானுங்க... ஆனா கெட்ட பேரு என்னமோ எனக்கு மட்டும்தான். அவங்களுக் கில்லே... ஏன்னா அவனுங்க ஆம்பிளைங்க. ஆம்பிளைங் களுக்கு இதெல்லாம் சகஜம். அதிலே தப்பு ஒண்ணும் இல்லேன்னு எந்தப் பிரச் சனையும் இல்லாம அவனுங் களுக்கெல்லாம் கல்யாணமாகி செட்டில் ஆயிட்டானுங்க... ஆனா... எனக்கு மட்டும்..." மேற்கொண்டு பேச முடியா மல் அவள் குரல் உடைந்து போனது. கண்கள் தளும்பின.

இப்போது அவள் மனக் காயத்தின் முழுப் பரிமாணமும் அவனுக்கு நன்றாகவே புரிந்தது. கொஞ்ச நேரம் அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது என்று தெரியாமல் மௌனமாக இருந்தான். பிறகு சொன்னான்.

"வெரி சாரி மேடம். நான் அந்த மாதிரி ஆளில்லே. மனுஷத்தன்மை உள்ளவன்... உண்மையானவன்... அதை உங்க மனசு என்னைக்கு நிச் சயமா நம்புதோ அது வரைக் கும் உங்களுக்காகக் காத்திருப் பேன்..."

"அப்படியா...! எனக்கு நம்பிக்கையில்லே..." அவள் அவனைத் திரும்பிப் பார்க்கா மலே சொன்னாள்.

"எனக்கு நம்பிக்கை யிருக்கு..."

"பார்க்கலாம்" என்றாள் அவள். பிறகு எழுந்து பாத்ரூம் போய் முகம் கழுவி, தன் இடத்திற்கு மீண்டு, எதுவுமே நடக்காதது போல் வேலையில் மூழ்கி மௌனமானாள். ஃ



8 நால் மனிதர்கள்

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட்., நிறுவனமும், அமுதசுரபி வெளியீட்டாளர்கள் ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்

பாப்ரியா

“நேத்தைக்குப் போயிட்டு வந்த காரியத்தை நீங்க சொல்லப்படாதா என்ன? நீங்க சொல்லாட்டியும் சேதி எனக்குத் தெரியாமலா போயிடும்... எப்படியோ அண்ணன் மாத்தித் தம்பி, தம்பி மாத்தி அண்ணன் எல்லா ஜனங்க வாயிலியும் விழுந்துட்டே இருக்கிறீங்க... எனக்கென்னவோ இதெல்லாம் நல்லதுக்குன்னு படல. என்னவோ செய்யுங்க. எத்தனை நாள் தான் உங்களுக்குச் சொல்லிட்டிருக்க முடியும்...?”

முதல் நாள் பஞ்சாயத்து விஷயமாய்ப் போய்விட்டுத் தாமதமாக வந்ததும், சொல்லியபடி முதலாளிக்கு இந்தத் தடவையும் சரியாய்ச் சேலைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்காததும் ராஜம்மாவின் மனச் சங்கடத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது என்பதை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. காரண காரியங்களைச் சொல்லிவிட்டு, ராஜம்மா பட்டுச் சிட்டங்களை எழுந்து அடுக்கி வைக்கப் போன திசையைப் பார்த்தார். ஒன்றைமட்டும் நன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டார். எப்படியோ தனக்குப் பொறுப்புள்ள மனைவி கிடைத்திருக்கிறாள் என்று லேசாகச் சிரித்துக் கொண்டார்.

நேற்றைய தினம் கோயில் மடத்தில் தான் பேசிய கருத்துகளை மறுபடியும் நினைத்துப் பார்த்துக் கொண்டார். ஜனங்களிடம் தான் சொல்லிவைக்க வேண்டிய எதிர்கால விஷயங்களைச் சொல்லிவிட்டதால் மனத்திலிருந்து பாரம் இறக்கி வைக்கப்பட்டதாகவே நினைத்தார்.

இருந்தபோதிலும் - தான் இந்த ஊருக்கும், புரியாத் தன்மையால் தங்கள் வாழ்க்கையை ஏதோ ஒரு வழியில் இழந்துகொண்டிருக்கும் ஜனங்களுக்கும், கையில் கிடைத்ததே போதுமென்று நினைத்துக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கும், பேசிய கருத்துகள் நல்லதாகப்பட்டு அதை அவர்கள் கடைப்பிடித்தால்தான் கருத்துகள் குறிக்கோள் பூர்த்தியாகும் என்பது அவரைக் கொஞ்சம் அசர வைத்தது.

எதையும் காரியகாரணத்தோடு செய்வதில் பிறர் தன்மீது குற்றம் சொல்லிவிடக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதில் மிகவும் சுயமரியாதைக்காரர் என்பது ஊருக்குள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தன்னம்பிக்கையும் தர்மத்திற்கும் நியாயத்திற்கும் எப்போதும் அஞ்சாமல் தன் மனதிற்குப்பட்டதை உடனடியாகச் செய்வார் என்ற ஊரில் இருந்த பெயரும், வாழ்ந்து கெட்டுப்போன நிலையில் இருக்கும் தன் குடும்பச் சூழ்நிலையில் எந்தவித நெருக்கடிகள் வந்தபோதும், அநியாயங்களுக்கு ஆதரவாக எப்பேர்ப்பட்ட பணக்காரர்களாக இருந்தாலும் சரி, நியாயத்தின் பக்கமே இருந்து போராடக் கூடிய ஒரே ஆள் என்பதால்தான்..., ஊருக்குள் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய பணக்காரர்கள் இருந்தபோதிலும் 'பஞ்சாயத்துத் தலைவர்' என்ற பதவி இவரையே தேடி வந்தது.

எந்தவித வேலையுமில்லாமல், காரணங்கள் இல்லாமல், பணக்காரர்களின் வீட்டுப் பக்கமாய் போவதையே தவிர்த்து வந்தவர், ஏற்



கனவே தன் வாழ்ந்து கெட்டுப்போன நிலையை நினைத்தவர்...., இப்போதெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர் என்று ஆனபிறகு சுத்தமாகவே தவிர்த்து விட்டிருந்தார், தவிர்க்க முடியாமல் நல்லது கெட்டது காரியங்களுக்குப் போவதைத் தவிர, இதனால் ஒருவகையில் அவர் சுய மரியாதைக்கு மதிப்பும் - பணக்காரர்களுக்கு இவர் மீது கொஞ்சம் பயமும் இருக்கத்தான் செய்தது.

ஊரே இதுவரை இல்லாத அளவு அல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது ராஜப்பாவிற்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் இது மாதிரியான ஒரு தொழில் நெருக்கடி எப்போதும் ஏற்பட்டதில்லை என்பது மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

இந்த முறை ஏற்பட்டிருக்கும் தொழில் நெருக்கடியை 'மாஸ்டர் வீவர்கள்' ஜனங்களுக்கு எதிராய்ப் பயன்படுத்திக் கொண்டதை நினைக்கும்போது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

நெசவாளிகள் துயரங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை என்ற போதிலும், 'பஞ்சாயத்துத் தலைவர்' என்ற முறையில் தான் அணுக வேண்டியிருந்ததைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்.

அவரது நியாயமான கோரிக்கை மாஸ்டர் வீவர்களிடம் எடுபடாமல் போனதிற்குக் காரணம் பஞ்சாயத்துக் கூட்டத்தில் எப்போதும் நெசவாளிகள் பக்கமாய் சாதகமான தீர்ப்புச் சொன்னதுதான். ஆனால், நியாயங்கள் நெசவாளிகள் பக்கம் இருக்கும்போது முதலாளிகள் பக்கம் நியாயம் செய்து பேசுவது எப்படி என்பதுதான் ராஜப்பாவிற்குக் கேள்விக்குறி.

ஊர்ஜனங்கள் முக்கால்வாசி 'அரிசிப் பஞ்சம்' என்றும் 'தொழில் பஞ்சம்' என்றும் வெளியூர் போகும்போது. "ராஜப்பாவிற்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். நெசவாளிங்க, ஏழைங்க, பொழப்பத்தவங்க பக்கமா தான் எப்பவும் இருக்கணும்னு நம்பளையெல்லாம் மதிக்காமே அவரு பின்னாலே போனாங்கல்லே, இனி எந்தப் பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்டிப் பேசிப் பெரிய மனுஷனா இருக்கப் போறாரு?" என்று அவருக்கு வேண்டாத மாஸ்டர் வீவர்கள் ஜாடைமாடையாய்ப் பேசியதைக் கேட்டுக் கொண்டு கூடப் பதில் ஒன்றும் பேசாமலிருந்தார் ராஜப்பா. அப்போதைக்கு அவரால் செய்ய முடிந்தது அவ்வளவுதான்.

தெருவீதிகளில் நாய்களின் குரைச்சலும், வாய்க்கால் வரப்புப்பக்கமாய் 'சில்' வண்டுகளின் ரீங்காரமும் ராஜப்பாவின் சிந்தனைகளை அறுபட வைத்தன. எதை எதையோ சிந்தித்தாலும் எல்லாமே இடையிடையே சொல்லாமல் கொள்ளாமல் தங்கள் முகங்களை மறைப்பதும் வெளிப்படுவதுமாய் ஆகிக் கடைசியில், இதுவரை இருந்த ஊர்ப் பிரச்னைகளே ராஜப்பாவின் கண்முன், சிந்தனைகளின் முன் விசுவரூபம் எடுத்தன.

இந்த எல்லாச் சூழ்நிலைகளை விடவும் ஒரு சூழ்நிலை, முக்கியமாய் நெசவாளிகள் இருந்த பகுதிகளில் எல்லாம் சிறிது சிறிதாய் மறைய ஆரம்பித்து, ஏனோ தானோ என்று அபூர்வமாய் அங்கொன்றும் இங்கொன்றுமாக மட்டும் 'நாடா நாழி' தறிக் கட்டையில் மோதும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.


எப்படியும் சேலையை அறுத்தெடுத்தே ஆகவேண்டும் என்ற முனைப்பில் நடுநிசி ஆட்டம் விடும்வரைக்கும்கூடக் கண் விழித்து நெசவு செய்கின்ற மனிதர்கள் இருக்கும் வீதிகள் எல்லாம் இப்போது வெறிச்சோடிப் போய் அமைதியாய் இருந்தன.

தொழில் நெருக்கடி ஏற்பட்டதும் வேறு வழி யில்லாமல் ஜனங்கள் தொழில்தேடி வெவ்வேறு இடம் பார்த்துப்போகும்போது, அழாதகுறை யாகப் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் சொல்லி விட்டுப் போகும்போது பரிதாபமாய் இருந்த நிகழ்ச்சி, கடைசியில் ஊர் வீதிகளில், பொது வாக நெசவாளிகள் இருந்த வீதிகளில் இல்லா மலே போய்விட்ட சூழ்நிலையாய் அமைந் திருந்தது.

உடனடியாகத் தானும் தன் குடும்பமும் மற்றவர்களைப்போல வெளியூருக்குப் புறப் படுகின்ற சூழ்நிலை இல்லையென்றாலும், நிச்ச யம் தானும் என்றாவது ஒருநாள் இதே கதிக்கு ஆளாகித்தான் போக வேண்டும் என்ற எண் ணம் வந்தது. வாயில் ஊறிய உமிழ்நீர் கசப் பாக இருந்ததுபோல இருந்தாலும் சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டார். பிறந்து வளர்ந்து காலம் போட்ட மண்ணைவிட்டுப் போக, அதுவும் இப் படிப் பஞ்சக் கோலத்தில் போக நினைக்கவே ராஜப்பாவிற்கு மனம் பாரமானது.

9

ராஜப்பாவால் தன் ஊரின் நிலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தத்தளித்தார். நெசவாளியின் வாழ்க்கைக்குத் தலையெழுத்து இப்படித்தான். இதற்குமேல் மாற்றுவழியே இல்லையா என்று தனக்குள் கேள்விகள் கேட்டுக் கொண்டு அதற்குப் பதிலாய் சரியான தீர்வு கிடைக்காமல் அடிக்கடி சோர்ந்து போன துண்டு பலமுறை.





இந்தமுறை பட்டுநூல் இல்லாமல், போதிய அளவு நெய்வதற்குப் பட்டு இல்லாமல் மாஸ்டர் வீவர்கள் என்ன செய்வது இதற்கு என்று தங்களுக்குள் கூடிப் பேசிப்பேசி முடிவைத் தீர்மானம் செய்வதற்குள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வயிற்றுப் பசியால் பாதிக்கப்பட்டு அதன் எதிரொலியாய் குடிசைகள் இருந்தபகுதியில் குழந்தைகளின் கூக்குரல்களும், பெரியவர்களுக்கோ வெளியே சொன்னால் வெட்கக்கேடு வேதனை என்று துணியை நீரில் நனைத்து வயிற்றுக்குப்போட்டுக் கொண்டு படுத்துக் கொள்வதும் காணச் சகிக்க முடியாத நிலையில்தான் 'மாஸ்டர் வீவர்'களிடம் இப்படியே நிலைமை போனால், எல்லா ஜனங்களும் வெளியூரில் பிழைப்பைத் தேடிப் போய் ஆக வேண்டிய சூழ்நிலைகள் வந்தே தீரும், இதற்காகவாவது மனது வைத்து, அவரவர் தறிகளில் சேலை செய்து கொடுக்கும் நெசவாளிகளுக்கு ஏதாவது 'மாற்று உதவி செய்தே தீர வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தபோது தான் பசியின் களைப்பால் உறங்கிப் போயிருந்த குடிசைப்பகுதிகளில் முனகல்கள் கொஞ்சம் சுருதி சேர்ந்ததாக ஒலிக்க ஆரம்பித்தன.

ஒவ்வொரு மாஸ்டர் வீவரிடம் இத்தனை தறிக்கு இத்தனை ஆள் என்ற ரீதியில், குடும்பத்திலிருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையின் விகிதாசாரத்தில், 'கால்படி கம்பு அரைப்படி சோளம்' என்று விநியோகம் செய்த முதல்கட்டம் வெகுநாள் வரவில்லை, அப்படி வராது என்பதும் ராஜப்பாவிற்கு நன்றாகத் தெரிந்த போதிலும், தற்போதைக்கு 'சாகப் போகிறவனுக்குத் தண்ணீர்' என்ற மாதிரி இந்த அளவிலாவது கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று நினைத்தவருக்கு ஒரளவுக்காகவாவது இப்படி முடிந்தபோது மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டார்.

இருந்தபோதிலும், கிடைத்தது அவரவயிறு கால்வயிறுக்குப் போதும் என்ற எண்ணம்கூட ஊருக்குள் வெகு சீக்கிரமாகவே மாறி, மாஸ்டர் வீவர்களும் என்னதான் இனிமேல் செய்ய முடியும் என்ற நிலையை நெசவாளிகளே புரிந்துகொண்டு பிழைப்பைத் தேடி ஊர் ஜனங்கள் வெவ்வேறு திசைகளுக்கு நம்பிக்கையுடன் புறப்பட்டபோது, ராஜப்பா மிகவும் சோர்ந்து போனார்.

கண்களை ஊர் தெருக்கோடிவரை படர விட்டுப் பார்த்துக் கொண்டவர், ஜனங்களில் பெரும்பகுதி வயிற்றுப் பிழைப்பிற்காகத் தஞ்சாவூர்ப் பக்கம் பூதலூர்வரை போயிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட நேரத்தில் தானும் அங்கு ஒருமுறையாவது போய்வரவேண்டும் என்ற எண்ணத்திலிருந்தவர் மனம் கேட்காமல், வேறு தொழில் தெரியாதவங்க அங்கே போய் என்ன செய்யப் போகிறார்களோ என்று நினைத்து பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டார், வீட்டில் சொல்லி விட்டு.

திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கும் போதே அவரால் அங்கு தரையில் படுத்துக் கொண்டிருந்தவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. எல்லாம் சின்னாளப் பட்டியிலிருந்து வந்தவர்கள், பிழைப்பைத் தேடி. அவர்களில் சிலரை எழுப்பி விசாரிக்கும் போது அதிர்ந்துப் போனார் ராஜப்பா. 'டிக்கெட்' இல்லாமல் ஒசிப் பயணம் செய்ததற்காக ரயில்வே போலீஸ் அடிதடி செய்ததுமில்லாமல் கோபமாய் நடத்தியதும் பேசியதும் கேட்ட போது, குறுகிப் போனார். ஊர் ஜனங்களின் பிழைப்பு இவ்வளவு கீழ்த்தரமாய்ப் போய்விடும் என்று கனவிலும் அவர் நினைத்ததில்லை.

இதையெல்லாம் நினைத்து நினைத்து மனம் கஷ்டப்பட்டுக் கொண்டு கூடவே ஸ்டேஷனில் இருந்த ஒரு சிலரை, ஜனங்கள் இருந்த இடத்தை அடையாளம் காட்ட அழைத்துக் கொண்டு வந்த ராஜப்பா... உடன் வந்தவர்கள் நின்ற இடத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனார்...., அவர் கண்களை அவரால் நம்ப முடியவில்லை.

இது 'நடவு காலம்' என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது 'பூதலூர்' வாய்க்கால் வரப்பு. வரப்புக்குள் ஏகதேசமாய் நடவு செய்து கொண்டிருந்தவர்கள் சின்னாளபட்டி ஆண்களும் பெண்களும், அவர்கள் தான் குறைந்த ஊதியத்திற்கும் பக்கத்து ஊர்களில் அறுப்பெடுக்கும் போதெல்லாம், கூலியாகக் காசுக்குப் பதிலாகத் தானியத்தைக் கைநீட்டி வாங்கிக் கொள்கிறவர்கள் எதையும் எதிர்த்துப் பேசாமல் என்று சில இடங்களில் காது கொடுத்துக் கேட்க நேரும்போது அவமானத்தால் குறுகிப் போனார் ராஜப்பா.

நெசவுத் தொழிலில் இப்படி அடிக்கடி நெருக்கடி ஏற்படுவதும், ஒவ்வொரு முறையும் நெசவாளிகள் செத்துப்பிழைப்பதும் தெரிந்து போன விஷயம் என்றாலும், இந்தத் தொழிலின் இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையைத் தவிர்க்க எந்தவொரு 'மாஸ்டர் வீவராவது' வேறு ஏதாவது மாற்றுத் தொழில், ஒன்றை ஊருக்குள் அறிமுகப்படுத்த முன் வருகிறானா... என்று நினைக்கும்போது கோபம் கோபமாக வந்தது ராஜப்பாவுக்கு அவர்கள்மீது.

ராஜப்பா வரப்புப் பக்கம் போய் மரம் ஒன்றின் நிழலில் ஒதுங்கினார். அவருடன் வந்தவர்கள் வயலில் நடவு வேலை செய்து கொண்டிருந்தவர்களில் சிலபெயரைச் சத்தத்துடன் கூப்பிடவே, நடவு வேலை செய்துக் கொண்டிருந்த பெண்கள் தலை நிமிர்ந்தவர்கள் சங்கடப்பட்டுக் கொண்டார்கள்; ராஜப்பாவை அடையாளம் கண்டுவிட்டு, கைதட்டி எல்லோரையும் கூப்பிட்டார் வரப்புப் பக்கம் வரச் சொல்லி. ஒவ்வொருவராய் அவரைப் பார்த்து வரத் தொடங்கினார்கள். ஒருத்தருக்கொருத்தர் பேசத் தொடங்கிய சத்தம் எதிரொலித்து வைக்கோல் புல் கூடு கட்டிக் கொண்டிருந்த ஆண்களையும் திரும்பிப் பார்க்கச் செய்து என்னவோ ஏதோ என்று அவர்களையும் வரச் சொல்லியது.

எல்லா விஷயங்களுக்கும் ஊரில் பஞ்சாயத்துப் பேசி உடனுக்குடன் தீர்க்கும் அவரைச் சுற்றிக் கும்பல் இருந்தது. இப்போது ராஜப்பாவின் மௌனம் மட்டுமே அங்கு புரியாத புதிராய் இருந்தது அவர்களுக்கு. தங்களை அழைத்து விட்டுப் பேசாமலே நின்றுக் கொண்டிருக்கிறாரே என்று நினைத்து.

10

"என்னா மன்னி, இன்னிக்கு விசேஷந்தானா ராத்திரிக்கு... மௌகாய் மல்லியெல்லாம் ஜரூரா அரைக்கறாப்லே இருக்கு... வாசம் கமகமக்குது".

"என்னத்தைப் பெரிய விசேஷம் போ மன்னி... இன்னிக்கு ஏதோ 'கவுச்சி' எடுத்துட்டு வர்றேன்னு உங்க அலண்ணன் சொல்லிட்டுப் போனாரு. எதைக்கொண்டு வந்து போடப் போறாரோ தெரியலே... மொத்தத்திலே மொளகா மல்லி அரைச்சி வச்சிடறேன்... எப்போ மனுஷன் வர்றாரோ வரட்டும். அடிக்கடி எடுக்கற மாதிரியா இருக்கு பொழப்பு? சோத்துக்கே திண்டாட்டமா இருக்கு. கஞ்சித் தண்ணிகூட இனிமே இந்த ஊர்லே பாக்கறதுக்கு முடியாது போலிருக்கு. போன வாரம் ஊருக்குப் போயிட்டு வந்தாரு. ஏதோ அவரு அக்கா கொஞ்சம் பணம் கொடுத்திருக்காப்பலே இருக்கு - ஊர்லே இருக்கற கஷ்டத்தை நெனச்சி பாவம், தம்பியும் தம்பியோட பொண்டாட்டியும் குழந்தைங்களும் கஷ்டப்படறாங்களேன்னு. அதுவே இன்னிக்கு 'கவுச்சி' வாங்கிட்டு வர்றேன்னு போயிருக்காரு. வரட்டும். ஆக்கிப் போடலாம். எனக்குக்கூட நாக்கு சப்புன்னு போயிருச்சி. ஏதாச்சும் கொஞ்சம் காரம் சாரமா ஊத்தி சாப்பிட்டா வக்கணையா நல்லா இருக்கும்னு நெனைக்கிறேன்..."

"ஆமா இப்போ எதுக்கு ஊருபக்கம் போய் வந்தாரு?"

"இல்லே... தன்னோட உடன்பிறப்புதான் கொஞ்சம் வசதியா இருக்காங்களே... கடைகண்ணின்னு வச்சிட்டு. ஏதாச்சும் 'தலை மூட்டை' ஏவாரத்துக்கு உதவி செய்வாங்களான்னு கேட்டுப் பாக்கத்தான் போனாரு..."

"நல்ல விஷயந்தான்னு சொல்லு. உங்களுக்காவது இப்படி நெனச்சிப் பாக்கறதுக்காவது ஒரு அமைப்பு இருக்குது. எங்களுக்கு... ஹூம்... யாரு இருக்கா? முடிஞ்சா இதே தறிக்குழியிலே காலம் போறது. இல்லேன்னா விதியேன்னு இருக்க வேண்டியதுதா... அதுசரி. போன காரியம் என்ன ஆச்சி... அதைச் சொல்லு மன்னி முதல்லே".

"ஏதாச்சும் ஏற்பாடு செஞ்சித் தர்றாங்களாம். ஆனா இப்போதைக்குப் பணம் கொஞ்சம் மொடக்கமாம்... ஏதோ காடுகழனின்னு வாங்கிப் போட்டுட்டாங்களாம். கடுதாசு போடுறோம் பின்னாலேன்னு சொல்லியனுப்பிச்சிருக்கு அவரோட அக்கா. கையிலே புள்ளைங்களுக்குன்னு பலகாரம் துணிமணிங்க, எனக்குச் சேலை, அவருக்கு வேட்டி துண்டுன்னு கொடுத்தனுப்பிச்சிருக்காங்க. சரி, இப்ப நாம இருக்கற நெலமையிலே இதெல்லாம் கெடைச்சிருக்கறதுகூடப் பூர்வீகத்துலே செஞ்ச புண்ணியம்னு நெனைச்சிக்க வேண்டியதுதான்".

"ஆமா... அதைச் சொல்லு முதல்லே. ஊரு இப்ப இருக்கற இருப்புலே சொந்தக்காரங்க, கூடப் பெறந்த பெறப்புங்க, சிநேகிதங்கன்னு யாரு வீட்லேயாச்சும் போய் நெசவு பண்றவங்க கூழ கஞ்சியாச்சும் ஒருவேளைக்குக் குடிக்க முடியுதா? தப்பு யாரு மேலேயும் இல்லே மன்னி. இந்தத் தொழில் நெருக்கடி எப்போ இந்த ஊருக்குள்ளே காலெடுத்து

வைக்குதோ அப்போ எல்லாம் இந்த மாதிரி தான்".

பக்கத்து வீட்டுப் பெண்கள் இப்படி ஒருத்தருக்கொருத்தர் பேசிக் கொள்ளும் நிலைகூடக் கொஞ்ச நஞ்சமாய் இல்லாமல் போகுமளவிற்குப் பெண்களுக்கு அன்னியப்பட்டுப் போக ஆரம்பித்தது. ஊரின் நிலையைப் பொறுத்த விஷயமாகிப் போனது. புருஷனுடன் காலையில் பாவு போட்டு, பின்னால் புருஷன் நெசவு செய்யத் தறிக்குழியில் இறங்கிப் பின்பு அச்சும் நாலுமாய் கூடவே இருந்து, இடையிடையே அடுப்படி வேலைகளையும் பார்த்துக் கொண்டு, விளக்கு வைக்கும் நேரத்தில் வாசலில் தண்ணீர் தெளித்து நாலு புள்ளி அல்லது நட்சத்திரக் கோலம் ஒன்றைப் போட்டுவிட்டு, விளக்கு வைத்துவிட்டு மறுபடியும் ஏதாவது ராத்திரிக்கென்று அடுப்படிப் பக்கம் போக வேண்டிய பெண்களுக்கு, தன்னைப் பற்றியோ சிநேகிதிகள் பற்றியோ நெருங்கிய உறவுப்பெண்களிடையோ அக்கம் பக்கம் பெண்களிடையோ எதைப் பற்றியும் மனசாரப் பேசக்கூடிய சூழ்நிலைகள் பொதுவாக எப்போதுமே ஊர்ப் பெண்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமலிருந்தாலும், நல்லது கெட்டது நடக்கும் இடங்களில் மட்டும் சூழ்நிலை மாதிரி பேசிக் கொள்ள நேரம் அமைவதுண்டு வாகாய்.

தெரிஞ்ச சிநேகிதங்க கல்யாணம். புதுப் பொண்ணை மாசமாயிருந்து முழுகாமல் இருந்தால் குழந்தை பொறந்தவள்... சீர்... சடங்கு இப்படித்தான் பெண்களுக்காக அமைகின்ற பொழுதுகள், காய்கறி வாங்கும் சந்தையின் சந்திப்புகள் இது எல்லாவற்றையும் விடவிசேஷம் சாயங்கால வேளைகளில் இரண்டாவது ஆட்டம் 'டூரிங்' தியேட்டருக்குப் போகும்போது அகஸ்மாத்தாய் தெரிந்தவர்களைப் பார்த்து விட்டால் மனசிற்கு ஏற்படும் மகிழ்ச்சியான லயிப்பு.

இதெல்லாம் ஊருக்குள் இல்லாமலே போன மாதிரி வெறுமை... ஏகதேசத்திற்கு வேலை தேடி திசைக்கு ஒருவராக... ஜோடியாக... கூட்டமாகப் போன பின்னால், பெண்களின் அந்தரங்க வாழ்க்கையில் சிலேடைப் பேச்சுகள் கூட ஊருக்குள் கலகலப்பாக இல்லாமல் போய், முற்றிலும் சொல்லப் போனால் அவர்களின் அடையாளங்களாய் அடுப்படிகளில் ஏதாவது சாமான்களை உருட்டும் சத்தமும் பொதுக் கிணற்றின் பக்கம் குடிதண்ணீர் சேந்தும்போது மட்டுமே இருந்தன.

11

தஞ்சாவூருக்குப் போய் 'பூதலூர்' கிராமத்துப் பக்கம் தான் கண்ட விஷயங்களை மிச்சம் மீதியிருந்த ஜனங்களில் சில முக்கியஸ்தர்களைக் கூப்பிட்டு விவரம் சொன்னபோது கேட்ட எல்லோருக்கும் மனம் சங்கடமாகிப் போய்விட்டது.

விவசாயத்தில் ஆனா ஆவன்னா தெரியாத நம்பவூர் ஜனங்கள் மண்டை பிளக்கும் வேகாத வெயிலில் வேலை செய்வதைப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இனிமேல் எந்தக் காலத்திலும் இருக்கவே இருக்கக்கூடாது.

அதே சமயம் ஒரு சாண் வயிற்றுப் பிழைப்புக்காக ஜனங்க சுயமரியாதை நம்பிக்கை எல்லாவற்றையுமே இழந்துபோய் இன்னொரு ஜனத்திடம் கையேந்தி நிற்கும் கொடுமையும் ஏற்படக்கூடாது என்ற 'வாதம்'தான் பிரதானமாகப் பேசப்பட்டது, ராஜப்பாவிடம் பேசியவர்களால்.

குறிப்பாகப் பெண்கள் உள்ளூரில் கெண்டைக்கால் தெரியுமளவிற்குக்கூட இடுப்பில் சேலையைச் செருகிக் கொள்ளக் கூச்சப்படும் பெண்கள்... மற்ற ஜாதி ஆண்களின் முன்னால் அசிங்கப்படும் நிலைமை பற்றி ராஜப்பா பேசும்போது கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மௌனமாக இருக்க வேண்டிய நிலைதான் மறுபடியும் ஏற்பட்டது.

"இதோ பாருங்க... பஞ்சாயத்துத் தலைவர்னு இருக்கறதனாலேயும் அதோட கடமையிலே இதுவும் ஒண்ணுங்கற மாதிரியும், நாளைக்கு ஜனங்க ஊரு விட்டு ஊரு பொழைக்கப் போனாங்களே அவங்களைப் பத்தி ஏதாச்சும் போய் நேரில் பாத்துவிட்டு வந்து நெலமையைச் சொன்னான்னு... நாலு பேரு பேசறதுக்காக மட்டும் நான் 'பூதலூருக்குப் போயிட்டு வர்லே. மனுஷத் தன்மைன்னு ஒருத்தன்கிட்டே இருந்தா, அவன் பக்கமா பதவி பவிசுன்னு எதுவும் கூட வந்து அவனை அசட்டையாக இருக்கச் செய்ய முடியாது. நான் நேரிலே போய் பார்த்த காட்சியையெல்லாம் விவரமாகச் சொல்லணும்னா வார்த்தைங்களாலே முடியாது. நம்பவூரு ஜனங்களுக்கு இப்படியொரு சோதனைக்காலம் வந்திருக்கக் கூடாது... நெசம்மா சொல்றேன்".

"சரிங்கண்ணே நீங்க சொல்றது. எல்லாமே பொம்பளைங்க பத்திய விஷயமாவே இருக்குது. நம்ப ஆம்பளைங்களுக்கு என்ன சரியா வேலை இல்லையா?"

ராஜப்பாவின் பதில் தொடர்ந்தது. இது வரைக்கும் 'பூதலூர்' சூழ்நிலை விவரிக்கும் போது பெண்களைப் பற்றித்தான் அதிகம் பேசியிருக்கிறோம் என்ற நினைப்பே இப்படியொரு ஆள் கேட்ட பிறகே தன் தவறை உணர்ந்துக்கொண்டார்.

ஆனால் ஆண்களை மதிக்காமல் பெண்களை மட்டுமே பேசவேண்டிய சூழ்நிலையை அங்கு தான் அதிகமாய் பார்த்தது, மனசைப் பாதித்தது என்பதுதான் உண்மை.

'இப்படி ஒரு கேள்வி' வந்ததும் நியாயம் தான். கேள்விக்குப் பதிலாய் ஒரு பின்னணி பதிலை சொல்லுவதற்கும் இது நல்லநேரம் தான் என்று நினைத்துக் கொண்டார்.

"இல்லே ரங்கசாமி... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. என் கண்ணாலே பாத்த விஷயம் எல்லாமே பெண்களைப் பத்திதான். அவுங்க அங்கே படற பாட்டை நெனச்சா கண்ணுலே ரத்தம்தான் வருது. உழைக்கறாங்க. இல்லேன்னு சொல்லலே. இவுங்களுக்கெல் லாம் எப்படி இந்த அளவுக்குப் பொறுமை வந்திருச்சுன்னு எனக்கு இப்ப நெனச்சாலும் ஆச்சரியமா இருக்கு".

"தலைவரே... நீங்க 'பூதலூருக்குப் போன பின்னாலே சுகாதார நிலையத்திலே இருந்து சிலபேரு வீடு வீடா வந்து ஊசி போட்டாங்க, காரணம் என்னன்னு தெரியலை. ஆனா அவங்க சொன்னதை வச்சிப் பார்த்தா, 'காலரா' வரமாதிரி இருக்கு... சாத்தியம் இருக்கா என்ன?"

இதைக் கேட்டதும் ராஜப்பா நிலைகுலைந்து போனார் ஒருகணம். ஏதோ கேட்கக்கூடாத ஒன்றைக் கேட்டுவிட்டது போலப் பதறிப் போய்விட்டார். 'பூதலூரில்' வயித்துக்கடுப் பாலும் சீதபேதியாலும் செத்துப் போனவர் களைப் பற்றி நேரில் அவர்கள் சொல்லும் போதுகூட, ஏதோ சீதோஷ்ணநிலை உணவு சரியில்லாத காரணம் என்று நினைத்துக் கொண்டிருந்தவர், இப்போது தன் சகா சொன்னவுடன் பெரிதும் கலங்கிப் போய் விட்டார்.

"என்னப்பா சொல்றே... உண்மையாவா... 'காலரா'ன்னா சொன்னாங்க. நல்லா ஞாபகப் படுத்திப்பாரு. இது ஊரு ஜனங்களுக்கு அதுவும் பொம்பளைங்களுக்குத் தெரிஞ்சுது அவ்வளவு தான். ரெண்டே நாள்லே ஊரு காலியாயிரும். இது மட்டும் நிச்சயம்".

"உண்மைதான் தலைவரே, காலரா வரக் கூடிய சாத்யம் இருந்ததைக் கண்டு பிடிச்ச பின்னாலேதான் பாருங்க, வீதிக்கு வீதி ஜல தாரை இருக்கற முக்கெல்லாம்' 'ஜலதாரை களில் குழந்தைகளை மலஜலம் கழிக்க விடாதீர்கள்' என்று வசனமே எனாமல் போர்டுலே எழுதித் தொங்கவிட்டிருக்காங்க."

தன்னுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் ஒவ்வொருவராகக் கலைந்து போன பின்னாலும் எழுந்து போக மனமில்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தார் ராஜப்பா.

பூதலூருக்குப் போய் வந்ததிலிருந்தே மனசு ஒரு மாதிரியாகிப் போனதில்லாமல் தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு வரமறுத்ததை நன்றாகவே புரிந்துக் கொள்ள முடிந்தது.

ஊர் ஜனங்களைப் பற்றிய அக்கறையில் தன் குடும்பத்தின் விவகாரத்தைப் பற்றிச் சரிவரக் கவனிக்காமல் இருந்ததைத் தன் மனைவி குத்திக் காட்டும்போது உடனடியாக எதையும் செய்ய முடியாமலிருந்தார்.

கடந்து போன நிகழ்ச்சிகள் எல்லாம் முன்வந்து நிற்க ராஜப்பா அதே நினைப்புடன் வீட்டிற்குச் செல்லும் வீதிப்பக்கம் திரும்பினார். எதிரெதிரே சிநேகிதர்கள் எதிர்ப்படும்போது வழக்கமான ஊர்ப் பேச்சையும் ஜனங்கள் படும் பாட்டையும் பேசிப் பேசி... நிறுத்தி நிறுத்தி... நின்று போகும்போது அவருக்குச் சலிப்பு ஏற் பட்டுவிட்டது. சிறுமலைக் காற்று சில்லென்று வீசத் தொடங்கியிருந்தது. பேசிப் பேசி உஷ்ணமாகிப் போன தன் உடலுக்கு அந்தக் காற்று இதமாக இருப்பதை உணர்ந்துக் கொண்டார்.

மார்கழி மாத காலத்தில் வயதுப் பெண்கள் அரசமரப் பிள்ளையாரைச் சுற்றுவதற்குச் செம்பில் தண்ணீருடன் போகும்போது பேசப் படும் விஷயங்களும்,

கோயில்களில் அப்போது தரப்படும் 'பொங் கலை' வாங்குவதற்காகச் சிறிய பையன்கள் கூட்டம் கூட்டமாகச் சத்தம் போட்டுக் கொண்டு ஓடுவதால் ஏற்படும் சத்தங்களும்,

எப்படியும் கோழி கூப்பிடுமுன் எழும் தன்னை அதற்கு முன்னமே எழுப்பிவிட்ட காலத்தையெல்லாம் நினைத்துக் கொண்டார். இதையெல்லாம் அனுபவித்ததை விட்டுவிட்டு மனக்கண்முன் நடமாடும் பழைய வீதிகளை எல்லாம் விட்டுவிட்டு, காரைக்குடிக்குப் போய் ஆகவேண்டிய நிர்பந்தத்தைத் தந்த சூழ் நிலைகள் மீது இப்போது வெறுப்புப்பட ஆரம் பித்தார்.

இருந்தபோதிலும் அப்படி வெறுப்பு ஏற்படுவதைப் பெரிய தவறாக நினைத்துக் கொள்வதில் அர்த்தம் இல்லை என்பதை நினைத்துக் கொண்டார் ராஜப்பா. —தொடரும்